AstroVed


# சத்வித்யா

மாலை: 1 மலர்: 27

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

ஆன்மீக விஞ்ஞான இதழ்

இணையதளம் வாயிலாக மாதம் ஒரு முறை வெளிவரும்



## ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் சிறப்பு இதழ்

- ★ எல்லாக் காரியங்களிலும் வெற்றிபெற....
- ★ சொல்லின் செல்வன் அனுமன்
- ★ ஆலய வழிபாட்டு அறநெறி....
- ★ வருட ராசி பலன்கள் 2022

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்

மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com



போன ஜென்மத்தில் நாம் என்ன செய்து கொண்டிருந்தோம் என்ன நினைத்துக் கொண்டிருந்தோம் என்பதை அறிவதும் அறிவியல் தான! நினைவுத் திறன் அதிகமாக பரப்ப பட்டதாக இருந்தால் தான் நமது முற்பிறவி பற்றி அறிய முடியும். புத்தர், கடவுளே இல்லை என்றவர் ஆனால் முற்பிறவி என்பது உண்டு என நம்பினார். ஒரு விளக்கை ஏற்றினால், அதைக்கொண்டு அடுத்தது அதிலிருந்து இன்னொன்று என பல விளக்குகளை தொடர்ச்சியாக ஏற்ற முடியும். இப்படித்தான் கடந்து போன பிறவியின் நினைவுகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆகையால் தான் பல பிரச்சனைகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அடுத்து ஏற்ற முடியாமல் ஒரு விளக்கு அனைவதைப் போல் நமது மூளை முற்பிறவி நினைவுகளை எப்போது மறந்து, புதிய சிந்தனை பிறக்கிறதோ அப்போது தான் நமது பிரச்சனைகள் மறந்து புதிய வாழ்கை, புதிய பாதை பிறக்கும்.

Dr. Baskaran Pillai




## இனிய வாழ்த்துகள்!

அலைமீதில் தினம் உதிக்கும் செங்கதரும் புதிது!
அரவிந்தம் சுமந்தாடும் அரும்புகளும் புதிது!
இலைமீது எழில் கூட்டும் பனித்துளியும் புதிது!
இன்பமுடன் குயில்பாடும் கானமதும் புதிது!
நிலைமாற்றி உயிர்தாக்கும் கிருமிகளும் புதிது!
நிலம்காக்க உருவான மருத்துவமும் புதிது!
பொலிவோடு முகங்காட்டும் புத்தாண்டு சிறக்க
போற்றுகின்ற அஸ்ட்ரோவிட வாழ்த்துகளும் புதிதே!

அன்பு சத்வித்யா வாசகர்களே!
புத்தாண்டின் தொடக்கத்தில் இருக்கிறோம். இனிவரும் காலங்களாவது இனிமை பொங்க வேண்டும் என்று தமிழர் திருநாளாம் பொங்கலைக் கொண்டாடவிருக்கிறோம். மணற்பெரப்பெல்லாம் அனல்பறக்க காட்சி தந்த நதிகள் நம் மனப் பரப்பில் மணம் பரப்ப நுரைப்பூக்களைத் தாங்கி பொங்கி வழிவது கண்டு ஆனந்தமே! நமது நாட்டு வேளாண்பெருமக்கள் புது வெள்ளத்தால் பல பாதிப்புகளை சந்தித்திருந்தாலும் இனி முப்போகம் விளையும் என்கிற முழுமையான நம்பிக்கை கொண்டுள்ளனர்.

வீடுகள் தீவுகளாய் மாறி திண்டாடிய மக்கள், இனி தித்திக்கும் இன்பங்களைப் பெற தயாராகுங்கள், கொடிய தொற்று நோய்களுக்கு விடை கொடுத்து ஒற்றுமையாய் நாடுகாத்து, உன்னத வாழ்வை நோக்கி அடியெடுத்து வைப்போம்.

2022 எனும் புத்தாண்டு, வாசல் திறக்கட்டும்! அதில் வண்ணக் கோலமிட்டு தை மகள் கரங்களால் புதுப் பொங்கல் சமைத்திடுவோம்! புத்துணர்ச்சி பொங்க, புதுமைகளைப் போற்றி வாழ்வோம்!

வாழ்க! வளர்க!!

அன்புடன்
(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

# 2022 – ஜனவரி மாத காலண்டர்

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 30 | அமாவாசை 31 | அரசு விடுமுறை நாட்கள் 13, 14, 15 26 | | | | ஆங்கில புத்தாண்டு 1 |
| அமாவாசை 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 போகி பண்டிகை | 14 தை பொங்கல் | பிரதோஷம் 15 மாட்டுப்பொங்கல் |
| 16 | பவுர்ணமி 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 குடியரசு தினம் | 27 | ஏகாதசி 28 | பிரதோஷம் 29 |

**Astroved Homa Festival**

1 - Group Homa
2 - Hanuman Jayanti
7 - Wealth Booster Home
8 - Shasti
13 - Vaikunta Ekadasi /Makara Jyothi
15 - Pradosham, Pongal
17 - Satyanarayan Pooja
18 - Thai Poosam
23 - Panchami , Varahi
24 - Shasti
27 - Anuradha Nakshatra Shreem Brzee
31 - Thai Amavasya



# ஆன்மீகப் பொங்கல்

~ சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்.

மேகம் பொங்கினால் மாமழை! பால் பொங்கினால் வளமும் நலமும் சங்கமிக்கும்! ஆன்மீகப் பொங்கல் அனைவரது உள்ளங்களிலும் பொங்கினால் அனைத்து இல்லங்களும் அனைத்து நலன்களும் பெற்று இனிதே உயரும்!

வீட்டைத் தூய்மை செய்வதால் எல்லா நலன்களையும் பெறலாம். மனதை தூய்மை செய்வதை நாம் தலையாயக் கடமையாகக் கொள்ளவேண்டும். இறைவன் என்பது இல்லை என்று கூறுவோர் உண்டு. அவரவர் நம்பிக்கை சார்ந்த விஷயம் உண்டு என்பதும் நம்பிக்கை இல்லை என்பதும் நம்பிக்கை. நம்பிக்கையே இறைவன்.

பகலில் வானில் நட்சத்திரங்கள் தெரியவில்லை என்பதால் வானில் நட்சத்திரங்களே இல்லை என்று கூற முடியுமா?

காற்று கண்ணுக்குத் தெரிவதில்லை என்பதால் காற்றே இல்லை என்பது எவ்வளவு பெரிய அறிவீனம். அது போன்றது தான் கடவுள் இல்லை என்பது.

கடற்கரையிலிருந்து ஒரு மைல் தொலைவில் கப்பல் நிற்கிறது. கப்பல் வடிவம் மட்டுமே லேசாகத் தெரியும். கப்பலை முழுமையாக பார்க்க வேண்டுமென்றால் தொலைநோக்கு கண்ணாடி வழியாக பார்க்க வேண்டும். தொலைநோக்கு கண்ணாடி வழியாகப் பார்த்தால் கப்பலில் உள்ள ஆட்களின் கண் இமைகூட பார்க்கலாம். ஆனால் கப்பலையோ, கப்பலில் உள்ள பொருட்களையோ தொட முடியாது. கப்பல் இருக்கிறது என்பதை காண முடியும்.

கப்பலை நேராக பார்க்கும் போதுதான் கப்பலை முழுமையாகப் பார்த்து பரவசப்பட முடியும்.

தொலைநோக்குப் போன்றவர்கள்தான் ஆன்றோர்கள்! குருவின் மூலமாகத்தான் திருவருளைப் பெற இயலும்.

உயிர் இரக்கம் வேண்டும் என்றார் அருள்ஞான வள்ளலார். ஆன்மநேய ஒருமைப்பாடு என்பதன் உன்னத விளக்கம் தயவுநெறி! தயவு நெறியே மெய்ஞான உள்ளத்தின் உயரிய திறவுகோல்!

தரை காய்ந்தால் தண்ணீர் விட்டு கழுவலாம் மனம் காய்ந்தால் எதை விட்டு கழுவுவது.

மனமது செம்மையானால் மந்திரங்கள் தேவையில்லை.

மனம் சோர்வு அடையாமல் பார்த்துக்கொள்ள பக்தி நெறியே பாதுகாப்பானது. எதுவும் தோல்வி இல்லை எதுவும் வெற்றியில்லை. எதுவும் துன்பம் இல்லை எதுவும் இன்பம் இல்லை எதுவும் நிரந்தரம் இல்லை. எல்லாமே மாறும்! மாற்றம் என்பதே மானிட தத்துவம்.

மாறாத விஷயம் எது என்றால் எல்லாம் வல்ல இறைவன் மட்டுமே.

பிரபஞ்சம் கூட மாறலாம்.! இன்று நீராக இருப்பது நாளை நிலமாகலாம். இன்று நிலமாக இருப்பது நாளை நீராகலாம்!

இதுவன்றோ இறைவனது திருவிளையாடல்.

உலகம் பிறந்தது எதையோ உணர்த்துவதற்கு என்பதை சிந்திக்க வேண்டும்.

உலக உயிர்களில் ஒன்றான நாம் பரம்பொருளை வழிபட மறக்கலாமா?
எல்லாமே என்னால் முடியும் என்று மனிதன் அகங்காரத்துடன் கூறுவதை பார்க்கலாம். உலகிலேயே மனிதனால் முடியாத விஷயங்கள் ஏராளம் உள்ளன என்பதை ஏன் மனித மனம் ஏற்க மறுக்கிறது.

ஜனனம் நிகழ்வதும் மரணம் நிகழ்வதும் மனிதன் நிர்ணயிப்பது இல்லை என்பதே நிதர்சனம். இறைவனைக் காண முடியுமா? முடியும் மழலை சிரிப்பில்- பூத்துக்குலுங்கும் பூக்களில்- வெள்ளை மனம் கொண்ட குழந்தைகளின் தூய அன்பில்- பரிவோடு உபசரிக்கும் தாயன்பில் - ஓடிவந்து உதவும் நட்பில் - மனிதநேய மான்பில் இறைவனை தரிசிக்க முடியும்.
நான் நினைத்தால் உன்னை ஒழித்து விடுவேன் என்று திமிராக பேசியவர்கள் முகவரியே இல்லாமல் ஆனதை இந்த உலகம் கண்டு இருக்கிறது.



யாரையும் யாரும் ஒழித்துவிட முடியாது. ஆணவம் உள்ளவரை இறைவன் அருகில் சேர்ப்பது இல்லை. ஆணவக்கிழங்கை அகழ்ந்து எடுப்பவரே மெய்யன்பர்கள். ஆணவம், கன்மம் - மாயை ஒட்டி இருக்கும் வரை பசு, பதியை அடைய முடியாது. (பசு என்பது உயிர் பதி என்பது இறைவன்) தென்முக நம்பி தென்திசைக் கடவுள் ஸ்ரீ தட்சணாமூர்த்தி சின்முத்திரை காட்டி அருளுவதன் சிவமகா தத்துவமே இதுதான்! தன் வலது கரத்தில் உள்ள 3 விரல்கள் ஒட்டியும் கட்டை விரலும் ஆட்காட்டி விரலும் சேர்த்துக் காட்டி அருளுவது மனிதனை பண்படுத்தக் கூடியதாகும்.

முத்தேக சித்தி பெற்ற திருவருட்பிரகாச வள்ளலாருக்காக- கண்ணாடியில் முருகன் தோன்றவில்லையா? அண்ணியார் வடிவில் அம்பிகை வடிவுடை யம்மனே திருவமுது படைக்கவில்லையா? அருணகிரிநாதர் உயிரைக் காப்பாற்றி திருப்புகழ் பாட வைத்தவர் தானே முருகப்பெருமான்! ஐந்து வயது வரை ஊமையாக இருந்த குமரகுருபரரை பேச வைத்து - திருச்செந்தூர் பிள்ளைத் தமிழும், கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ், நீதிநெறி விளக்கம் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை குறம் என ஏராளமான தெய்வ பனுவல்களை பாட வைக்க வில்லையா பரமன். கல்லினுள் தேரைக்கும் படியளக்கும் இறைவன் நமக்கும் படியளக்க மாட்டானா என்ன? இறைவனை ஏற்றுக் கொள்வது என்பது பெரிதல்ல. இறைவன் நம்மை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இறைவனை அடைவது என்பதும் நல்ல விஷயம் தான். இறைவனே தேடி வருவது தான் உயர்ந்த விஷயம்.

ஒரு குழந்தைக்காக ஒரு அவதாரமே எடுத்தார் மகாவிஷ்ணு. அந்தக் குழந்தை பிரகலாதன்.

ஒரு அடியவனுக்காக ஒரு விதியையே மாற்றினார் சர்வேஸ்வரன். அந்த அடியவன் தான் மார்க்கண்டேயன்.

ஒரு எலிக்காக மகாபலி சக்கரவர்த்தியாக வரமருளினார் ஈசன்.

ஒரு குழந்தையின் பசிக்காக ஓடி வரவில்லையா உலகம்மை! அந்தக் குழந்தை ஞானம் பெற்று திருஞானசம்பந்தனாக திகழ வில்லையா?
எல்லாம் சிவன் செயல் என்று நம் செயல்களை செம்மையாக்கும். செய்யும் தொழிலே தெய்வம் நமது திறமை தான் செல்வம் என்று அர்ப்பணிப்புடன் உழைப்போம்.

பொழுது புலர்வதும், பொழுது முடிவதும் பகவான் செயல்! மகிழ்ச்சியுடன் வாழ்வோம் மற்றவர்களையும் மகிழ்ச்சிப் படுத்துவோம் போதும் என்ற மனமும், அனைவரிடமும் அன்புடன் பழகி, ஆதரவுடன் வாழ்வோம். அதிக ஆசைகளை மறந்து- ஒவ்வொரு நொடிப்பொழுதும் இறைவன் கொடுத்ததை நன்றிப் பெருக்குடன் - உற்சாகமுடன் உள்ளன்புடன் - உண்மையாக வாழ்வோம் அப்போது ஆன்மீக பொங்கல் நம் மனதிலும் பொங்கி வழியும் புதுவாழ்வு மலரும்.

# தன வரவு அதிகரிக்கவும்

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

**1.** புதன் கிழமை அன்று அதிகாலை ஒரு சிறிய பானையை எடுத்து நீரில் விழவைக்கவும் (போட்டு எடுக்கவும்). இந்த பரிகாரத்தை தொடர்ந்து ஆறு வாரங்கள் செய்துவர சுபிட்சம் கூடும், தொழில் வளர்ச்சி அடையும்.

**2.** தினமும் தொழில் செய்யும் இடத்தை கங்கா ஜலம் அல்லது பசுவின் கோமியம் அல்லது அவை இரண்டும் கலந்த கலவையை கொண்டு சுத்தம் செய்வது தனத்தை ஈர்க்கவும் தொழிலை மேம்படுத்தவும் மிகவும் ஆற்றல் மிகுந்த லால் கிதாப் பரிகாரம் ஆகும். அவ்வாறு சுத்தம் செய்து முடித்த பிறகு கீழே கொடுக்கப்பட்டுள்ள செய்முறைகளை பின்பற்ற வேண்டும்.

**3.** மஞ்சள் பொடியை கொண்டு புனிதமான ஸ்வஸ்திக் சின்னத்தை தரையில் வரைய வேண்டும்.


**4.** ஸ்வஸ்திக் சின்னத்தின் நடுவில் வெள்ளை கொண்டை கடலையையும் சிறிது வெல்லத்தையும் வைக்க வேண்டும்.

**5.** ஸ்வஸ்திக் சின்னத்தின் முன் அகல் விளக்கை சுத்தமான பசு நெய் கொண்டு ஏற்றி குபேரனை வழிபட்டு வந்தால் செல்வ செழிப்புடன் தொழில் வளமும் சிறக்கும்.

**6.** சிறிய வெல்லத்தை தொழில் செய்ய கிளம்பும் முன் சாப்பிட்டு கிளம்பினால் தொழில் முன்னேற்றம் அடையும்.

**7.** வீட்டில் மட்டும் அல்லாது தொழில் செய்யும் இடத்திலும் சிறிய மஹாலட்சுமி சிலையை வைத்து வழிபட்டு வர செல்வ வளம் பெருகி தொழில் வளம் கூடும்.

**8.** தொழில் செய்யும் இடத்தை எப்பொழுதும் ஒட்டடை, அழுக்கு, தூசு இல்லாமல் வைத்துக்கொள்ள வேண்டும். துருப்பிடித்த உலோகங்களை தொழில் செய்யும் இடத்திலிருந்து எடுத்துவிடவும். இவ்வாறு செய்வது குபேர கடாட்சத்தை பரவசெய்து செல்வம் மற்றும் தொழில் வளத்தை மேம்படுத்தும்.



# வள்ளிமலை சுவாமிகள்

~ ரா. பன்னீர் செல்வம்



நமது சித்தர்பூமி பகுதியில் நாம் காணவிருப்பது, வள்ளிமலை சுவாமிகள் என்னும் இறையருள் பெற்ற மகானின் வரலாறு!

சித்தர்கள் என்பார் யார்? கடிவாளமில்லாத குதிரையைப் போல - காட்டாற்று வெள்ளம்போல கட்டுப்பாடில்லாமல் திரியும் மனதை, தன் தவவலிமையால் கட்டியிழுத்து, மனம் போன போக்கில் செல்லாமல், தான் சொல்பவற்றை செய்யும் ஏவலாள் போல மனதை அடக்கியவர்களே மகான்கள் - சித்தர்கள் எனப் போற்றப்பட்ட இறை நிலைக்கு சமமாக உயர் நிலையை அடைந்திருக்கிறார்கள்.

இவர்களில் சிலர் குழந்தைப் பருவத்திலேயே தங்கள் மேதமையை வெளிப்படுத்தினார் அனைவராலும் வழங்கப் பெற்றனர். பலர்.... குடும்பம், இச்சை, துன்பம் என மானிட மாயையில் சிக்கி, இறுதியில் மகேசனை நினைத்து, மகான்களாய் உயர்ந்து மாண்பினை பெற்றிருக்கிறார்கள்.

ஆனால், இவர்கள் அனைவருமே கருவிலேயே திரு வாய்க்கப் பெற்றவர்கள் என்றால் அது மிகையாகாது!

முளைவிடும் போதே வாசம் தரும் துளசியாய் சிலரும் வளர்ந்து வானம் தொட்ட பின் பயன்தரும் தென்னையாய் பலரும் தங்கள் தபோ பலத்தால் தரணியில் இன்னமும் வாழ்ந்து இன்னருள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவரே, நமது வள்ளிமலை சுவாமிகள் ஆவார்.

காவிரியன்னை பவானியோடு கரம் சேர்க்கும் பவானி நகரத்திற்கு அருகில் உள்ள பூநாச்சி என்னும் அழகிய சிற்றூர். அவ்வூரில் ஜோதிடம் பார்ப்பதையே தனது தொழிலாக கொண்ட உத்தமர் சிதம்பரம் என்பவருக்கும் லட்சுமி அம்மையாருக்கும் மகவாய் வந்துதித்தவர் தான் அர்த்தநாரி என்பவர்.

இவரது பிறப்பின் பின்னே, பெருங்கதை ஒன்று உண்டு! சிதம்பரம்- லட்சுமி அம்மையார் தம்பதியருக்கு மணமாகி சில ஆண்டுகள் கடந்த பின்னரும் பிள்ளைச் செல்வம் இல்லாத பெரும் குறை இருந்து கொண்டே இருந்தது! சிதம்பரம் ஒரு ஜோதிடர்

அற்பர் முதல் அதிகாரம் படைத்தோர் வரை, தங்கள் எதிர்காலம் அறிய அவரை நாடி வந்தனர். ஆனால், தன் எதிர்காலம் இறைவன் கையில் உள்ளது என நம்பினார் சிதம்பரம். சொற்ப வருமானம்; அதிலும் சுகவாழ்வு தொடர்ந்தது.

ஒரு நாள்.... வழக்கம்போல யாருக்கோ ஜோதிடம் பார்க்க வெளியில் சென்றிருந்தார், சிதம்பரம். லட்சுமி அம்மாள் வீட்டில் வேலையாக இருந்தாள். அவரது மனமெல்லாம், “நம் வீட்டில் தொட்டில் ஆடும் பாக்கியத்தைகயுள் என்று அருள்வானோ?” என்ற எண்ணம் மேலோங்கி இருந்தது!

அப்போது... அந்த அம்மையாருக்கு பின்னால் ஏதோ அரவம் கேட்க, திரும்பிப்பார்த்த லட்சுமி அம்மையார் சட்டென்று அதிர்ந்தாள்! அங்கே ஒரு மிகப் பெரிய நாகம் படமெடுத்து ஆடிக் கொண்டிருந்தது!

அதனைக் கண்டு அஞ்சவில்லை லட்சுமி அம்மாள்! பயபக்தியோடு சூடம் ஏற்றி இறைவனை நினைத்து வணங்கினார்.

ஆசி வழங்குவது போல ஆடிய நாகம், அந்த நொடியே மறைந்து போனது. இறைவன் நமக்கு எதையோ உணர்த்தத் தான் நாக வடிவில் திருக்காட்சி தந்து உள்ளான் என்று எண்ணிய லட்சுமி அம்மாள், கணவர் சிதம்பரம் வந்தவுடன் நடந்ததை அவரிடம் விவரித்தாள்.

"திருச்செங்கோட்டில் உறையும் அந்த தெய்வத்தின் கருணை இது", என உணர்ந்த சிதம்பரம், தன் மனைவியோடு விரதம் மேற்கொண்டு, ஒரு நன்னாளில் திருச்செங்கோடு சென்று, அம்மையும் அப்பனும் ஓருருவாய் அருள்புரியும் அர்த்தநாரீஸ்வரரை வணங்கி, தங்கள் நெடுநாள் கோரிக்கையை இறைவன் செவிசாய்க்க, வேண்டிக்கொண்டு வீடு திரும்பினர்.

"பிள்ளை பிறந்தே ஆகவேண்டும் என்கிற வினைப்பயன் வேலை செய்தது! ஆம்! அடுத்த ஆண்டே இந்த தம்பதியினருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது!

"என்ன இருந்தாலும் இது அடுத்தவருக்கு சொந்தமானது தானே?! அதாவது, இன்னொரு வீட்டுக்கு போக வேண்டியவள் ஆயிற்றே! நமக்கென்று ஒரு வாரிசு வேண்டாமா?.. "இந்த எண்ணம் மேலோங்க, சிதம்பரம் இறைவனை நம்பிக்கையோடு வேண்டிக் கொண்டார்.

அதன் விளைவாய்.... 1870 ஆம் ஆண்டு குருவருள் நன்னாளில் லட்சுமி அம்மையார் ஓர் ஆண் மகவை ஈன்றெடுத்தாள். செங்கோட்டு இறைவனின் சீரிய கருணையால் பிறந்த அந்த ஆண் குழந்தைக்கு அந்த ஆண்டவன் பெயரையே அர்த்தநாரி என்று சூட்டி மகிழ்ந்தனர். ஆண்டவனின் அருளால் கருணை பொங்கும் கண்களோடு வளர்ந்தான், அர்த்தநாரி என்னும் அந்த இளந்தளிர்!

ஜாதகம் பார்ப்பதில் பெரிதும் சாதகமான வருமானம் ஏதும் இல்லை. பிள்ளை அர்த்தநாரியோ, பெற்றோர், தமக்கை என்ற நினைவு பெரிதும் இல்லாமல் எப்போதும் ஏகாந்தத்தையே விரும்பி, எங்கோ பார்த்தபடியே வளர்ந்தான்!

முதுமையும் வறுமையும் போட்டிப்போட்டு தாக்க, சிதம்பரம் இறைவனடி சேர்ந்தார்.

தகப்பனை இழந்த குடும்பத்தை தனயனே காக்க வேண்டிய நிர்பந்தம்! அதோடு, குடும்பத் தலைவன் என்ற பொறுப்பினை ஏற்கும்போது தலைவி என்று ஓர் துணை வேண்டுமல்லவா? பால வயதிலேயே அர்த்தநாரிக்கு திருமணம் செய்து வைத்தார், அன்னை!

தாய், தாரம், தமக்கை அடங்கிய குடும்பத்தினரை காக்க வேண்டிய ஒரே மகன் வாளாவிருத்தல் தகுமா?..

தகுந்த வேலை தேடி அலைகையில் மைசூர் அரண்மனையில் சமையல் வேலை தேடி வந்தது அர்த்தநாரியை!

குடும்பத்தாரோடு மைசூர் அரண்மனையில் சமையல் பணியாளராக பிழைப்பைத் தொடங்கினார். சிறிது காலம் நல்லபடியாக நடந்தது!

சிறிது காலத்திற்குப் பின், அர்த்தநாரி க்கு கடுமையான வயிற்றுவலி ஏற்பட்டது! என்ன வைத்தியம் செய்தும் அந்த வயிற்று வலி மட்டும் தீரவே இல்லை! தாள முடியாத வலி! தீர்வு என்ன?.. பலபேரை கேட்டதில்... ஒரு ஊழியர், பழநிமலை மீதில் பாஷாண வடிவில் இருக்கும் மலையாண்டியை நம்பி போனால், கொடிய வயிற்று வலி தீரும் என உபாயம் கூறினார்.

1908 ஆம் ஆண்டு மைசூரிலிருந்து பழனி மலைக்கு புறப்பட்டார், அர்த்தநாரி!

அனுதினமும் பழனி முருகனின் தரிசனம் கண்டு, தன் நோய் தீர வேண்டிக் கொண்டதோடு, ஆலயத்தை தூய்மை செய்வது, நீர் கொண்டு வருவது என பல வேலைகளையும் முழு மனதோடு செய்து, தன் நோய் தீர வேண்டிக் கொண்டார்.

நாளடைவில் படிப்படியாக நோயின் தீவிரம் கொஞ்சம் கொஞ்சமாக குறையத் தொடங்கிய வேளையில்....

பழனியாண்டவன் சன்னதியில் ஒரு நடன மங்கையின் நாட்டிய நிகழ்ச்சி நடந்தேறியது. திருப்புகழில் உள்ள பாடல்களுக்கு அந்தப் பெண் நடனமாடினாள். மங்கையின் அழகான அசைவு, மான் போன்ற துள்ளல் இதையெல்லாம் கண்ணாரக் கண்டாலும் அர்த்தநாரியின் மனம் அவற்றில் லயிக்கவில்லை. ஆனால், திருப்புகழின் பாடல் நடையும் தாளமும் பாடலின் பொருளும் அர்த்தநாரியின் உள்ளத்தில் அதிக ஈர்ப்பை ஏற்படுத்தியது.

முருகனின் புகழ்பாட இப்படி ஒரு பாடலா?.

இதைத் தவிர, வேறென்ன இறையின்பம் வேண்டும்? "இது என்ன பாடல்? எப்படி இதை

தெரிந்து கொள்வது?... அருகில் இருந்தவர்களிடம் ஆவலோடு விசாரித்தார்!

அதில் ஒருவர் மட்டும் இந்தப் பாடல் அருணகிரிநாதர் முருகப் பெருமானைப் புகழ்ந்து, அவருடைய பெருமைகள் குறித்து பாடியது, என விளக்கினார்!

“திருப்புகழை முழுமையாக கற்றுத் தேர வேண்டும்! “ என்ற எண்ணம் அவர் தம் உள்ளத்தை ஆட் கொண்டது! அதுவும் முருகன் அருளால்! ஆனால், இளமையின் பெரும்பகுதியை மைசூரிலேயே கழித்துவிட்ட அர்த்தநாரிக்கு, தமிழ் கற்கும் வாய்ப்பே அமையவில்லை, தான் தமிழ் கற்க, அதிலும் திருப்புகழை மனனம் செய்ய தகுந்த நபரைத் தேடி அலைந்தார்.

விரைவில் கைகூடியது! தகுந்த நபரிடம் திருப்புகழை கற்றுக்கொண்டார். தாள லயத்தோடு நன்றாக பாடவும் தொடங்கினார்.

வாயைத் திறந்தாலே திருப்புகழ் அருவி போல் கொட்டியது.

இவரது இயற்பெயரே மறைந்தது! அனைவரும் அர்த்தநாரியை திருப்புகழ் சாமி என்றே அழைத்தனர். மைசூர் சுவாமிகள் என்ற பெயர் மெல்ல மெல்ல மறைந்து திருப்புகழ் ஸ்வாமிகள் என்னும் பெயரே நிலைத்தது!

“சதா முருகனின் சிந்தனை! சஞ்சலம் போக்கிட திருப்புகழ்“, என நாட்கள் ஓடிய நிலையில், ஒரு நாள் இவரது கனவில் முருகன் தோன்றி, திருவண்ணாமலைக்கு போகும் படி பணித்தார். முருகனின் கட்டளையை சிரமேற்கொண்டு திருவண்ணாமலையை அடைந்த சுவாமிகள், ரமண மகரிஷியை தரிசனம் செய்து தீட்சை பெற நினைத்தார். ஆனால், அவர் எண்ணியது எளிதில் நிறைவேறாத காரணத்தால், தன்னுடைய ஆன்மீக பயணத்தை வடநாடு நோக்கி தொடர்ந்தார்.

இந்த நிலையில், மைசூரில் இருந்த தன் குடும்பத்தை மறந்தார். தன் சுகங்களைத் துறந்தார். பல காலம் பற்பல தலங்களை தரிசித்து இறையருள் பெற்றவர், பல ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் திருவண்ணாமலை வந்து சேர்ந்தார்.

இங்கு அவருக்குக் கிடைத்த உத்தரவுப்படி, வேலூருக்கு அருகில் உள்ள வள்ளி மலைக்கு சென்றார். முருகனின் புகழ் பாடும் திருப்புகழையே பாடி, பல ஆண்டுகள் வள்ளிமலை தலத்திலேயே தங்கியதால், வள்ளிமலை சுவாமிகள் என்று பக்தர்களால் வாஞ்சையோடு அழைக்கப்பட்டார்!

அவர் வள்ளிமலையில் இருந்த போது, வெள்ளையர் ஆட்சிக் காலம் நடந்தது! தனது பக்தர்களில் பெரும்பாலானோர் அரசு உத்தி யோகத்தில் இருப்பதை அறிந்தார். ஆங்கிலப் புத்தாண்டான ஜனவரி 1ஆம் தேதியன்று அந்த அரசு உத்தியோகஸ்தர்கள் தங்கள் அதிகாரியான வெள்ளைக்கார துரை மார்களை சந்தித்து ஆசி வாங்குவதை அறிந்து மிகவும் வேதனை அடைந்தார்.

நம் பண்பாடு, கலாச்சாரம் அனைத்தையும் மறந்து, எங்கிருந்தோ வந்த வெள்ளையரை வணங்குவதா?. என கவலைப்பட்ட வள்ளிமலை சுவாமிகள் இதற்கு மாற்றாக, கண்டுபிடித்த உபாயம்தான் படி உற்சவம்!

திருத்தணியில் உள்ள முருகப்பெருமானின் மலைக் கோவில் படிகளில் ஆண்டுதோறும் இந்த படி உற்சவம் நடைபெறுகிறது.

மொத்தம் 365 படிகள்! ஒவ்வொரு படிகளிலும் கற்பூரம் ஏற்றி, திருப்புகழ் பாடியவாறு டிசம்பர் 31 நள்ளிரவு நேரத்தில் படியேறி, புத்தாண்டு பிறக்கும் வேளையில் மலைமீது குடிகொண்டுள்ள முருகனை வணங்குவதே இந்த படி உற்சவம்!

1917 ம் ஆண்டு, வள்ளிமலை சுவாமிகள் இந்த படி உற்சவத்தை துவங்கியபோது வெகுசிலரே அவருடன் சென்றனர்.

வணங்குவோரை படிப்படியாய் வாழ்க்கையில் உயர்த்தும் முருகனின் திருத்தணி படி உற்சவம், இன்று லட்சக் கணக்கானோர் பங்கு கொள்ளும் அளவிற்கு சீரோடும் சிறப்போடும் நடைபெற்று வருகிறது.

இத்தனை சிறப்புக்குக் காரணமான வள்ளிமலை சுவாமிகள், வள்ளிமலையில் தான் தங்கி தவம் செய்த குகைக்கு அருகிலேயே 1950 ஆம் ஆண்டு நவம்பர் 22 ஆம் தேதி ஜீவ சமாதி அடைந்தார்.

மகிமைகள் பொருந்திய அந்த மகான் இன்றளவும் அங்கு வருகின்ற பக்தர்களின் இன்னல்களைப் போக்கி அருள் புரிந்து வருகிறார்.

# ஆலய வழிபாட்டு அறநெறி....

~ சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்.

ஆலயத்திற்குச் செல்லும் போது நன்றாக குளித்து திருநீறு - சந்தனம் - மஞ்சள்- குங்குமம், விபூதி ஏதாவது ஒன்றை நெற்றியில் இட்டு செல்ல வேண்டும். பகட்டை ஈசன் விரும்புவதில்லை.

ஆடம்பரமாக செல்வதும் தவறு. ஈரமான ஒற்றைத் துணியுடன் செல்வதும் தவறு.

கோயிலில் வழங்கப்பெறும் விபூதி பிரசாதத்தை பக்தி சிரத்தையுடன் வலது கரத்தில் பெற்று இடது கையில் கொட்டாமல் அப்படியே கயிலைநாதனை எண்ணியபடி நெற்றியில் இட வேண்டும். குங்குமத்தை மோதிர விரலால் தொட்டு இட வேண்டும்.

குடும்பத்துடன் கோயிலில் வலம் வரும்போது முதலில் கணவன் அடுத்து மனைவி பெண் பிள்ளைகள் என்று சுற்றி வர வேண்டும்.
கோயிலில் அதிரும்படி பேசவோ, சிரிக்கவோ கூடாது. வீண் கதைகள் மற்றும் அரட்டை அடிப்பதும் தவறு. மனம் அலைபாயக் கூடாது. கோயில் பிரகாரத்தை 3,5,7,9,11,13,17,19,21 என்று ஏதாவது ஒரு எண்ணிக்கையில் மனமுருக வலம் வரவேண்டும்.

கோயிலுக்குள் கொடிமரத்திற்கு முன்னால் மட்டுமே விழுந்து வணங்க வேண்டும் மற்ற இடங்களில் விழுந்து வணங்கக் கூடாது.
ஆண்கள் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்க வேண்டும். பெண்கள் மண்டியிட்டு வணங்க வேண்டும்.
கோயிலில் தெய்வத்தை தவிர மற்றவர்களை வணங்கக் கூடாது.

தலைப்பாகை வைத்துக் கொண்டோ, அங்க வஸ்திரம் அணிந்தபடியோ, வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டோ, செல்லக்கூடாது.
சன்னிதியை நேருக்கு நேராக நின்று வணங்காமல் பக்கவாட்டில் நின்று பணிந்து மனமுருகி வழிபட வேண்டும்.
சுவாமி சிலைகளை தொட்டு வழிபடுவது தவறு. சுவாமி பாடல்கள் போற்றிகள் பக்தியுடன் சொல்லலாம். இசையுடன் பாடி வழிபடலாம். கோயிலில் வேகம் இல்லாமல், நிதானமுடன் ஆத்மார்த்தமான பக்தியுடன் வழிபடுவது நலம். கோயில் கதவு மூடிய நிலையிலும் சன்னிதியில் திரைபோட்டு இருக்கும்போதும் வணங்குவது தவறு.

வருடத்திற்கு ஒருமுறையாவது குடும்பத்துடன் குலதெய்வ வழிபாடு மிக முக்கியமானதாகும். தெய்வப்படங்களுடன் முன்னோர் படத்தை வைப்பது தவறு. பிறர் ஏற்றிய தீபத்திலிருந்து தீபம் ஏற்றுக் கூடாது. தீப்பெட்டி எடுத்துச் செல்ல வேண்டும். வாயால் ஊதி அணைக்கக் கூடாது.
கோயில் வாசப்படி- வீட்டு வாசற்படி இரண்டையும் மிதிக்கக் கூடாது. மகாலட்சுமி வாசம் செய்வதால் மஞ்சள் குங்குமம் வைத்து பூக்களை வைத்து விளக்கேற்றி வழிபட நம் வாழ்க்கை சிறக்கும்.
எந்தக்காரணத்தை கொண்டும் இளம்பெண்கள் திருமணமான பெண்கள் முடியை சீவாமல் தலை விரித்துப் போட்டபடி வாசற்படியில் உட்காரக்கூடாது.

குளிக்காமல் பூஜை அறைக்கு செல்ல கூடாது. பூஜைப் பொருள்களை இடது கையால் தொடக்கூடாது. தெய்வங்களுக்கு படைக்கும் சமயங்களில் இடது கையை பயன்படுத்தவே கூடாது. தவிர்க்கவே முடியாத சமயங்களில் கடவுள் மேல் பாரத்தை போட்டு பயன்படுத்தலாம். கோயிலுக்கு செல்லும் போது ஏழைகளுக்கு உதவலாம். கோயிலுக்குச் சென்று தரிசித்துவிட்டு நமக்கு

அளிக்கப்படும் கோயில் பிரசாதத்தையோ, தனக்குரிய பொருள்களையோ பிறருக்கு கொடுக்க கூடாது.
(கோயிலை விட்டு வெளியே வரும்போது) மிக மிக முக்கியம்.
கோயிலில் செல் பேசுவதும், தூங்குவதும், எச்சில் துப்புவதும், சளி சிந்துவதும், சாப்பிட்டுவிட்டு குப்பைகளை அப்படியே வீசுவதும் தெய்வ சிலைகள், யோகிகள், தேவகணங்கள் பதிக்கப்பட்ட பிரகார தூண்களில், வெற்றிலை பாக்கு போட்டுவிட்டு சுண்ணாம்பை தடவுவதும், கைகளில் உள்ள எண்ணெய் பிசுக்கை துடைப்பதும், ஸ்வாமி சன்னிதிகளில் தனக்கு வேண்டியவர்கள் பெயர்கள், தன்னுடைய பெயர், ஊர் வந்த தேதி இவைகளை எழுதி கிறுக்குவதும் மகாபாவமான செயலாகும்.

கோவிலில் உழவாரப்பணி செய்த அப்பர் ஸ்வாமிகள். திருநாவுக்கரசர் என்று ஈசனால் அழைக்கப் பெற்றவர். சுவாமிகள் கோயில்கள் தோறும் உழவாரப்பணி செய்து கோயில்களை தூய்மை செய்தவர். அவர்தம் புகழ் பாடும் அடியவர்கள் இன்றுவரை கோயிலை தூய்மை செய்வதையே சிவப்பேறாக கருதி திருத்தொண்டு செய்யும் சிவநேயச் செல்வர்களை இன்றும் காணலாம்.

கணவன் மனைவியாக இருந்தாலும் சரி, காதலர்களாக இருந்தாலும் சரி கோயில்களில் கண்ணியம் மீறாமல், கட்டுப்பாட்டுடன் கோயில் புனிதத்தை உணர்ந்து சமூக பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை வலம்வரும் உயரிய திருக்கோயிலில் கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடுவது ஏழேழ் ஜென்மத்திற்கும் பாவம் தீராது. நமக்கு மட்டுமல்ல நம்முடைய சந்ததியே பெரிதும் பாதிக்கும். தெய்வக்குற்றம் ஏற்படாத வகையில் பயபக்தியுடன் வழிபட வேண்டும்.
கோயில்கள் கோபுரங்கள் கோடி புண்ணியம் தரவல்லது. நாம் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களைத் தொலைக்கவே ஆலய வழிபாடு செய்கின்றோம். அறிந்தே கோயிலில் பாவம் செய்பவர்களை பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை.

இலுப்பை எண்ணெய் இட்டு விளக்கேற்றினால் உடல் ஆரோக்கியம் தரும்.

வெள்ளை எருக்கு திரியிட்டால் பெருஞ் செல்வம் பெறலாம். பஞ்சுத்திரி நன்மை தரும். மஞ்சள் துணி திரி- சகல வியாதிகள் தீரும். சிகப்பு துணி திரி- திருமணத் தடை நீங்கும் சகல தோஷங்களும் நீங்கும். வெள்ளைத்துணி- நல்ல காரியம் தங்கு தடையின்றி நடைபெறும்.
அல்லிப்பூ- நாகலிங்க பூ பூவரசு பூ
மல்லிகை- அரளிப்பூ- ரோஜா தாமரைப்பூ-
போன்ற பூக்களால் சுவாமிக்கு வழிபடலாம்.
சந்தனம்- பால்- தயிர்- நெய்- இளநீர்
கஸ்தூரி- பன்னீர்- மஞ்சள் பொடி- நல்லெண்ணெய்- பஞ்சாமிர்தம், தேன் போன்ற பொருட்களால் ஸ்வாமிக்கு
அபிஷேகம் செய்வது மிகுந்த சிறப்பு.
சிவாலயங்களில் பிரதோஷ வேளைகளில் சிவபெருமானுக்கும் நந்திக்கும் இடையில் செல்லக் கூடாது.
சிவனுக்கு பிரியமான நந்திகேஸ்வரரை வழிபடுவது மிகுந்த சிறப்பு அதற்காக நந்திதேவரின் திருவடிகளைத் தொட்டு ரகசியம் சொல்வது போல செய்யவே கூடாது. கோயிலில் உள்ள எந்த தெய்வ மூர்த்திகளையும் தொடவே கூடாது என்பது ஐதீகம்.

பிரதோஷத்தின் போது ஓம் நமச்சிவாய என்று மனதிற்குள்ளேயே ஒருமுறை மனம் மொழி மெய் ஒன்றுபட உள்ளம் உருக உச்சரித்தாலே போதும் எத்தனையோ யுகங்கள் தவம் செய்த மகா



புண்ணியம் வந்தடையும். பிரதோஷத்திற்கு மலர்கள் - அபிஷேகப் பொருள்கள்- பிரசாதத்திற்கு தேவையான பொருள்கள் இப்படி ஏதாவது பக்தி சிரத்தையுடன் செய்து வந்தால் நம் வேண்டுதல்கள் யாவும் நிறைவேறும்.

இராகு காலங்களில், திருமணத்தடைகள் நீங்கிட செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் எலுமிச்சை பழத்தை இரு துண்டாக வெட்டி- அதன் சாற்றை துர்க்கை பாதகமலங்களில் விட்டு- அதில் அகல் விளக்கு போன்று செய்து நெய் ஊற்றி பஞ்சு திரியிட்டு தீபம் ஏற்றி வழிபட்டால் எந்த தோஷமும் நீங்கி மனதிற்கு பிடித்த மணவாழ்க்கை கிடைக்கும்.

கோடீஸ்வர மகாயோகம் பெற்று வாழ்வில் உயரவும், வறுமை- கடன் தொல்லை அறவே நீங்க "ஓம் ஸ்ரீ சொர்ண ஆகார்ஷன பைரவரே போற்றி போற்றி" என்று108 முறை எழுதலாம் உச்சரிக்கலாம். தொடர்ந்து செய்ய வேண்டும் அனைத்து நலன்களும் பெற அபிராமி அந்தாதியை உள்ளம் உருக பாடி வழிபடலாம்.

சகல சௌபாக்கியங்களும் பெற்று பெருவாழ்வு ராஜ யோகம் பெற -11 வெற்றிலையை பூ கட்டுவது போன்று கட்டி- ஸ்ரீ ஆஞ்சநேயரை உள்ளம் உருக வழிபட்டு வெற்றிலைமாலை மீது மஞ்சள் குங்குமம் வைத்து ஸ்ரீஆஞ்சநேயர் திருவடியில் வைத்து வழிபட்டால் நாம் நினைத்தது நடக்கும், நாம் நினைக்காத நல்ல விஷயங்களும் நடைபெறும்.

ஆதரவற்ற குழந்தைகளுக்கு வேண்டிய உதவிகள் செய்வதும்- முதியவர்களுக்கு வயிறார உணவும் உடுத்த உடையும் கொடுத்து வந்தால் வாழ்வில் எந்த துன்பம் வந்தாலும் அது பகலவனை கண்ட பனி போல் நீங்கி விடும்.



# அனைத்தையும் அருளும் அன்னை அபிராமி!

~ குடந்தை நாராயணி

"கரிய மேகம் போன்ற தேன்குழல்களில் நறுமணம் தரும் புஷ்பங்களை சூடிய தேவியின் கடைக்கண்களில் பெருகும் அருளால் இறைவனின் அடியார்கள், அளப்பற்ற செல்வமும், நல்ல கல்வியறிவும், எவ்வித கஷ்டங்களையும் எதிர்கொள்ள தளர்வற்ற மனமும், தெய்வீக வடிவும், வஞ்சனை செய்யாத உறவுகளும், இன்னும் எவையெல்லாம் நல்லவைகளோ அந்த அத்தனை பேறுகளையும் அடைவார்கள்"

இப்படி நமக்கு எடுத்துக் காட்டி அருளுவார், அன்னை அபிராமியின் தீவிர பக்தரான மகான் அபிராம பட்டர்!

இந்தப் பொருளை அடக்கிய அபிராமி அந்தாதி நூலில் இடம்பெற்ற 69ம் பாடல் எப்படி அமையும்.
"தனம் தரும், கல்வி தரும், ஒரு நாளும் தளர்வு அறியா மனம் தரும், தெய்வ வடிவும் தரும், நெஞ்சில் வஞ்சமில்லா இனம் தரும், நல்லன எல்லாம் தரும், அன்பர் என்பவர்க்கே கனம் தரும் பூங்குழலாள், அபிராமி கடைக்கண்களே" என்று.

ஒவ்வொரு யுகத்திலும் பகவான் பல அவதாரங்களை எடுத்து அந்தந்த யுகத்தில் தர்மத்தை நிலைநாட்டி மக்களை நல்வழிப்படுத்தி அரக்க குணம் கொண்டோரை அழித்து பின்பு அவர்களை கரை சேர்த்த பல சம்பவங்கள் உண்டு.

இறைவன் அவதாரம் செய்யாத காலங்களில் பூலோகத்தில் தர்மத்தை நிலைநாட்ட மகான்களை தன் பிரதிநிதியாக அவதாரம் புரிய வைக்கிறார். ஈசுவரன் அல்லது ஈஸ்வரி அந்த மகான்களின் இஷ்ட தெய்வங்களாகப் பரிணமித்து, சாதாரண மனிதர்களாக தோன்றும் அத்தகைய மகான்களை புற உலகினர் காணும்படி செய்யும் தெய்வம், அவர்கள் மூலம் மக்களுக்கு நல் உபதேசம் செய்விக்கிறது இந்த பாக்கியம் பெற்றவர்களில் ஒரு மகானாக திகழ்கிறார் அபிராம பட்டர்!

சுப்ரமணியர் என்ற இயற்பெயர் கொண்ட அபிராமி பட்டர், சோழ நாட்டின் தென் கரையிலுள்ள திருக்கடவூர் என்ற திருத்தலத்தில் வாழ்ந்து, அங்குள்ள திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அன்னை அபிராமியை தன் இஷ்ட தெய்வமாக பாவித்து தவறாமல் தேவியை பூஜித்து சதா அவள் திருநாமத்தை உச்சரித்துக் கொண்டும் இருக்கும் பழக்கம் கொண்டவர் அப்படிப்பட்ட தீவிர தேவி பக்தர் அவர்!
அன்னை, அபிராமி பட்டரின் அபரிமித பக்தியை மெச்சி அவருக்கு ஜோதிடக் கலையில் சிறக்கும் வல்லமையைப் வழங்கியிருந்தாள். அபிராமியின் சன்னதியில் நின்று அவளுடைய திருநாமங்களை கண்ணீர் மல்க தினசரி அவர் உச்சரிக்கையில் பக்தியின் உன்மத்த நிலையில் தான் காணப்படுவார் பட்டர் பிரான்.



அன்றொரு நாள், தஞ்சை மன்னர் சரபோஜி இறை தரிசனம் பெற திருக்கடவூர் சிவாலயத்திற்கு வந்திருந்தார். அதேசமயம் அபிராமிபட்டர் தேவி

அபிராமி சன்னதியில் தன் கண்களை மூடியவாறு, இருந்த சூழ்நிலை மறந்து, தன்னையும் இழந்த நிலையில் மிக உருக்கத்துடன் தேவி உபாசனையை செய்து கொண்டிருந்தார்.

பல சன்னதிகளை கடந்து சரபோஜி அபிராமியின் தரிசனம் பெற வந்த போது அவரைக் கண்டு அங்குள்ள அர்ச்சகர்களும், பல பக்தர்களும் மிக மரியாதையுடன் அரசரை வணங்கி வரவேற்றனர், உன்மத்த பக்தி நிலையில் அப்போது லயித்துக் கிடந்த அபிராமி பட்டர், சரபோஜி வந்ததை உணரவில்லை. இதனைக் கண்டு, சற்று சினம் கொண்டு விட்ட மன்னர் அங்கிருந்தவர்களில் ஒருவரிடம் "யார் இவர்" எனக் கேட்க, அவர், "இவர் ஜோதிடத்தில் நிபுணர் என்று பதிலளித்தார்.

அதற்குள் தன் நிலைக்கு ஓரளவுக்கு திரும்பி விட்ட அபிராமிபட்டர் மன்னருக்கு தன் வணக்கத்தைக் கூறினார். பட்டரின் ஜோதிடத் திறமையை சோதிக்க விரும்பிய மன்னர் பட்டரிடம் "இன்று என்ன திதி" என வினவினார். அந்நேரத்திலும் அபிராமி அம்மனின் நினைவிலேயே இருந்து கொண்டிருந்த பட்டர் சட்டை "இன்று பௌர்ணமி திதி ஆகும்!" என்று பவ்யமாக சொன்னார். ஆனால் அன்று அமாவாசை திதி தினம்! இந்த பதிலால் சரபோஜி, அதிருப்தி மணமுடன் அச்சன்னதியிலிருந்து வேகமாக கிளம்பி விட்டார்.

கொஞ்ச நேரம் கடந்த பிறகு, தனது இயல்பான நிலைக்கு வந்து விட்ட பட்டர் "ஐயோ, மன்னரிடம் திதியை முற்றிலும் மாற்றி கூறி விட்டோமே" என மனம் வருந்தினார். இத்தவற்றுக்கு உடனே பிராயச்சித்தம் செய்ய வேண்டுமென முடிவெடுத்து விட்டார் அடுத்தடுத்த ஏற்பாடுகளைத் தொடங்கி விட்டார்.

அந்த ஆலயத்தின் திறந்தவெளிப் பகுதியில், பட்டர் தீ மூட்டி, அதன்மேல் கயிறுகளால் உருவான பிரி கட்டி, அதில் தொங்கியவாறு ஒவ்வொரு அம்மன் அந்தாதியை இயற்றி, ஒவ்வொரு பாட்டிற்கும் ஒவ்வொரு கயிறாக பிரித்துக் கொண்டே வந்தார். இந்நிகழ்ச்சியை அச்சமுடன் கண்டு கொண்டிருந்த பல பக்தர்கள் மனம் பதைத்துப் போனார்கள். எக்கணத்திலும் அபிராமிபட்டர் தீயில் விழுந்து பொசுங்கி விடும் அபாயம் இருந்ததே காரணம்.

அபிராமி பட்டர் அப்பொழுதே அங்கேயே இயற்றி ஒவ்வொரு அந்தாதியையும் பாடி வர, அதனைக்கேட்டவர்கள் பரவச நிலையை அடைந்து விட்டனர்! இப்படி 69 வது அந்தாதியைப் பாடி 69ம் கயிற்றைப் பிரித்து பட்டர் அடுத்து 70 ம் பாடலை தொடங்கும் முன்பே அபிராமி பட்டரின் பக்தியை மெச்சி,

உடனே அவருக்குத் தன் திருக்காட்சியை அன்னை அபிராமி அருளினார்.

அன்னையின் கிடைக்க வொண்ணா அரும்பெரும் காட்சியைக் கண்டு பிரமித்து மெய்சிலிர்த்துப் போனார் பட்டர். அந்த 70 ம் பாடல் இது---

"கண் களிக்கும் படி கண்டு கொண்டேன் கடம்பாடவியில்
பண் களிக்கும் குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண் களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி மதங்கர் குலப்
பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டி தன் பேரழகே"!

என்று.

**இதன் பொருள்:**

"மகரிஷி மதங்கரின் புத்திரியாக அவதரித்தவளும், கடம்பவனத்தில் உலகத்தினரை மனம் மகிழ வைக்க வல்லவளும், பச்சை வர்ணமும், பரந்த மார்பு உடையவளும், கையில் வீணை பூண்டு, இராகங்களே சந்தோஷப் படும் படியான தேன் குரலில் பாடிக் கொண்டிருக்கும் அபிராமி தேவியின் ஒப்பற்ற பெரும் அழகை எனது கண்கள் களிக்க, களிக்க கண்டேனே"!

என.

இந்த அரிய சம்பவம் மூலம் அறியக் கிடைக்கும் உண்மை, தீவிர தியானம் புரியும் எவரும், இப்பலனால் அன்னையின் தரிசனப் பேற்றை அடைய முடியும்; அதுமட்டுமின்றி நமது தியானப் பொழுதில் எந்த இறை உருவத்தை நினைத்து தியானிக்கிறோமோ, அந்த உருவமே நமக்கு தரிசனமாக கிடைக்கும் என்பது.

அபிராமி பட்டர் இந்த கிடைத்தற்கு அரிய அம்பிகையின் தரிசனத்தைப் பெற்ற புண்ணிய தினம் மார்கழி 18ம் தேதி கூடிய திங்கட்கிழமையாகும். அதாவது இப்பல்வ ஆண்டில் இடம்பெறும், ஆங்கில 31.1.22 ம் நாளில்!

அபிராமி பட்டர் இப்படிப் பாடி அருளிய 100 பாடல்களே "அபிராமி அந்தாதி" என்ற தொகுப்பு நூல்.!

"ஆத்தாளை, எங்கள் அபிராம வல்லியை,
அண்டம் எல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூ நிறத்தாளை,
புவி அடங்கி
காத்தாளைப் போற்றி"

அளப்பற்ற நன்மைகள் பெறுவோம்!

# ஆன்மீக தொடர்பை ஏற்படுத்தி நம்மை புனிதமாக்கும் பேருண்டா தேவி எந்திரம்

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

இந்த ஸ்ரீ பேருண்டா தேவியானவர் நான்காம் திதியான சதுர்த்தி திதியை ஆளக்கூடியவர். சதுர்த்தி திதியில் பிறந்த அனைவரும் இந்த பேருண்டா தேவியை வழிபடுவதன் மூலம் கீழே கொடுக்கப்பட்டுள்ள பேரின்ப சுகங்களை குறைவின்றி பெறமுடியும். இந்த பூலோகத்தில் நாம் இகலோக சிற்றின்ப சுகங்களான தனம், பொன், சொத்து சுகங்கள் போன்ற அனைத்துவிதமான செல்வ வளங்களை குறைவின்றி பெற்று இருந்தாலும் பேரின்ப சுகங்களான ஆன்மீகம், கடவுள் பக்தி மற்றும் சொர்கலோகத்திற்கு செல்லும் வழிகளையும் மேற்கொண்டால் தான் நாம் கடவுளுடன் ஐக்கியமாக முடியும். கடவுளுடன் நாம் ஐக்கியமாக வேண்டும் என்றால் சிற்றின்ப ஆசைகள் மற்றும் தாமச குணங்களை நம்மிலிருந்து விடுவித்து சாத்வீக குணங்களை பெருக்கிக்கொள்ள வேண்டும். தாமச குணங்களை போக்க நம்மை புனிதப்படுத்திக் கொள்ள வேண்டும். நம்மை புனிதப்படுத்திக் கொள்ள இந்த பேருண்டா தேவி எந்திரத்தை பூஜை அறையில் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி வைத்து, சந்தன குங்கும திலகமிட்டு தினமும் மல்லிகை மலர் கொண்டு பூஜித்து தீப தூப ஆராதனை காட்டி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மந்திரத்தை 108 முறை கூறிவருவதால் நம்மை புனிதமாக்கி பேரின்ப சுகங்களை அனுபவித்து சொர்கத்தில் கடவுளுடன் நம்மை ஐகியப்படுத்தி கொள்ளலாம். நம் அறிவை கூர்மை படுத்தி, ஆக்க அறிவை வளர்த்து, ஞானத்தை வளர்த்து, தேவை இல்லாத சுமைகளிலிருந்து நம்மை விடுவித்து, தடை தாமதங்களையும் போக்குகிறது. அதுமட்டும் இல்லாமல் தியானம் மற்றும் யோக வாழ்விற்கும் இந்த பேருண்டா தேவி எந்திரம் துணை புரிகிறது.

ஸ்ரீ பேருண்டா நித்ய தேவி காயத்ரி மந்திரம்:

ஓம் பேருண்டாயை வித்மஹே  
விஷஹராயை தீமஹி  
தன்னோ நித்யா ப்ரசோதயாத்



பேருண்டா

# பொங்கல் பண்டிகையோடு தொடர்புடைய சிவன் கோயில் உழவனுக்கு உவகை தந்த ஒப்பற்ற இறைவன்!

~ சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்.

நமச்சிவாய வாழ்க; நாதன்றாள் வாழ்க இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க என்று காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி மனம் மொழி மெய் ஒன்றுபட வழிபடும் சிவனடியார்கள் ஏராளம்...!

கடலூர் மாவட்ட கோயில்களை நடுநாட்டு திருக்கோயில்கள் என்பர்.

இவ்வாறு நடுநாட்டுத் திருத்தலங்களில் ஒன்றான தொன்மை வாய்ந்த சிவதலம் ஸ்ரீ தீர்த்தனகிரி சிவன் கோவிலான அருள்மிகு சிவக்கொழுந்தீசர் திருக்கோயில் இந்த அற்புதமான, அழகான, கலை வேலைப்பாடுகள் கொண்ட அருளமுதம் பொழிகின்ற ஆலயம்

## அமைவிடம்

இந்த எழில் மிகு ராஜ கோபுரத்துடன் அமைந்த ஆலயம் சரியாக சொல்லவேண்டுமென்றால் கடலூர் சிதம்பரம் சாலையில் மேட்டுப்பாளையத்திலிருந்து 6 கிலோமீட்டர் மேற்கே செல்லும் பாதையில் தீர்த்தனகிரி என்ற எழில்மிகு ஊர் அமைந்துள்ளது. இந்த ஊரில்தான் ஸ்ரீ சிவக்கொழுந்தீசர் கம்பீரமாக அருட் காட்சி அளிக்கின்றார்.

தேவார திருமுறை பதிகங்கள் இவ்வூரை திருத்தினைநகர் என்றே குறிப்பிடுகின்றன தற்போது தீர்த்தனகிரி என்றே மக்கள் அழைக்கின்றனர்.

மணிவாசகப் பெருமான் அருளிய திருப்பள்ளி எழுச்சியில் திருப்பெருந்துறை சிவபெருமானை குறிப்பிடும்போது - " தண் வயல்சூழ் திருப்பெருந்துறை உறை சிவபெருமானே" என்று தம் திருப்பள்ளி எழுச்சி பத்துப் பாடல்களில் திருப்பெருந்துறை சிவபெருமானை அழகாக குறிப்பிடுவார்.

ஸ்ரீ சிவக்கொழுந்தீசரும் திருத்தினை நகரில் வீற்றிருப்பதை தரிசிக்கும்போது மாணிக்கவாசகர் அருளிய திருப்பள்ளியெழுச்சி பாடல்களே நினைவுக்கு வரும்.

தீர்த்தனகிரியில் அமைந்த இக்கோயிலுக்கு செல்லும் பாதையின் இருபுறமும், கண்ணுக்கு எட்டியவரை பசுமை படர்ந்த பூமியை காணலாம். தண் வயற் சூழ்ந்த பகுதியில்- எழிலுடன் காட்சி தருகிறார் ஸ்ரீ சிவக்கொழுந்தீசர்!

பெரியாள் என்ற தன் அடியவனுக்காக அவனது நிலத்தில் ஸ்ரீ சிவக்கொழுந்தீசரே அடியவன் வடிவில் வந்து தினை விளையுமாறு செய்த அற்புத சிவத்தலம்!

இந்த பழமையான திருக்கோயிலை தரிசிக்க பூர்வ ஜென்ம புண்ணியம் செய்திருக்க வேண்டும். இத்தலத்தில் அமைந்துள்ள சந்நிதிகளை காண கண் கோடி வேண்டும். சோமவார பிரதோஷம், சனி மகா பிரதோஷ வேளைகளில் நந்தியம் பெருமானுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் அற்புதமாக நடைபெறுகிறது.

மகா சிவராத்திரி, அன்ன அபிஷேகம், ஆருத்ரா தரிசனம், ஆனித் திருமஞ்சனம் என மிக முக்கிய சமயங்களிலும் சரி மார்கழியில் தினந்தோறும் வருகிற விசேஷங்களிலும் சரி மூலவருக்கு அபிஷேகம் சிறப்பாக நடைபெறுவது உண்டு. வழக்கமான ஆறுகால பூஜைகள் சிறப்பாக நடைபெற்று அடியவர்கள் உள்ளங்களில் ஆனந்த வெள்ளம் கரை புரண்டு ஓடக்காணலாம்.



தல இறைவிட ஸ்ரீ நீலாயதாட்சி அம்பிகை அருள்மிகு கருந்தடங்கண்ணி.

அம்பாள் சந்நிதியை தரிசிக்கும் போதே நமக்கு மெய்சிலிர்க்கும். பத்து மாதம் சுமந்து தவமாய் தவமிருந்து பெற்ற அன்னை கூட இவ்வளவு பரிவோடு பார்க்க மாட்டாள். பலகோடி மடங்கு பரிவுடன் பக்தர்களை தன் குழந்தைகளாகவே கருதி அருள் தரும், கருனைண ததும்பும் இனிய விழிகளுடன் மலர்க்கரங்களால் வரமருளும் உலகம்மையின் திருநாமம் அருள்மிகு கருந்தடங்கண்ணி என்னவொரு அதிசயம். கொன்றை மரமே இத்தல விருட்சமாக அமைந்துள்ளது. ஜாம்பவ தீர்த்தம் தல தீர்த்தமாக அமைந்துள்ளது. குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள்- திருமணத்தடை உள்ளவர்கள் - இல்லறம் சிறக்கவும் ஒருமுறை இத்தலத்தை வழிபட்டாலே போதும். எந்தத் துன்பமும் நீங்கிவிடும். இராஜயோகம் தருகின்ற தலம் என்பது கூடுதல் சிறப்பு.

# திருநீலகண்ட நாயனார்

~ ரா. பன்னீர் செல்வம்

கனகசபையில் தாண்டவமாடும் இறைவன் ஈசன் நடராஜ பெருமானாய் நலங்கள் அருளும் தில்லையம்பதி! தில்லையை எண்ணும் போதே தில்லை வாழ் அந்தணர்கள் என்னும் மூவாயிரவர் நம் நினைவுக்கு வருவதில் எந்த ஆச்சர்யமும் இல்லை.

பக்திக்கு வித்தான நல்லொழுக்கம் நிறைந்த ஆன்மீக பூமி அது ! இந்த ஆன்மீக மண் கண்ட எத்தனையோ வித்துக்களில் அருங்கருணை கொண்ட நல்முத்தாய் வாய்த்தவர் தான் திருநீலகண்டர்!
காலச்சக்கரம் சுழன்று கொண்டே தான் இருக்கிறது. அதை சுழற்றுபவன் யார்? சுழல வைப்பது எது? இதனை அறிந்தவர் வெகுசிலரே!

அந்த சுழற்சியின் பயனாய் நல்லோர் தீயவராவதும் தீயோர் பலர் தீட்சைகள் பெற்று மகான்களாய் மாறுவதும் நித்தநித்தம் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கிறது!
இப்படி ஏற்படும் மாற்றங்களை பலரும் பல பெயர் சொல்லி அழைக்கிறார்கள். கடவுளின் லீலை என அதனைக் கருதுவோர் உண்டு. விதியின் பயன் என விளம்புவோர் உண்டு! "ஊழ்வினை வந்துறுத்த" என சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் குறிப்பிட்டதைக் கூறி, காலத்தின் மாற்றத்தை தங்கள் நிலைகளில் இருந்து பற்பல பெயர்களில் பலரும் குறிப்பிடுவதுண்டு!

இதோ... திருநீலகண்டரது வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்கள் இறைவனின் லீலையா? விதியின் விளையாட்டா? முன்ஜென்ம பயனா? என பலரும் பட்டிமன்றம் வைக்காமல் விவாதித்தார்கள்.
நடந்தது என்ன?...

**கலையும் கலையும் கண் சிமிட்டின**

அருள்நிறைந்த தில்லையம்பதியில் சைவ மரபில் தோன்றியவர் அம்பலவாணன் எனும் திருநீலகண்டர்! குயவர் என்கிற மண்பாண்டத்தொழில் செய்யும் மரபில் உதித்த இவருக்கு, நடராஜ பெருமானின் நல்லாசிகள் கிடைக்க இசை பாடும் வல்லமை சிறந்தோங்கியிருந்தது!

இவரது கைகள் களிமண்ணைப் பிசைந்து பக்குவப்படுத்தும்; அதேவேளையில் இவரது இதயத்தில் எழுகின்ற இசையும் பாடலும் இறைவனின் மனதையே பிழிந்து தன் வசப்படுத்தும்! இப்படி ஒரு இசை ஞானம் வாய்க்கப் பெற்றவராக திகழ்ந்தார், அம்பலவாணன்.

அன்பு மனைவி நீலாவதியுடன் அமைதி மயமான வாழ்க்கை! மனம் மகிழ்ச்சியில் திளைத்தாலும் இந்த தம்பதியர் கொஞ்சி மகிழ, குழந்தை ஒன்றைக் கொடுக்காமல் இறைவன் சோதித்தான்! அதனால் என்ன?....

எத்தனையோ பண்ட பாத்திரங்களை தன் கைகளால் வனையும் இந்த கலைஞன், இறைவனையே தன் குழவியாய் நினைந்து, இசையால் தாலாட்டி இன்பம் கண்டார்!
நீலகண்டருக்கு ஒரு வாரிசு உண்டானால், தனக்கான பிள்ளைத்தமிழ் குறைந்து விடுமோ என எண்ணித் தான் இவருக்கு அந்தப் பாக்கியம் கொடுக்காமல் இறைவன் திருவுளம் கொண்டானோ "என்னவோ?"...

கணவனும் மனைவியும் இனிமையான இல்லறம் கண்டு இன்புற்று இருந்த வேளையில், இவர்களது இளமைக்கும் பக்திக்கும் சோதனை வைக்கத் துணிந்தான் அந்த சுந்தர ஈஸ்வரன்! ஆம்!....

தில்லையம்பதியில் இறைவனது சபை முன்னே நாட்டியம் ஆட வந்தாள், கலாவதி என்னும் கலை மகள்! அவள் பிறந்தது கணிகையர் குலம் என்றாலும் ஆடற்கலையில் அற்புதங்கள் நிகழ்த்தும் ஆன்மீக ஆட்டக்காரி என அனைவரும் புகழ்ந்தனர்!



ஒரு நாள்.... நடராஜ பெருமானை தரிசிக்க சென்ற அம்பலவாணர், நண்பர்களின் அன்பு தொல்லைக்கு ஆட்பட்டு அந்த ஆடலரசியின் நாட்டியம் காண கூட்டத்தோடு அமர்ந்தார்!

நேரம் நெருங்கியது! அரங்கேறினாள் அந்த அழகு மயில்! நீல நயனங்கள் நீண்ட தடாகமாய் பள பளக்க, கண் மலர் கொய்ய வந்த கருவண்டாய் அந்தக் கருவிழிகள் மேலும் கீழும் இடமும் வலமுமாய் நீந்தி விளையாடின. மின்னலுக்கு ஆடைகட்டி, மேடையிலே தவழவிட்ட அழகுக் கோலம்! தென்றலில் அசையும் இலைகள் போல பாதங்கள் பாவிய அழகு! குடத்தோடு தேன் குடித்த போதை அம்பலவாணரை ஆட்டுவித்தது! இவர் ஆட அறியாதவராயிற்றே! பாட ஆரம்பித்தார்! ஆடல் அரசனின் ஆனந்தத்தாண்டவம், அந்த அழகியின் நளினத்தில் தெரிந்ததால் பாடினார்: பாடினார்! அந்த ஆண்டவனையே இதயத்தில் இருத்தி பாடிக்கொண்டே இருந்தார்! அவள் ஆடிக் கொண்டே இருந்தாள்!

ஆடலினுடே, இசைப் புலமை சுரக்கின்ற அந்த இன்பத் திருமேனியை கண்ணுற்றாள்! அவர் தொடர்ந்து பாட வேண்டும் என்பதற்காகவே ஆடினாள், கலாவதி!

அவர், அவளது கலையைப் பருகி பாடினார்!

அவள், அவரையே பருகி ஆடினாள்!

ஆட்டமும் பாட்டமும் ஒருவழியாய் முடிந்தது!

ஓடி வந்தவள், உட்கார்ந்திருந்தவரின் கால்களைத் தொடுவதுபோல் பாவனை செய்து கண்களில் ஒற்றிக் கொண்டாள்!

தன்னருகே தென்றல் வந்ததோ? என ஒரு கணம் திகைத்தவர், தடுமாறி எழுந்தார்! இந்தத் தடுமாற்றம் அவரின் தடம் மாற்றத்திற்கான அறிகுறி என்பதை யாரறிவார்? ஆண்டவன் மட்டுமே அறிவான்!

அறிமுகம் நடந்தது! ஆரணங்கை அழைக்க தோழிகள் வந்தனர்! அவளது கால்கள் மட்டும் அவர்களோடு நடந்தது", கவனமும் கருத்தும் அம்பலவாணரிடமே அடைக்கலம் புகுந்தது!

வட்டச் சக்கரம் சுற்றுகிறது! ஆனால், வனைய முற்பட்ட பாத்திரமோ வடிவு கொள்ளாமல் வளைந்து கரைந்தது! ஆமாம். இவரே பிணைந்த களிமண் கூட இவரது எண்ணப்படி பாத்திரம் ஆகாமல் பாடாய்ப் படுத்தியது!

சக்கரம் சுற்றுவதை பார்த்தால், அவளது பாதங்கள் சக்கரமாய் சுழன்றாடிய அழகு, சலனப் படுத்தியது! பானையின் கழுத்தை பதமாக வனைய கையை வைத்தால், பளபளத்த அவளது

சங்கு கழுத்து சறுக்கலை உண்டாக்கியது!

இறைவனை நினைத்து பாடலாம் என வாய் திறந்தார்! ஆனால், ஆடுவதற்கு வஞ்சி அவள் இல்லையே என, வாய் மௌனமாகியது! அந்த கலாவதியின் நினைவு ஒன்றுதான் இந்த மகா கலைஞனின் மனதை புரட்டிப் போட்டு, புயலாய் வீசியது!

அவளுக்கும் அதே நிலைதான்! பஞ்சணையில் சாய்ந்தாள்; இவள் நெஞ்சனையில் சாய அவரைக்காணாமல் தவித்தாள்! சாளரத் தென்றலில் ஆடும் திரைச்சீலைகள், பேரழகியின் பெருமையை அவரே பாடுவதாய் ஆலாபனம் செய்தன!

அருகில் வருவாரா அம்பலவாணன்? என துடித்தாள்!

விளைவு?....

அடுத்தடுத்து ஆலயத்தில் சந்திப்பு. "சிறுசிறு தூது! பார்வையால் தாக்குதல்; தடுத்தல் என வளர்ந்தது அந்த வஞ்சியின் மோக எண்ணம்!

மனம் சஞ்சலமடைந்தாலும் மனைவியின் பேரன்பும் குல ஒழுக்கமும் அம்பலவாணரை அசைய விடாமல் தடுத்தது!

ஆனாலும் இறைவன் சித்தம் என்னவாக இருக்கும்?!....

ஒரு நாள்....

ஆலயத்தில் அம்பலவாணனை சந்தித்த ஆடலரசி கலா, தன் தங்கும் இடத்திற்கு வரும்படி அன்புக்கட்டளை விடுத்தாள்! எவ்வளவோ மறுத்துப் பார்த்தார்; ஊழ்வினை உந்தித் தள்ளியது! ஒப்புக்கொண்டார்; உடன் சென்றார்.

அறுசுவை விருந்து; அவளே பரிமாறினாள்! மனைவி நீலாவின் கைகளில் பரிமாறி உணவுண்ட இவருக்கு, கலாவின் மயக்கும் கண்களும் மகரந்தப் புன்னகையும் சேர்ந்த அந்த விருந்து, பலமடங்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது! மகிழ்ச்சி, மயக்கத்தைக் கொடுத்தது! மயக்கம் மஞ்சத்தில் ஆழ்த்தியது!

விடிந்ததும் வீடு திரும்பினார், அம்பலவாணன்எனும் திருநீலகண்டர்! மகிழ்ச்சியில் மனம் நிறைந்திருந்தாலும் மனையாளின் அன்பை எண்ணியதும் அதிர்ச்சி எழுந்தது!

பால் குடித்த பூனையின் பதுங்கலை அறியாதவளா நீலா?! பார்த்தவுடன் புரிந்து கொண்டார்!

"கட்டிய மனைவியை மறந்து, மற்றொரு கணிகையுடன் கட்டில் சுகம் காண எப்படி மனம் வந்தது? என அழுது அரற்றினாள்!

சமாளித்துப் பார்த்தார்; தடுமாற்றம் அதிகரித்தது!" அமாவாசையன்று வானை விட்டு நீங்கும் நிலவு, மறுபடியும் வந்துவிடுமல்லவா?.... இது அவளது கலை மேல் ஏற்பட்ட மோகம்! அந்த நொடியே கலைந்துவிட்டது! இனி, மனம் தடுமாற மாட்டேன்; இது சத்தியம்!" என்றார்.

"ஓ.... அப்படியென்றால், மாதம் ஒரு முறை இந்த நிலவு என்னை விட்டு நீங்கி விடுமோ?.... குலப்பெருமை, சுய ஒழுக்கம் அத்தனையையும் ஒரு கணிகையின் காலடியில் அடகு வைத்து விட்டீர்களே! " என அழுதாள்!

அவளைத் தேற்றும் விதமாக, " இனி ஒருமுறை இப்படி நடவாது: நம்பு நீலா," என்றபடி அருகில் வந்தார்! விலகிச் சென்றாள் நீலா!

"ஏன்?.... நீலா.... என்னையா வெறுக்கிறாய்! இது ஏதோ தவறுதலாய் நடந்துவிட்டது! மன்றாடிக் கேட்கிறேன், என்னை மன்னித்து விடு, " என அவளது கைகளை, கண் கலங்கியபடி பிடிக்கப் போனார்!

பதறியபடி தள்ளிப்போன நீலா, "தொடதீர்! வேண்டாம்: ஒரு வேசியை தழுவிய கைகளால் இனி எம்மைத் தொடதீர்!" என துடித்தாள்!" ஏதோ புத்தி தடுமாறி விட்டேன்; இதுவே இறுதி! இனி இப்படி ஒரு நிலை வராது; இது உறுதி! "என அருகில் செல்ல....

"வேண்டாம்", என்னைத் தொட வேண்டாம்: இது அந்த திருநீலகண்டத்தின் மேல் ஆணை!

"வெடித்து அழுதாள், நீலா!

அதிர்ச்சியில் உறைந்தார் அம்பலவாணர்!" இறைவன் மீது ஆணையிட்டு விட்டாயே, நீலா!.... என்ன செய்வேன்?!..... இடி, மின்னலோடு பேய் மழை பொழிந்தது போல் கண்களில் நீர் ஊற்றியது! மனமொடிந்து, சுவரில் சாய்ந்து அமர்ந்தார்!

காலம் ஓடியது; அம்பலவாணரின் இளமையும் ஓடியது! கணவன், மனைவி இருவரும் இந்த வயோதிகத்திலும் அன்பு மாறாமல் இல்லறத்தை நல்லறமாய் நடத்தினர்!

ஆனால், ஒருவரையொருவர் தொட்டதில்லை! அன்று ஏற்பட்ட துன்பச் சூழலில் "உன்னை மட்டுமல்ல; வேறு எந்த பெண்ணையும் கைகளால் மட்டுமல்ல மனதாலும் தொடமாட்டேன்", என சூளுரைத்தவாறே வாழ்கிறார்,

அம்பலவாணர்!

வயதாகிவிட்டது! இனி இதற்கெல்லாம் வாய்ப்பே இல்லை என்ற நிலையில் இறைவனை அகத்தில் எண்ணி, அகத்தாளோடு வாழ்ந்து வந்தார்.

## சோதனை மேல் சோதனை:

"அம்பல வாணரே,"...... அய்யா.... அம்பல வாணரே!" வயோதிக குரல் கேட்டு வாசலுக்கு தடுமாறியபடி வந்தார், அம்பலவாணர்!

வெளியில் ஒரு சிவனடியார் வயோதிக தோற்றத்தில் நின்றிருந்தார்! அவருடைய சடை முடியும் நீறு பூசிய நெற்றியும் காவி உடையும் அவரை ஒரு பழுத்த சிவயோகி என பறைசாற்றியது!

அவரை வணங்கிய அம்பலவாணர், " சுவாமி, வருக... தங்கள் வரவால் அடியேன் பாக்கியம் செய்தவனானேன்"... என்றார்.

"நான் விசாரித்தறிந்த வகையில் இந்த நகரிலேயே சிவனடியார்களை போற்றுவதில் தங்களுக்கு இணை யாரும் இல்லை என்பதை நன்கறிவேன்", என சிவனடியார் சொல்ல,

"எல்லாம் இறைவன் சித்தம் சுவாமி", என்றார். அம்பலவாணர்!

"தங்களிடம் ஒரு விண்ணப்பம்!"

"சொல்லுங்கள் சுவாமி, சித்தமாயிருக்கிறேன்",

பையிலிருந்த திருவோட்டினை எடுத்தார் அடியார்!

"அம்பல வாணரே! இது, அந்த கைலாசநாதன் தன் கைப்பட என்னிடம் சேர்ந்ததிருவோடு! நான் தற்போது தல யாத்திரை செல்கிறேன்! நான் செல்வதோ காடு, மேடு, வனாந்திரம்! இந்த திருவோடு என்னிடமிருந்து, நான் போகின்ற இடத்தில் இதற்கு இடர் ஏதும் வந்து விடக் கூடாது! ஆகவே, நான் யாத்திரை முடித்து திரும்பும் வரையில் இத்திருவோட்டினை பத்திரமாக வைத்திரு! நான் வந்து கேட்கும்போது திருப்பிக் கொடுத்தால் போதும்!

"உத்தரவு சுவாமி!"

"அம்பல வாணரே! மீண்டும் சொல்கிறேன்; இது சாதாரண திருவோடு அல்ல! அந்த ஈசனின்திருவருளால் கிடைத்தது! மிகவும் கவனம் தேவை." சிவனடியார் எச்சரித்தார்!

"என் உயிர் போல காப்பேன்; இது அந்த இறைவன் மேல் ஆணை; தாங்கள் நிம்மதியாக யாத்திரையை தொடருங்கள் சுவாமி"

திருவோடு கைமாறியது! அதனைப் பெற்று பூஜையறையில் உள்ள ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டி, சிவனை எண்ணி வணங்கினார், அம்பலவாணர்!

சிறிது காலம் சென்றது! யாத்திரை முடித்து சிவனடியார் திரும்பி வந்தார்! அவரை வரவேற்று உபசரித்த அம்பலவாணர், அடியவரை பசியாற அழைக்க,

"வேண்டாமப்பா! என் திருவோட்டினை திருப்பிக்கொடு; நான் உடனே போக வேண்டும்", என அமராமல் கூட அவசரப் படுத்தினார் சிவனடியார்!

"இதோ கொண்டு வந்துவிடுகிறேன் சுவாமி", அம்பலவாணர் அவசரமாக சென்று திருவோடு இருந்த பெட்டியைத் திறந்தார்!

"இறைவா!... இது என்ன சோதனை?!..." என அதிர்ந்தவர், மனைவியை அழைத்தார்." நீலா... இங்கே வா... சுவாமியின் திரு வோட்டினை பார்த்தாயா?" பதட்டத்தோடு கேட்டார்.

"இல்லையே! பெட்டியை நீங்கள் தானே திறப்பீர்கள் : நான் அதை, அன்று பார்த்ததோடு சரி.... எங்கே போனது?" என பதறினாள்!

"என்ன மாயம் இது? பெட்டியில் இருந்த திருவோட்டினை காணவில்லையே!" என படபடத்தார்.

அடியாரின் காதில் இந்த சொல் விழுந்தது!

"அடப்பாதகா! என்னை மோசம் செய்ய எண்ணம் கொண்டாயா? இறைவனின் அருட்கொடை அது! அதனை இல்லை என்று கூறி ஏமாற்ற பார்க்கிறாயா?. விடமாட்டேன் உன்னை," கோபமாக புறப்பட்டார்.

## சான்றோர் சபை:

ஊரின் நடுவே, நியாயவான்களிடம்அம்பலவாணர் தன் திருவோட்டினை திருடிக்கொண்டு ஏமாற்றுவதாக அடியவர் வழக்கு தொடுக்க, அம்பலவாணர் தம் மனைவியோடு வந்து, நடந்ததைக்கூறி, அந்தத் திருவோடு பெட்டியிலிருந்து மறைந்து போனது பற்றி கூறினார். அம்பலவாணரின் நேர்மையும் சிவபக்தியும் அவர்கள் அனைவரும் அறிந்ததுதான் என்றாலும் சிவனடியாரின் சினம் குறித்து கவலைப்பட்டனர். என்ன செய்வதென தெரியாமல் திகைத்தனர்!

இறுதியில் சிவனடியாரே ஒரு முடிவைச் சொன்னார். "இந்த அம்பலவாணன் உண்மையிலேயே திருவோட்டினை களவாட வில்லையென்றால் தன் மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு இந்த திருக்குளத்தில் மூழ்கி சத்தியம் செய்யட்டும்"

என்றார்.

அனைவரும் இதனை ஏற்றுக் கொண்டனர்.

"தொடாதீர்", என இறைவன் மேலாக ஆணை இட்டது இருவருக்குமே நினைவில் நிழலாடியது! அதற்கும் ஒரு வழி கண்டுபிடித்தார், அம்பலவாணர்! ஒரு மூங்கில் குச்சியை கையில் எடுத்தார், அவரது எண்ணத்தை அவரது மனைவியும் புரிந்து கொண்டாள்!

இருவரும் குளத்தில் இறங்கி, தொடாமல் அருகருகே நின்றனர். அம்பலவாணர் குச்சியை ஒரு முனையில் பிடித்துக் கொண்டு, மறுமுனையை மனைவியிடம் நீட்ட, அவளும் அதை பிடித்துக் கொள்ள இருவரும் மூழ்கத்தயாரான நிலையில் சிவனடியார் கோபமாக." ஏமாற்று வேலை இது; கூடாது; கூடாது! இருவரும் கைகளை பற்றிக்கொண்டு குளத்தில் மூழ்கி சத்தியம் செய்ய வேண்டும்!

இவர்கள் என்னை ஏமாற்ற உபாயம் செய்கிறார்கள்! நியாயஸ்தர்களே... என்ன அநீதி இது?!" என அவர்களைப் பார்த்து கேட்க, "அம்பல வாணரே! சிவனடியார் சொல்வதுபோல கைகளைப்பிடித்து மூழ்கி எழுங்கள்", என்று நியாயஸ்தர் சொன்னார்.

தர்மசங்கடம்! செய்வதறியாமல் மனைவியைப் பார்த்தார், அம்பலவாணர்! அவள் தொலைவில் தெரிந்த கோபுரத்தை பார்த்து வேண்டி, இறைவனிடம் மன்னிப்புக் கேட்டு, இந்த இக்கட்டான நிலையிலிருந்து தங்களை விடுவிக்கும்படி வேண்டிக்கொண்டு அம்பலவாணரை நோக்கி கையை நீட்ட,

இறைவன் மீது இட்ட ஆணையை மதித்து, பல ஆண்டுகளாக தொடாமல் இருந்த மனைவியின் கையை தயக்கத்தோடு பிடித்தார் அம்பலவாணர். "திருநீலகண்டம்" என்றபடி இருவரும் குளத்தில் மூழ்கினர்.

அதேவேளையில் வழக்கு தொடுத்த சிவனடியார் திடீரென சிரித்து, மறைந்தார்!

நியாயஸ்தரும் கூடியிருந்த சபையோரும் திகைப்புடன் பார்த்து மலைப்புற்றனர்.

அப்போது, முதுமையான தோற்றத்தோடு குளத்தில் மூழ்கிய அம்பலவாணரும் அவரது மனைவியும் "தொடாதீர்", என சத்தியம் செய்யும் போது இருந்த இளமை தோற்றத்தோடு எழுந்தனர்.

அவர்கள் இருவர் மட்டும் அல்ல; கூடியிருந்த அனைவருமே அதிசயித்துப் பார்த்தனர்!

அம்பலவாணர், "எங்கே அந்த சிவயோகி?" என கண்களை அலைய விட, வானில் இறைவன் ஈசன், அம்மை உமையவளோடு ரிஷப வாகனத்தில் காட்சி கொடுத்து ஆசி வழங்கினார்.

அந்த அம்பலவாணர் தான் ஈசனின் அருளால் இழந்த இளமையைத் திரும்பவும் பெற்று, சிவன் மீது கொண்ட சத்தியத்தை பக்தியால் காத்த காரணத்தால் திருநீலகண்ட நாயனராக, அறுபத்து மூவர் வரிசையில் இடம்பெற்று வணங்கப்படுகிறார்.




KABA SURA
KUDINEER
15 herbs effective against Viral infections, fever, cough and breathing difficulties
Call: 88702 88701

# சொல்லின் செல்வன் அனுமன்!

~ கீதா சுப்ரமண்யன்

இராமாயணம் சுந்தர காண்டத்தில் இடம்பெறும் இச்சம்பவம் சீதா பிராட்டிக்கும், ராமனின் தூதுவர் அனுமனுக்கும் மிக மகிழ்ச்சியை ஏற்படுத்தும் வகையில் அமைந்து விட்டது!

அசோகவனத்தில் சிறையெடுத்து வைக்கப்பட்ட சீதை, இலங்கை வேந்தன் இராவணன் மற்றும் பல அரக்கியர்கள் தினமும் தந்த மன உளைச்சலால் பாதிக்கப்பட்டு ஒரு நாள் மனம் வெறுத்து , தற்கொலை மேற்கொள்ள , குறுக்கத்திப் புதரை நெருங்கும் வேளையில், அங்கே மறைந்து நின்று கொண்டிருந்த ஆஞ்சநேயர் அதனை தடுக்கும் வண்ணம் பிராட்டி முன்பு பாய்ந்து நின்று வணங்கினார் இப்படி பணிவாக உரைத்து – "அன்னையே ! ராம பிரானால் அனுப்பப்பட்ட தூதன் யான்!" என்று .



"இவரை எப்படி நம்புவது ?" என சந்தேகமுடன் சீதை பார்க்கையில் புத்திசாலியான அனுமன் "தேவி! என் மீது எவ்வித ஐயமும் வேண்டாம். அப்பெருமான் அருளியுள்ள கணையாழியை பெற்றுக் கொள்ளுங்கள்" என தந்தார். அவள் அதை கையில் வைத்து பார்க்கையிலேயே அத்தூதுவர் தன் தலைவனின் எழில் நலன்களை எடுத்து உரைக்கத் தொடங்கினார்.

முற்றிலும் தன் சந்தேகம் நீங்கிய வகையில் மிக களைப்புற்ற பிராட்டி "என் கணவனின் தூதுவனாக வந்து என் உயிரை காப்பாற்றியதோடு இனியும் நான் பூமியில் வாழ தன்னம்பிக்கை தந்த செல்வனே! உனக்கு என்ன கைமாறும் செய்ய என்னிடம் வகை இல்லாத இன்றைய நிலையில், ஈரேழு உலகங்களும் அழிவடைந்த காலத்திலும் நீ இன்றைக்கு இருப்பது போன்றே என்றும் ஒரு தன்மையுடன் வாழ்ந்து இருப்பாயாக!" என வாழ்த்தி அருளினாள். பிறகு தன்னை அனுமன் சந்தித்தற்கு அடையாளமாக சீதாபிராட்டி தன்னிடமிருந்த சூளாமணியென்னும் அணிகலத்தை அளிக்க, அதனை பணிவுடன் பெற்றுக்கொண்ட ராம தூதுவர் மிக ஆனந்தமுடன் பிராட்டியிடமிருந்து விடைபெற்றார்.

இதுபோன்ற எத்தனையோ நிகழ்வுகளில் ராமாயண இதிகாச புராணத்தில் முக்கிய இடம் பெற்ற அனுமன், அவருடைய தலைவன் ராமன் உலக மக்களால் கொண்டாடப் பெற்று தெய்வமாக பூஜிக்கப்படுவது போலவே அவரும் மிகவும் கொண்டாடப்பட்டு வருவது அனைவரும் அறிந்த ஒன்றே!

சிரஞ்சீவி என்ற பட்டப்பெயர் கொண்ட அனுமன், நாமக்கல் என்ற தலத்தில் எழுந்தருளக் காரணமாக நடைபெற்றது ஒரு சுவையான நிகழ்ச்சியால்!

பிரசித்தி பெற்ற ராம ராவண யுத்தம் அப்போது முக்கிய கட்டத்தில் இருக்கின்றது. அப்போரில் தலைமைப் பொறுப்பேற்று பங்கேற்ற, ராவணனின் புத்திரன் இந்திரஜித் எதிரிகள் மீது செலுத்திய அதிக சக்தி கொண்ட நாகாஸ்திரம் பலங்கொண்டு அங்கு போரில் பங்கேற்றிருந்த இளவல் லட்சுமணன் உள்ளிட்ட பல வானர வீரர்களை தாக்கவே அவர்கள் மயக்கத்துடன் பூமியில் விழுந்து விடுகிறார்கள்.

அங்கிருந்த ஜாம்பவான் என்ற கரடி உருவங்கொண்ட ராமனின் அடியவர் தந்த

ஆலோசனையை ஏற்று ஆஞ்சநேயர் அனைத்து நோய்களையும் அழிக்கக்கூடிய சஞ்சீவினி மலையை நோக்கி வாயு வேகத்துடன் வானில் பறக்கிறார்.

மகேந்திர பர்வதத்தில் அம்மலையை அடைந்ததும் அனுமன் ஆயிரக்கணக்கான பல மூலிகை தாவரங்கள் முளைத்துக் கிடப்பதை கண்டு திகைத்துப் போகிறார் இதில் எந்த மூலிகை யுத்தத்தில் மயங்கிக் கிடக்கும் லட்சுமணன் உள்ளிட்டோரை எழுப்ப வல்லது என்று, ‘சரி அந்த சிறு சஞ்சீவிக் குன்றை அப்படியே தூக்கிச் சென்று இலங்கை யுத்த களத்தில் வைத்து ஜாம்பவான் உதவியுடன் கண்டுபிடித்து விடலாம் என எண்ணி அச்சிறு குன்றையே பெரும் மலையிலிருந்து பெயர்த்து எடுத்து வானில் பறக்கிறார் அனுமன்.
மீண்டும் யுத்தக்களத்துக்கு திரும்பி விட்ட நிலையில் அனுமன் சஞ்சீவி மலையில் முளைத்துக் கிடந்த தேவையான மூலிகைகளை எடுத்து லட்சுமணன் மற்றும் ஏராளமாக மயங்கிக்கிடந்த வீரர்களின் மயக்கத்தைப் போக்கி விட்ட சமய சஞ்சீவி யாகி விடுகிறார்.!
அப்பணி முடிந்ததும், உடனே ஆஞ்சநேயர் யுத்தப்பகுதியிலிருந்து தான் கொண்டு வந்த சஞ்சீவி பர்வதமலையை சுமந்து கொண்டு, அது முதலில் இடம் பெற்றிருந்த மகேந்திரகிரிப் பகுதிக்கு சென்று வைத்து விடுகிறார்.

இச்சம்பவம் நடைபெறுவதற்கு முன்பே கமலதீர்த்தம் என்ற புண்ணிய இடத்தில் தேவி மகாலட்சுமி தன் துணைவர் மகாவிஷ்ணு நரசிம்மவதாரம் எடுத்த போது அந்த அவதார காட்சியை முன்பு கண்டிராத நிலையில், அந்த அவதார உருவத்தை தரிசிக்க வேண்டும் என்ற ஆவலில் அதற்காக திருமாலைத் துதித்து தவமிருந்து கொண்டிருந்தாள்.
அனுமன் பழைய இடத்திலேயே சஞ்சீவிமலையை வைத்து விட்டு, இலங்கையை நோக்கி வானில் பறந்து வந்து கொண்டிருந்த போது, நேபாளப்பகுதியை கடக்கையில் தற்செயலாக அவருடைய பார்வை பூமியை நோக்கிப் போக, அனுமனின் கண்களில், புனிதமான கண்டகம் என்ற நதி தென்பட்டது. அதில் இறங்கி ஸ்நானம் செய்துவிட்டு, கிளம்பலாமே என்ற யோசனையுடன் தரையை நோக்கி பறந்தார் அவர்.

ஸ்நானம் புரிகையில், அந்த கண்டக நதியில், பெருமாளின் வடிவமாக கருதப்படும் புண்ணிய மிக்க ஒரு சாலிக்ராமம் அனுமனுக்கு கிடைத்துவிட்டது. இதனை தினமும் பூஜித்து வழிபட வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர் அந்த சாலிக்ராமை பத்திரப்படுத்தி எடுத்துக்கொண்டு அவர் மீண்டும் வான் பயணத்தை தொடங்கினார்.
நீண்ட நாழிகை அனுமன் மேலே பறந்து கொண்டு இருக்கையில், அவர் அடுத்து ஸ்நானம் புரிய வேண்டிய தருணம் நெருங்கி விட்டதால், பூமியை நோக்கியபோது, அங்கேயுள்ள கமலாலய திருக்குளம் தென்பட்டது. இங்கே குளியலை முடித்துவிடலாமெனக் கருதி, பூமியை நோக்கிய பயணத்தைச் செய்தார், அனுமன்.
தான் ஸ்நானம் புரிகையில் கண்டகி நதியில் கிடைத்த அரும் பொக்கிஷமான சாலிக்ராமத்தை எங்கே பாதுகாப்பாக வைப்பது என அனுமன் அக்கம் பக்கம் கண்ணோட்டம் விடுகையில், கமலாலய தலத்தருகே தாயார் மகாலட்சுமி தவமிருப்பதைப் பார்த்து விட்டார். பேரானந்த முற்ற அவர் தாயாரின் முன்பு சென்று வணங்கி நின்றார். அவரை ஆசிர்வதித்த தேவி, தன் தவ நிலை காரணத்தைக் கூறினாள்.

அப்பொழுது அனுமன் சாளக்ராமம் கிடைத்ததைச் சொல்லிவிட்டு தான் ஸ்நானம் முடித்து வரும் வரை அதனை தாங்கள் வைத்திருக்க வேண்டும் என பணிவுடன் வேண்டிக் கொண்டார். தாயாரிடம். அதனை ஏற்றுக்கொண்ட தாயார் ” அனும ! ஒரு நிபந்தனை! குறிப்பிட்ட நேரத்திற்குள் நீ திரும்பி இங்கு வராவிட்டால், சாளக்ராமை தரையில் வைத்து விடுவேன்” என உறுதியாக கூறி விட்டாள்..
திருமாலின் திரு உள்ளமோ என்னவோ, கமலாலயக்குள ஸ்நானம் முடிக்க சற்று காலதாமதமாகி விட்டது அனுமனுக்கு. அதனால் மகாலட்சுமி தேவி சாளக்ராமத்தை தன் கையிலிருந்து எடுத்து தரையில் வைத்து விடும் காட்சி அரங்கேறி விட்டது.
குளித்து விட்டு தேவியின் இருப்பிடம் வந்த அனுமன் சாளக்ராமம் பூமியில் இடம் பெற்ற காட்சியைக் கண்டு திடுக்கிட்டுப் போனார். அதனை பதைபதைப்புடன் அவர் கையில் எடுக்க, அவர் முயற்சிக்கையில் அது பெரிய மலையாக உருவெடுத்து விட்டது. என்ன செய்வது என அனுமன் திகைக்கையில் வானில் ஒரு அசரீரி இப்படி முழங்கியது ”அனும! ராமர் இட்ட பணிகளை முடித்து விட்டு பிறகு இங்கு திரும்பி வா!” என.
உடனே அனுமன் தன் இலங்கை பயணத்தை மீண்டும் துவக்கி விட்டார். ராம - ராவண யுத்தம்

நடைபெற்று முடிந்து வெற்றிக் கொடியை ராமபிரான் நாட்டி, அதன் தொடர்ச்சியாக விபீஷண பட்டாபிஷேக வைபவம் நடந்தவுடன், சாளக்ராமம் பற்றிய நினைவு அனுமனுக்கு வந்து விட்டது.
அனுமன் சாளக்ராமம் இருந்த இடத்தை அடைந்த போது, தன் தேவி மகாலட்சுமியின் விருப்பப்படி தனது முந்தைய நரசிங்க மூர்த்தி அவதாரத்தைக் காட்டி களிப்புறச் செய்த மகாவிஷ்ணு, அதே இடத்தில் ஸ்ரீநரசிம்மராக கோயில் கொண்டு விட்டதைக் கண்டார். "ஆஹா! இப்பெருமாள், தேவிக்கு இப்படி காட்சி அருளவே, தன்னை பயன்படுத்தி விட்டாரே என வியந்து, மகிழ்ச்சி கொண்டார். இந்த அபூர்வ அவதாரத்தை தினமும் தரிசிக்கலாமே என்ற சிந்தனை தோன்ற அனுமன், கண் திறந்த நிலையில், ஸ்ரீ நரசிம்மர் ஆலயம் எதிரிலே தான் கை கூப்பி வணங்கிய நிலையில் இருப்பிடம் அமைத்துக் கொண்டார்.

கோபுரம் இல்லாத தனிச் சந்நிதியில் குடி கொண்டுள்ள பிரம்மாண்டமான ஆஞ்சநேயரின் உயரம் 18 அடிகள்! 250அடி உயரங்கொண்ட நாமகிரி குன்றில் குடி கொண்ட ஸ்ரீ நரசிம்மரின் திருப்பாத கமலங்களும், எதிரே குடி கொண்ட திறந்த விழிகளைக் காட்டியவாறே காணப்படும் அனுமனின் நேத்திரங்களும் ஒரே நேர்க்கோட்டில் இருப்பது குறிப்பிடத்தக்கது.
பல சிறப்பு வழிபாடுகள் நாமக்கல் ஆஞ்சநேயருக்கு நடத்தப்பட்டு வருகின்றன.
விசேட காலங்களில் இந்த ஆஞ்சநேயருக்கு தங்க கவசம், முத்தங்கி சேவை, வெண்ணைக்காப்பு, புஷ்பங்கி சேவை, நடத்தப்படுவதோடு, அவருக்கு தமிழ் மாத முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் பிரம்மாண்ட வடை மாலை சாற்றும் வழிபாடு உண்டு.
சந்தன காப்பு அலங்காரம் தினமும் இறைவனுக்கு நடக்க, அதனை தரிசிப்பது கண் கொள்ளா காட்சியாக இருக்கும்.
அமாவாசை தினங்களில், சிறப்பு அபிஷேகம், பூஜை நடத்தப்படும் இந்த அனுமனை பிரார்த்தித்து வேண்டுதலை செலுத்தும் பக்தர்களுக்கு அவர் ஞானம், கல்வி, பொருளாதார வளர்ச்சி, திருமண, மகப்பேறு பாக்கியம், தீராத நோய் தீர்த்தல், எண்ணிய வரத்தை அருளல், வியாபார அபிவிருத்தி, கடனற்ற வாழ்க்கைப் போன்றவற்றை அருள்வார் என்பது பக்தர்களின் நம்பிக்கை.
காரியசித்தி வேண்டுவோர் ஆஞ்சநேயருக்கு வடை மாலை, வெற்றிலை மாலை சார்த்தி பயன்பெறுகிறார்கள்.
பொதுவாக அனுமனுக்கு பிடித்த தாரக மந்திரமான "ராம்! ராம்!!" என சதா உச்சரிப்பவர்கள், அவரால் மிகவும் விரும்பப்பட்டு ஆசிர்வதிக்கப்படுவார்கள்.

அனைத்து வரங்களையும் அருளும் அனுமனின் ஜெயந்தி திருநாள் சர்வ அமாவாசை கூடின வரும் 3.1.2022 திங்கட்கிழமையன்று (மார்கழி மாத 19 ம் தேதி) இடம் பெறுவதால் அவரை துதித்து நற்பலன்கள் அடைவோம்!
ராம்! ராம்!! ராம்!!!




# திருவாரூர் ராஜ துர்கை அம்மன்

~ ரா. பன்னீர் செல்வம்



அசுரன் மகிஷாசுரனை வதம் செய்ய எண்ணற்ற, அரிய ஆற்றலோடு அன்னையின் அம்சமாய் அவதாரம் எடுத்தவள், மகிஷாசுரமர்த்தினி; இந்த அம்மனுக்கு துர்க்கை என்ற பெயரே எங்கும் வழங்கி வருகிறது.

அப்படிப்பட்ட துர்க்கை அம்மன், ராஜ துர்க்கை அம்மன் என்னும் பெயரோடு, பற்பல சிறப்பம்சங்களுடன் அருள் புரிந்து வரும் அற்புதத் தலம் தான், திருவாரூர் தியாகராஜசுவாமி ஆலயம்!

பொதுவாகவே, திருவாரூர் தியாகராஜ சுவாமி ஆலயத்திற்கு பல பெருமைகள் உண்டு! திருவாரூர் கோவிலை பெரிய கோவில் என்றே பண்டைக்காலத்தில் அழைத்தனர். அதற்குக் காரணம், “இந்த ஆலயத்தின் உள்ளே சுமார் அறுபத்துக்கும் மேற்பட்ட கோவில்கள் உள்ளது“!

கோவிலுக்குள் சன்னதிகள் இருப்பது வழக்கம்! ஆனால், இந்த கோவிலுக்குள் பல கோவில்கள் இருப்பதாலேயே இதனை பெரிய கோவில் என்று அழைத்தனர். இந்தக் கோவிலுக்குள் ஒரு தனிப்பெரும் கோவில் கொண்டிருப்பவளே இந்த ராஜ துர்க்கை அம்மன். இந்த அம்மன் வெற்றியை கொடுப்பவள் என்று கொண்டாடப்படுகிறாள்.

மற்ற அனைத்து சிவாலயங்களிலும் கோஷ்டத்தில் உள்ள சிறு மாடத்தில் வடக்கு புறமாக துர்க்கை அம்மன் இருப்பது வழக்கம். வடபுறம் பார்க்குமுகமாக இருப்பதாலேயே துர்க்கை அம்மனை “வடக்கு வாய் செல்வி“ என்ற பெயரில் அழைப்பதுண்டு!
திருவாரூர் ஆலயத்தில் மேற்கு கோபுரத்தின் உட்புறம், கிழக்கு முகமாக கோயில் கொண்டு

வீற்றிருக்கிறாள் இந்த ராஜ துர்க்கை! இது வேறெங்கும் இல்லாத அருட்கோலம்! இந்த அம்மனுக்கு மேலும் பல சிறப்புகள் உண்டு!

சிங்கத்தின் மீது அமர்ந்த கோலத்தில் நான்கு கரங்களோடு ருத்ராம்சமாக வீற்றிருக்கிறாள் இந்த ராஜ துர்க்கை அம்மன்.

திருவாரூரை ஆண்ட சோழ மன்னர்கள் அனைவருமே போருக்கு செல்லும் போது இந்த அம்மனை வணங்கிச் சென்று, பற்பல வெற்றிகளை பெற்றுள்ளனர் என்பது வரலாற்று சிறப்பு.

ஞாயிறு, செவ்வாய், வெள்ளி போன்ற நாட்களில் ராகு கால வேளைகளில் இந்த ராஜ துர்க்கையை பக்தர்கள் வணங்குகின்றனர். ஸ்ரீ ராமனே திருவாரூர் ராஜ துர்க்கையை வணங்கிய பின்னர் ராவணனை வென்று, அதன்பின் இந்த அம்மனை வணங்கி தான் அரியணை ஏறினார் என்பது காளிதாசர் எழுதிய ரகு வம்சம் காவியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மை செய்தியாகும். இந்த ராஜதுர்க்கை வழிபாடு என்பது சிவ, சக்தி இருவரையும் ஒருசேர வழி பட்டதற்கு சமமாகும்.

இத்தனை சிறப்புகள் கொண்ட ராஜதுர்க்கையை நமக்கு வெற்றிகள் குவியும் வண்ணம் திருவாரூர் சென்று வழிபடுவது சிறப்பு.

# தமிழர் திருநாளே பொங்கல்!!

~ திருவாரூர் சு.சேகர்.




தமிழ் மக்கள் எத்தனையோ பண்டிகைகளைக் கொண்டாடினாலும் தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை தான் அனைத்திலும் முதன்மையாய் திகழும் பண்டிகை ஆகும்.

தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற பழமொழிக்கேற்ப தமிழ் மாதங்களில் தனிச் சிறப்பு வாய்ந்த மாதங்களில் முக்கியமானது தை மாதம். இந்த மாதத்தின் பிறப்பை பொங்கல் தினமாக உலகத் தமிழினம் கொண்டாடி வருகிறது. தைமாதம் கொண்டாடப்படுவதால் 'தைத் திருநாள்' என்றும் அழைக்கிறோம்.

தமிழர்கள் மிக விமரிசையாக கொண்டாடும் பொங்கல் பண்டிகை, குடும்பமாக இணைந்து கொண்டாடும் பண்டிகையாக கொண்டாடப்படுகிறது, பொங்கல் பண்டிகை உணவுக்கு மரியாதை செய்யும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது பொங்கல் பண்டிகை. உணவுக்கு மட்டுமின்றி, உணவை உற்பத்தி செய்து கொடுக்கிற விவசாயிகளுக்கும் விவசாயத்துக்கு உதவுகிற கால்நடைகளுக்கும் விவசாயம் செழிக்க உதவுகிற சூரியனாருக்கும் நன்றி கூறும் விதமாகவே கடைப்பிடிக்கப்படுகிறது.

உலகெங்கும் வாழும் தமிழர்களால் குதூகலமாக கொண்டாடப்படும் பொங்கல் என்பதை வெறும் பண்டிகையாக மட்டும் பார்ப்பதில்லை. தமிழ் பண்பாட்டின் அடையாளமாகவும், உறவுகளின் மகத்துவத்தை உணர்ந்து கொள்ள வழிவகை செய்யும் பெருவிழாவாகவும் பார்க்கின்றனர். இதனால் தான் மற்ற பண்டிகைகளை காட்டிலும் பொங்கலை மட்டும் ஊருடனும், உறவுகளுடனும் இணைந்து கொண்டாட வேண்டும் என நினைக்கின்றனர்.

தமிழர்களின் தாயகமான தமிழ்நாட்டில் வெகு விமரிசையாக கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகையை, வட மாநிலங்களில், சூரியன் மகர ராசிக்குள் பிரவேசிக்கும் காரணத்தால் இந்தியாவின் பல

பகுதிகளில் இந்த பொங்கல் திருநாள், மகர சங்கராந்தி எனவும் சங்கராந்தி எனவும் கொண்டாடப்படுகிறது. குஜராத் மற்றும் ராஜஸ்தானில் இப்பண்டிகை உத்தராயன் என்கிற பெயரிலும், பஞ்சாப் மற்றும் ஹிமாச்சல பிரதேசத்தில் லோரி என்றும் கொண்டாடப்படுகிறது. நேபாளத்தில் மாகி, மாகே சங்கராந்தி, மாகே சகாராதி என்கிற பெயர்களில் பொங்கல் போற்றப்படுகிறது. தாய்லாந்தில் சொங்க்ரான் எனவும், லாவோஸ் மக்களால் பி மா லாவ் என்றும், மியான்மரில் திங்க்யான் என்கிற பெயரிலும் பொங்கல் கொண்டாடப்படுகிறது. இதைத் தவிர மலேசியா, கனடா, சிங்கப்பூர், இலங்கை, மொரீஷியஸ் உள்ளிட்ட அனைத்து உலக நாடுகளிலும் கூட விமரிசையாக கொண்டாடப்படுகிறது. மலேசியா, இலங்கை உள்ளிட்ட சில நாடுகளில் பொங்கல் பண்டிகையன்று அரசு விடுமுறையாகவும் அறிவிக்கப்படுகிறது.

### புராணத்தில் பொங்கல் திருநாள்:

சூரிய வம்சத்தில் ஸ்ரீராமனாக அவதரித்து சூரியனை வழிபட்ட மகாவிஷ்ணு, ஸ்ரீகிருஷ்ண அவதாரத்தில் தன் மகன் சாம்பனுக்கு தான் அளித்த சாபம் நீங்க, மகனிடம் சூரிய பூஜை செய்யச் சொன்னார். அவ்வாறு சாம்பன் பூஜித்த நாள் பொங்கல் திருநாளாகும். தருமர், அகத்தியர் ஆகியோர் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடி சூரிய பகவானை வழிபட்டதாக புராணங்கள் கூறுகிறது.

### சங்க காலத்தில் பொங்கல் திருநாள்:

பொங்கல் பண்டிகையின் வரலாற்றை பார்க்கையில் இரண்டாயிரம் வருடங்களுக்கும் முன்பாக கடைப்பிடிக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் உள்ளன.

சங்ககாலத்தில் அறுவடை காலத்தில் நல்ல மழை பெய்யவும், நாடு செழிக்கவும் பெண்கள் விரதத்தைக் கடைப்பிடித்தார்கள். தை முதல் நாளில் இந்த விரதத்தை முடிப்பார்கள். உழவர்கள் மழையின் உதவியால் ஆடி மாதம் முதல் உழைத்துச் சேர்த்த நெல்லை மார்கழியில் வீட்டிற்கு கொண்டு வந்து, தமது உழைப்பின் பயனை அனுபவிக்க தொடங்குவார்கள்.
தமது உழைப்பிற்கு உதவிய இயற்கைக்கும், தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும், தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விதமாக சர்க்கரைப் பொங்கல் படைத்தது வழிபட்டனர்.

தை உண் என்றும் தை நீராடல் என்றும் சங்க காலத்தில் இப்பண்டிகைப் பற்றிய குறிப்புகள் இருப்பதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். சங்க காலத்தில் பொங்கல் நாளை அறுவடை விழாவாகவே தமிழர்கள் கொண்டாடியிருக்கின்றனர் என்பதனை சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானூற்றின் இருபத்திரண்டாம் பாடல் விளக்குகிறது.

'அலங்கு செந்நெல் கதிர் வேய்ந்த பாய் கரும்பின் கொடிக்கீரை சாறு கொண்ட களம் போல….' என்று குறந்தோழியூர் கிழார் எனும் புலவர் அறுவடை விழாவை சாறு கண்ட களம் என வருணிக்கின்றார். இதைத்தவிர சங்ககால நூல்கள் பலவற்றில் தைத்திருநாளை பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

'தைஇத் திங்கள் தண்கயம் படியும்' (நற்றிணை)
'தைஇத் திங்கள் தண்ணிய தரினும்' (குறந்தொகை)
'தைஇத் திங்கள் தண்கயம் போல்' (புறநானூறு)
'தைஇத் திங்கள் தண்கயம் போது' (ஐங்குறுநூறு)
'தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ' (கலித்தொகை)
எனப் பலவாறாக தைத்திருநாளின் சிறப்பியல்புகளை பழந்தமிழர் இலக்கியங்கள் தெளிவுபடுத்திக் காட்டுகின்றது. சீவக சிந்தாமணி என்னும் காப்பியத்திலும் பொங்கல் பற்றி குறிப்பிடும் போது...

'மதுக்குலாம் அலங்கல் மாலை
மங்கையர் வளர்த்த செந்தீப்
புதுக்கலத்து எழுந்த தீம்பால் பொங்கல்'
என பொங்கலினை குறிப்பிடுகின்றது.

"மணிமேகலை" காப்பியத்தில், இந்திர விழா என்ற பெயரில் பொங்கல் கொண்டாடப்பட்ட அக்காலத்தில், காவிரி பூம்பட்டினத்தில், மன்னர்கள், மக்களுக்கு முரசறைந்து, பொங்கல் விழா வரவிருப்பதை அறிவிப்பார்கள். அக்காலத்தில் பொங்கல் விழா இருபத்தெட்டு நாட்கள் வரை நடந்திருக்கிறது. மேலும் இந்தியா, ஈழம் ஆகிய நாடுகளை அடிமைப்படுத்தியிருந்த போர்த்துகீசியர்கள் பொங்கலின் சிறப்பினை கூறியுள்ளார்கள். அதாவது கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் தென்னிந்தியாவுக்கு வந்த

அப்போடுபாய் எனும் போர்த்துகீசிய அறிஞர், தான் எழுதிய 'இந்துக்களின் பழக்க வழக்கங்களும், வாழ்க்கை முறைகளும்' எனும் நூலிலே பொங்கல் பண்டிகையை உழவர்களின் அறுவடை நாளாக சிறப்பாக கொண்டாடப்பட்டதாக குறிப்பிட்டிருக்கின்றார். சோழர்கள் காலத்தில் இவ்விழா 'புதியீடு' என்கிற பெயரால் அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## நான்கு நாள் பண்டிகை:

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை தினம் அன்று பொங்கல் வைத்து சூரியனை வழிபடுவதால் நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் கூடிய ஆனந்த வாழ்வு பெற முடியும். பொங்கல் பண்டிகை பெரும் திருவிழாவாக நான்கு தினங்கள் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பண்டிகை கொண்டாடப்படுகிறது. முதல் நாள் போகி பண்டிகை, இரண்டாம் நாள் தை பொங்கல், மூன்றாம் நாள் மாட்டுப் பொங்கல், நான்காம் நாள் காணும் பொங்கல். கிராமங்களில் இன்றும் பொங்கல் வருவதற்கு முன் வீட்டிற்கு புது வர்ணம் பூசி வீட்டை அழகு படுத்துகிறார்கள்.

## முதல் நாள் போகிப் பண்டிகை:



தமிழ் ஆண்டின் மார்கழி மாதத்தின் கடைசி நாளன்று போகி பண்டிகை கொண்டாடப் படுகிறது. இந்நாள் பழையவற்றையும், உபயோகமற்றவையும் அகற்றும் நாளாகக் கருதப்படுகிறது. இப்பண்டிகையைப் "போக்கி" என்று கொண்டாடினர். அந்தச் சொல் நாளடைவில் மருவி "போகி" என்றாகிவிட்டது. போகி பண்டிகையன்று, அதிகாலையில், அனைவரும் எழுந்து வீட்டில் உள்ள தேவையற்ற, பழைய பொருட்களை வீட்டின் முன்பு வைத்து தீயிட்டு கொளுத்துவார்கள். அல்லவை அழிந்து நல்லவை வரட்டும். பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற மொழிக்கேற்ப போகி பண்டிகை கொண்டாடப்படுகிறது. மனதில் இருக்கும் தீய எண்ணங்களும், தவறான எண்ணங்களும் நீக்கப்படவேண்டும் என்பது இதில் உள்ள தத்துவமாகும். கிராமங்களில் வீட்டின் கூரையில் பூலாப்பூ வைக்கின்றனர். போகிப் பண்டிகையின் போது போளி, வடை, பாயசம் போன்றவை இறைவனுக்கு நிவேதனம் செய்யப்படும்.

## இரண்டாம் நாள் தைப்பொங்கல்:



பொங்கல் விழாவை தை முதல் நாளில் ஆண்டுதோறும் கொண்டாடுகிறோம். இத்திருநாள் சூரியக் கடவுளுக்கு உரிய திருநாள். துன்ப இருளகற்றி எல்லோர் மனதிலும் இன்பம் பெருகும் வகையில் உழவிலும், வாழ்விலும் ஒளிதரும் சூரியக் கடவுளுக்கு நன்றி செலுத்தும் நாள் இத்திருநாள். அன்று பானையில் நல்ல தண்ணீர் ஊற்றி சந்தனம், குங்குமம் இட்டு, மஞ்சள் கொத்து முதலியன சேர்த்துக் கட்டி, அடுப்பில் வைத்து புது அரிசி போட்டு பொங்கி வரும் வேளையில், வெல்லமும், ஏலமும், பாலும் கலந்து உலை பொங்கிவழியும் வேளையில் "பொங்கலோ பொங்கல்" என்று குடும்பத்தார் எல்லோரும் ஒன்றுகூடி சொல்லி வழிபடுகின்றனர்.

பூஜை அறையில் திருவிளக்கேற்றி முதலில் மஞ்சள் பிள்ளையார் பிடித்து விநாயகர் பூஜை செய்த பிறகு, பொங்கிய பொங்கலை தலைவாழை இலையில் இட்டு பழங்கள், கரும்பு, மஞ்சள் கொத்து, இஞ்சி கொத்து முதலியவற்றை வைத்து பூக்களால் அர்ச்சனை செய்து, தூபதீபம், கற்பூரம் காட்டி சூரிய பகவானை வணங்கி வழிபாடு செய்கின்றனர். பின்பு 'ஆதித்யஹ்ருதயம்', 'சூரிய காயத்ரி' சொல்லி தியானித்து வணங்கி வழிபடுவது மிகவும் நன்று. நகர்ப்புறங்களில் உள்ளோர் வீட்டுக்குள் பொங்கல் வைத்தாலும் பால்கனி அல்லது மொட்டைமாடியில் பொங்கலை நிவேதனம்

செய்து சூரியனை வழிபடுகின்றனர்.

## மூன்றாம் நாள் மாட்டுப் பொங்கல்:



பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கலன்று உழவுக்குப் பயன்படும் காளைகளுக்கும், பால் கொடுத்து உதவும் பசுக்களுக்கும் விழா எடுப்பது, ஆண்டெல்லாம் நமக்காக உழைக்கும் மாடுகளுக்கு நன்றி கூறும் தினமாக கொண்டாடப்படுகிறது. கிராமங்களில் காளை மாடுகள், பசுக்களின் கொம்புகளுக்கு புது வர்ணம் பூசி, நன்கு குளிப்பாட்டி, அவற்றை அலங்காரம் செய்து, மாட்டுப் பொங்கல் தினத்தின்போது படையலிட்டு வழிபாடு செய்வார்கள். பின்னர் மாடுகளுக்கு பொங்கல் அளிக்கப்படுகிறது. கழுத்தில் புது மணி கட்டி, கொம்புகளை சீவி விட்டு சுதந்திரமாக திரிய விடுவார்கள். மாட்டுப் பொங்கலன்றும், பொங்கல் வைத்து வீட்டில் உள்ள மாடு, கன்றுகளைப் பூஜித்து வணங்குவதால், முப்பது முக்கோடி தேவர்களையும் வணங்கிய பலன் கிடைக்கும் என்பதாக ஐதீகம்.

'கணுப்பிடி': மாட்டுப் பொங்கலன்று பெண்களின் மாங்கல்ய பலத்திற்காகவும், உடன்பிறந்தோரின் நலனுக்காகவும் "கணுப் பிடி' என்று சொல்லப்படும் விசேஷ நிகழ்வு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் கொண்டாடப்படுகிறது. கணுப்பிடியில், "மஞ்சள் குங்குமத்துடன் நிறைந்த சுமங்கலியாக வாழவும், உடன் பிறந்த சகோதரர்களும் நீடூழி வாழவும்" பிரார்த்தனை செய்து கொண்டு முதல் நாள் செய்த சர்க்கரைப் பொங்கலுடன் மஞ்சள் மற்றும் சிவப்பு நிறச் சாதங்கள், தயிர் சாதம், கரும்பு, வெற்றிலை, பாக்கு போன்றவற்றை மஞ்சள் கொத்து இலையில் "காக்காய் பிடி வைத்தேன், கணுப் பிடி வைத்தேன்" காக்கை கூட்டம் போல எங்கள் குடும்பமும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று கூறிகொண்டே காக்கை, குருவிகளுக்கு பரிமாறுவார்கள்.

இன்றைய தினம் சகோதரர்கள் தன் சகோதரிகளுக்கு பரிசுகளை தருவார்கள். மற்றும் சித்ரான்னங்கள் செய்து இறைவனுக்கு நிவேதனம் செய்வார்கள்..

## நான்காம் நாள் காணும் பொங்கல்:



தமிழர் திருநாளின் இறுதியில் வருவது காணும் பொங்கல். இன்றைக்கு உறவுகளும் நட்புகளும் கூடி மகிழ்ந்து பொங்கல் பண்டிகையை நிறைவு செய்கின்றனர்.

இந்நாளில் மக்கள் தங்கள் உற்றார் உறவினர்கள், நண்பர்களைச் சென்று சந்தித்து தங்கள் அன்பையும் உணவுப் பண்டங்களையும் பகிர்ந்து கொள்வர். சுற்றுலாத் தலங்களுக்கும், பொழுதுபோக்குமிடங்களுக்கும் இந்த நாளில் போவது வழக்கம். இன்று தான தர்மம் செய்வதும் பெரியோரிடம் ஆசி வாங்குவதும் வழக்கம்.

இன்றைய தினம் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், உரி அடித்தல், வழுக்கு மரம் ஏறல் என பல வீர சாகசப் போட்டிகள் நடைபெறும். தென் மாவட்டங்களில் ஜல்லிக்கட்டு என்னும் மாடுபிடி விளையாட்டு இந்நாளில் நடைபெறும். பழங்காலத்தில் இந்திய நாணயமாகிய சல்லிக் காசுகளை மாடுகளின் கொம்பில் கட்டிவைத்திருப்பார்கள். மாட்டை அடக்குபவர்களுக்கே அந்த காசு பரிசளிக்கப்படும். இந்த சல்லிக்காசே பின்பு ஜல்லிக்கட்டாக மாறி அழைக்கப்படுகிறது.

வழிபாடு, உயர்ந்த சிந்தனை போன்றவை மிகுந்த பாரம்பரிய தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையை கொண்டாடி, அனைத்து மங்கலங்களும் பெறுவோம்!!

# எல்லாக் காரியங்களிலும் வெற்றிபெற....

~ ரா.பன்னீர் செல்வம்

மனிதர்கள் அனைவருக்குமே தான் செய்கின்ற அத்தனை காரியங்களிலும் வெற்றியே கிட்ட வேண்டும் என்கிற எண்ணம் எப்போதும் உண்டு! இப்படி எல்லா காரியங்களும் வெற்றி பெற வேண்டுமானால் அனைத்து தேவதைகளின் ஆசியும் கண்டிப்பாக வேண்டும்.

அனைத்து தேவதைகளின் ஆசியையும் பெற்றுத் தருகின்ற ஸ்லோகம் ஒன்றை 'சௌந்தர்ய லஹரியில்' மகான் ஆதிசங்கரர் தந்தருளியுள்ளார். அதை மந்திரமாய் பிரயோகிக்கும் முறைகளை அறிந்து கொள்வோம்.

### மந்திரப் பாடல்

"ப்ருவௌ புக்னே கிஞ்சித்ப்புவன - பய பங்க வ்யஸநிதி
த்வதீயே நேத்ராப்யாம் மதுகர - ருசிப்யாம் த்ருத - குணம்
தனுர் - மண்யே ஸ்வ்யேதரகர - க்ருஹீதம் ரதிபதே:
ப்ரகோஷ்ட்டே முஷ்டௌச ஸ்தகபதி நிகூடந்தர - முமே"

### பாடலின் பொருள்

உலக மாந்தர்களின் பயத்தைப் போக்குவதற்கென்றே அவதரித்த அன்னையே! உயர்ந்து, வளைந்து காணப்படுகின்ற புருவங்கள் அழகிய வில்லைப் போன்றும் வண்டுகளைப் போல பளபளக்கும் கண்கள், அந்த அழகிய வில்லில் பூட்டப்பட்ட கணைகள் போன்றும் தோன்ற, அதனை இடதுகையால் பிடித்து அதன் மைய பாகம் தெரியாதவாறு முழங்கையும் விரல்களும் மறைத்திட, மன்மதன் கையில் விளங்கும் வில் போன்று தோன்றுகிறது. இதன் வேகத்தால் அனைத்து தேவதைகளின் அருளாசியும் கிடைக்கும் என்றே தோன்றுகிறது.

இந்த மந்திரத்தைபிரயோகிக்கும் முறை:

தங்கத் தகட்டிலோ அல்லது விபூதியைப் பரப்பி, அதிலோ இந்த மந்திரத்திற்கான யந்திரத்தை வரைந்து கொள்ள வேண்டும்.

தினமும் 1000 முறை வீதம் வடக்கு முகமாக அமர்ந்து 25 நாட்களுக்கு இந்த மந்திரத்தை ஜபித்திட வேண்டும்.

சிவப்பு வண்ணத்தில் உள்ள மலர்களைக் கொண்டு லலிதா த்ரிசதி அர்ச்சனை செய்ய வேண்டும்.

அவ்வேளையில் தேங்காய், பழங்கள், தேன் ஆகியவை கொண்டு நைவேத்தியம் செய்திட வேண்டும்.

இவற்றை மேற்கண்டவாறு செய்து இந்த மந்திரத்தை ஜபித்து வர, அனைத்து தேவதைகளின் அருளும் ஆசியும் கிடைக்கும். அதன் மூலம் நாம் ஈடுபடும் அனைத்து காரியங்களிலும் எளிதாக வெற்றி கிடைக்கும்.



# பொன்னுக்கு சமமான கீரை பொன்னாங்கன்னி (பொன்னாங்கண்ணி)

~ கீதா மணி



சாதாரணமாக வீடுகளில் தானே வளரும் இயல்பு கொண்டது பொன்னாங்கண்ணிக்கீரை. நீர் வளமிக்க பசும் புல்தரையில் பச்சை நிறத்துடன் வளரும் இக்கீரை இரண்டு வகையாக உள்ளது. சற்று அகலமான சிவப்பு இலைகளைக் கொண்டது ஒரு வகை, இதனை தோட்ட அழகுக்காக பயன்படுத்துவார்கள். இன்னொரு வகை முன்பு சொன்னப்படி நல்ல பச்சை நிறத்தில், வெண்ணிறப் பூக்களுடன் முளைப்பது. சத்து மிகுந்த இதனை மட்டுமே மருத்துவத்துக்கும், சமையலுக்கும் பயன்படுத்த வேண்டும். சமையலில் பொரியல் செய்து உன்னகையில், நல்ல சுவையைத் தரக்கூடியதே இரண்டாம் வகை பொன்னாங்கன்னிக் கீரை, பகல் உணவில் மட்டுமே இந்தக் கீரையை சேர்த்துக் கொள்ளல் நல்லது .

நம் உடலுக்கு உறுதியையும் நல்ல பலத்தையும் அளிக்கக்கூடிய பொன்னாங்கன்னிக்கீரை கண் பார்வை மங்கல், வயது முதிர்வதால் வரும் சானேஸ்வர உபாகை, கண்ணை திரையிட்டு மறைக்கும் கண் வியாதி இவற்றைப் போக்கும்.
வான நட்சத்திரங்களை பகலிலே கூட பொன்னாங்கன்னிக் கீரையை தொடர்ந்து உணவில் சேர்த்துக் கொள்வோர் பார்க்க முடியும் என்பது நிபுணர்களின் கணிப்பு! பொன்னாங்கன்னி இலையை நன்கு அரைத்து விட்டு தண்ணீர் பானையின் மேல் வில்லை வில்லையாக தட்டி வைத்து, தொடர்ந்து 30 நாட்கள் கட்டி வந்தால் மங்கியுள்ள கண் பார்வை பளிச்சிடும்.

இந்த எளிய முறையை எவரும் பயன்படுத்த முடியும். குறைந்து போன கண் பார்வை கொண்டவர்கள், பெரும்பாலும் வயதில் முதிர்ந்தவர்கள், பசுமையான பொன்னாங்கண்ணி கீரை இலைகளைப் பறித்து, அதனை பசு நெய்விட்டு நன்கு வதக்கி விட்டு இளஞ்சூடாக, இரவில் தூங்குவதற்கு முன்பாக கண் இமைகளில் வைத்துக் கட்டி வந்தால் தெளிவான கண்பார்வையை பெறலாம்.

கண் எரிச்சல், புகைச்சல் உள்ளவர்களும், மண்டை உஷ்ணத்தால் பாதிக்கப்பட்டோரும் பொன்னாங்கன்னி தைலம் தயாரித்து, தினமும் தடவி வர, மண்டை உஷ்ணம் நீங்கி, கண்பார்வை பளிச்சிடும். பொன்னாங்கன்னி இலைகளை பறித்து, அத்துடன் உப்பில்லாமல் பசும் வெண்ணை சேர்த்து, நன்றாக வேகவைத்து வெந்தவுடன் அவியலாக செய்து பகல் உணவில் மட்டும் எடுத்துக்கொண்டு தொடர்ந்து 40

நாட்கள் உண்டு வர கண் சம்மந்தப்பட்ட அனைத்து நோய்களும் பறந்தோடி விடும் என்பது சித்தர்களின் கண்டு பிடிப்பு! காய்ச்சலுக்கு சரியான மருந்தான பொன்னாங்கன்னி, செரிமானத் தன்மையையும் கூட்ட வல்லது.
தாய்ப்பால் நன்கு சுரக்க வைக்கக்கூடியது இக்கீரை என்பதால் தாய்மார்களுக்கு வரப்பிரசாதமாகிறது. பொன்னாங்கன்னியில் புரதம், கொழுப்பு, நார்ப்பொருள், மாவுப்பொருள் கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்து, ரைபோபிளோவின், நியாசின் மற்றும் வைட்டமின் - சி ஆகிய சத்துக்கள் கூடியுள்ளதால், இக்கீரையை தீவனமாக உண்ணும் பசுக்கள் தரும் பால், சிறந்த மருந்தாகவும் ஆகிறது.

ஏழைகளின் தங்க பஸ்பம் என்று உயர்வாகக் கூறப்படும் பொன்னாங்கண்ணி கீரை பற்றி சித்தர் தேரையர் இப்படி கூறியுள்ளார். ”காசம் புகைச்சல் கருவிழி நோய் வாதமனல் கூசும் பீலிகம் குதாங்குர நோய் பேசி வையால் என்னாங் காணிப் படிவம் எமம் செப்ப லென்னைப் பொன்னாங்கண்ணியைப் போற்று” இதன் விளக்கமென்னவென்றால், “கண் காசம், கருவிழி நோய், கண் புகைச்சல், வாதம், பித்தம், கூச்சம் உண்டாக்கும் கோழை, வாயில் ஏற்படும் பிற நோய்கள் போவதோடு பொன்னிறமான உடலையும் வழங்குவதால் பொன்னாங்கண்ணியைப் போற்றி உண்ணல் வேண்டும்“ என்று கீரைகளின் ராஜாவான ”பொன்னாங்கண்ணிக் கீரையை எவ்வகையிலும் அடிக்கடி உணவில் சேர்த்து உண்டால் மனிதர்கள் நூறாண்டு காலம் கண் பார்வை தெளிவு பெற்று வாழலாம் என அருளி கூறியுள்ளார் வள்ளலார் ஸ்ரீ ராமலிங்க அடிகளார் அவர்கள்.

கொடுப்பை, சீதை, ஸ்ரீதேவி என்ற கூடுதல் பெயர்களையும் கொண்ட பொன்னாங்கண்ணி கீரையின் காம்புகளை கிள்ளி வீட்டில் வைத்தால் கூட அது சுலபமாக துளிர்விட்டு முளைக்க ஆரம்பிக்கும். இக்கீரை கொண்ட மிகச் சிறப்பு இயல்பு அது பூமியில் உள்ள பொன் சத்துக்களை சுலபமாக உறிஞ்சிக்கொண்டு ஒரு கற்பக மூலிகை அதை விளங்குவதே.
வெறும் 100 கிராம் எடை கொண்ட இக்கீரையில் பல ஊட்டச்சத்துக்கள் இப்படி நிறைந்து காணப்படும் நீர்சத்து 80 கிராம், எரிசக்தி 60 கலோரி புரதச்சத்து 4.7 கிராம், கொழுப்புச்சத்து 0.8 கிராம், மாவுச்சத்து 11.8 கிராம், நார்சத்து 2.1 கிராம், சுண்ணாம்புச்சத்து 14.6 மில்லி கிராம், பொட்டாசியம் 45 மில்லி கிராம் மற்றும் இதை தவிர உடலுக்கு புத்துணர்ச்சி வருவதற்கும், உடலுக்கு இருந்த சோகையைப் போக்கி, இரத்த உற்பத்தி சக்தி கொண்ட “கரோட்டின்“ என்பதனையும் கொண்டு சிறக்கிறது இந்தப் பொன்னான கீரை.

உடல்பருமன் கொண்டோர், அதனைக் குறைக்க பொன்னாங்கண்ணிக் கீரையுடன் மிளகும், உப்பும் சேர்த்து சாப்பிட்டு வர உடல் எடை குறைந்து விடும் என்பதும், அந்தக் கீரையை துவரம் பருப்பு, நெய்யுடன் சேர்த்து தொடர்ந்து சாப்பிட்டு வர உடல் எடையை கூட்டிக் கொள்ளலாம் என்பதும் நாட்டு வைத்திய கணக்கீடு.
நல்ல தூக்கம் வேண்டுவோர் பொன்னாங்கண்ணிக் கீரையை தங்கள் தினசரி உணவு பட்டியலில் இடம் பெறச் செய்தல் நலம்.

பாம்புக்கடி விஷத்தை கூட பொன்னாங்கண்ணிக் கீரை சாறு முறியடித்து விடும் எனவும் அறியப்பட்டுள்ளது.

இக்காலத்தில் தங்கத்தின் விலை நாளுக்கு நாள் உச்சத்தையும் தாண்டி ஏறிப் போனாலும், அந்த பொண்ணுக்கு இணையான பொன்னாங்கண்ணிக்கீரை மட்டும் ஏழை எளியோரும் பயன்படுத்தும் வகையில் இன்று வரை அதிகம் உயராமல் இருந்து வருவது, நாம் பெற்ற பேறல்லவா!

# அரிய ஆன்மீக தகவல்

~ ரா. பன்னீர் செல்வம்

திருநள்ளாறு தர்பாரண்யேஸ்வரர் ஆலயத்திற்கு சென்று, அங்கு சனீஸ்வர பகவானை வழிபட, முன்னோர்கள் சில விதிகளை வகுத்து வைத்திருக்கிறார்கள். அதன்படி பார்க்கப்போனால்..... அங்கு செல்பவர்கள் நேராக சனீஸ்வரன் சன்னதிக்கு சென்று அர்ச்சனை செய்து வழிபட்டு, அதன் பின்பு மிகவும் பொறுமையாக ஆலய வலம் வந்து இறைவனை வழிபடுகின்றனர். இது தவறு!

திருநள்ளாறு வழிபாடு செய்வது குறித்து சில விதிமுறைகள் இருக்கின்றன. அவற்றை பார்ப்போம்!

பக்தர்கள் முதலில் நளதீர்த்தத்திற்கு செல்ல வேண்டும். குளத்தை வலம்வந்து நலச்சக்கரவர்த்தி, தமயந்தி, அவர்களது குழந்தைகளின் சிலைகளை வணங்க வேண்டும்.

அதன்பின் நல்லெண்ணை தேய்த்து, குளத்தில் மூழ்கி நீராட வேண்டும். அதன்பிறகு பிரம்ம தீர்த்தம், சரஸ்வதி தீர்த்தம் ஆகிய குளங்களுக்கு சென்று அந்தக் குளத்தின் தீர்த்தத்தை தலையில் தெளித்துக் கொள்ள வேண்டும்.

அதன்பிறகு தான் கோவிலுக்குள் செல்ல வேண்டும். கோவிலுக்குள் முதலில் சொர்ண கணபதி, சுப்ரமணியர் சன்னதிகளில் வணங்கி, பிறகு மூலவர் தர்ப்பாரண்யேஸ்வரரை அர்ச்சனை செய்து வணங்கிட வேண்டும். பிறகு, அருகே உள்ள தியாகராஜர் சன்னதியை வணங்கிட வேண்டும்.

அதன்பிறகு வலமாக வந்து அம்மன் சன்னதி சென்று அர்ச்சனை செய்து வணங்குதல் நலம்!

இப்படி அம்மை, அப்பன் உப தெய்வங்கள் என அனைத்து சன்னதிகளிலும் வணங்கிய பிறகே, கடைசியாக சனி பகவானை வணங்க வேண்டும் என்பது சரியான வழிபாட்டு முறையாகும்.

திருநள்ளாறு செல்லும் பக்தர்கள் ஒரு நாள் முழுக்க ஆலயத்தில் தங்கி இருந்தால் சனீஸ்வரனின் அருள் பரிபூரணமாக கிடைக்கும். அப்படி முடியவில்லை என்றால் ஒரு இரவு அங்கே தங்கி, காலையில் தரிசனம் செய்து வழிபடுவது சிறப்பாகும்.

சனி கிரகத்தின் நீள்வட்டப் பாதையில் உச்சம் பெறும் அந்த கிரகத்தின் கதிர்கள் இந்தப் பகுதியில் படுகிறது என்பது அறிவியல் உண்மை! அந்தக் கதிர்வீச்சு நம் உடலில் படுகின்ற போது சனிபகவானின் அருள் கிடைத்து, தோஷங்கள் விலகிவிடும் என்பது ஆன்மீக அதிசயம்!

ஒரு காத தூரம்சுற்றளவிற்கு சனி பகவானின் அனுக்கிரகம் பார்வை இந்த தளத்தின் மீது படுவதால் பக்தர்களுக்கு நிச்சயம் ஒரு மாற்றம் ஏற்படும் என்பது உண்மை!



# அருள் தரும்

# அங்காள பரமேஸ்வரி!!

~ திருவாரூர் சு.சேகர்.

இந்த உலகில் அனைத்திற்கும் ஆதியும் அந்தமும் ஆன அன்னை ஆதிபராசக்தி எத்தனையோ அவதாரம் எடுத்து அரக்கர்களையும், அதர்மத்தையும் அழித்து மக்களையும் மற்ற உயிர்களையும் காத்து வருகின்றாள். ஆனால் இறைவனை காக்க இறைவி எடுத்த அவதாரமே அங்காள பரமேஸ்வரி அம்மன் அவதாரம். இந்த அம்மன் தமிழகமெங்கும் அங்காளம்மன், அங்காளபரமேஸ்வரி, பெரியாயி, பூங்காவனத்தம்மன், பெரியாண்டிச்சி என்று பல பெயர்களில் மக்களால் வணங்கப்பட்டு வருகிறார்.

நம்முடைய வழிபாட்டு முறைகளில் பெண் தெய்வங்கள் மிக முக்கியத்துவம் பெறுபவை. அன்னை ஆதிபராசக்தி, தாயின் கருணையோடு தன்னை நாடி வரும் பக்தர்களின் துயரங்களை துடைத்தெறிந்து அருள் பாலிக்கிறாள். தாயினும் கருணை மிகுந்த பெண் தெய்வங்களை நாடி செல்ல முக்கிய காரணம் எளிமையான வழிபாடு முறைகள். பல குக்கிராமங்களில் இன்றைக்கும் கிராம தேவதைகள் பல லட்சம் மக்களுக்கு அருள் பாலித்து காத்து வருகின்றன.

அங்காளம்மன் அல்லது அங்காளபரமேஸ்வரி என்பவர் இந்து சமயத்தினர் வணங்கும் பெண் தெய்வங்களில் ஒருவராவார். இந்த அம்மனை பலர் குல தெய்வமாக வழிப்படுகிறார்கள். சிவனின் உடலில் இடப்பாகத்தில் சரிபாதியாக இருப்பதால் பார்வதி தேவி அங்கம் ஆளும் ஈஸ்வரி என்று அழைக்கப்பட்டார். இப்பெயர் மருவி தற்போது அங்காளபரமேஸ்வரி என அழைக்கப்படுகிறார்.

வல்லாள கண்டன் எனும் அரக்கன் சிவபெருமானிடம் இரு வரங்களை பெற்றார். அந்த வரங்களைக் கொண்டு தேவர்களை துன்புறுத்தினார். அரக்கனைக் கொல்ல பார்வதி தேவி ஆறு அவதாரங்களை எடுத்தார். அதில் எரிந்து சாம்பலானார். அச்சாம்பலைத் திரட்டி சிவபெருமான் அங்காளம்மனை உருவாக்கியதாக புராணங்கள் கூறுகின்றன.

## அங்காள பரமேஸ்வரியின் தோற்றம்:

ஆதியில் பிரம்மதேவன் ஐந்து தலைகளுடன் இருந்தார். பிரம்மாவின் ஐந்தாவது தலையை சிவபெருமான் கிள்ளி எறிய, சிவனுக்கு பிரம்மஹத்திதோஷம் ஏற்பட்டது . சிவபெருமானின் பிரம்மஹத்தி தோஷம் நீக்கும் பொருட்டும், கலியுக மாந்தர்கட்கு அருள்பாலிக்கும் பொருட்டும், அன்னை பராசக்தி சிவ சுயம்பு புற்றுருவாக அவதாரம் செய்து அங்காளம்மனாக எழுந்தருளிய புண்ணியஸ்தலம் தான் தண்டகாரண்யம் என்னும் மேல்மலையனூராகும். இத்திருக்கோயிலில் அம்மன் வடக்கு நோக்கி அமர்ந்து நம்மை காத்து வருவது ஓர் சிறப்பம்சமாகும்.

**கோயிலின் சிறப்பு:** மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி கோயில் விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் வட்டத்தில் அமைந்துள்ளது. இத்தலத்தில் கருவறையில் உள்ள புற்றையே அங்காளம்மனாக வழிபட்டு பூசிக்கின்றார்கள் இங்குள்ள அங்காள பரமேஸ்வரியை புற்று தேவி என்றே கூறுகிறார்கள். சுயம்பு புற்று அம்மன் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாக கருதப்படுகிறது. இங்குள்ள புற்று மண்ணை மக்கள் பிரசாதமாக எடுத்துச் செல்கின்றனர். இது ஒரு பிரார்த்தனை ஸ்தலமாக விளங்குகிறது. இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் சித்தாங்கு,கபால வேடமிட்டு மஞ்சள் ஆடை அணிந்து வருவதும், பெண்கள் வேப்பஞ்சீலை கட்டிக்கொண்டு வருவதும், அங்கபிரதட்சனம் செய்வதையும் நேர்த்திக்கடனாக செய்கின்றனர் குலதெய்வ வழிபாடு செய்ய மக்கள் வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் இத்திருக்கோயிலுக்க வந்து மொட்டையடிப்பது, காதணி விழா நடத்துவது, மற்றும் பொங்கல் வைத்து பூஜை செய்வது, அம்மனுக்கு அபிஷேக ஆராதனை செய்வது போன்றவைகளை செய்கின்றனர்.

இக்கோயிலில் மாதந்தோறும் அமாவாசை மற்றும் பௌர்ணமி நாட்கள் இங்கு விசேஷ நாட்களாகக் கருதப்படுவதால் அத்தினங்களில் இங்கு பக்தர்கள் அதிகளவில் கூடுகின்றனர்.

அமாவாசை நாட்களில் ஆலயத்தில் கூட்டம் நிரம்பி வழியும். அமாவாசைதோறும் நள்ளிரவு 12.00 மணிக்கு அங்காளம்மன் ஊஞ்சல் உற்சவம் வெகுசிறப்பாக நடத்தப்படுகிறது. பௌர்ணமி தினங்களில் அந்த ஆலயம் பக்தர்கள் வந்து வணங்க இருபத்தி நான்கு மணிநேரமும் திறந்து வைக்கப்பட்டு உள்ளது.

மேல்மலையனூர் அங்காளம்மன் திருக்கோயிலில் வருடந்தோறும் மகாசிவராத்திரியையொட்டி பத்து நாள் பிரம்மோற்சவ விழா நடைபெறுகிறது. மாசி மாதம் மகா சிவராத்திரியன்று தொடங்கி ஏழாம் நாள் தேரோட்டத்தின் போது கிராமத்தினர் புதிய தேரில் அம்மனை உட்கார வைத்து ஊர்வலமாக எடுத்துச் செல்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் தேரோட்ட நிகழ்ச்சி முடிந்தபிறகு அந்த தேரை பிரித்துவிட்டு, அடுத்த ஆண்டின் தேரோட்டத்துக்கு புதிய தேர் செய்யப்படும்.



அங்காள பரமேஸ்வரிக்கு நடைபெறும் வருடாந்திர திருவிழாவின்போது மயானக் கொள்ளை என்ற பெயரில் பெரிய விழா நடக்கும்போது பக்தர்கள் மயானத்தில் அம்மனுக்கு பலதரப்பட்ட தானியங்களைக் கொண்டு வந்து உணவு சமைத்து அதை அங்காள பரமேஸ்வரிக்கு நைவேத்தியம் செய்து ஆராதிக்கின்றார்கள்.

கணவனை பிரிந்திருப்பவர்கள் மற்றும் கணவனின் தொந்தரவுக்கு ஆளாகி இருப்பவர்கள் இங்கு வந்து அங்காளபரமேஸ்வரியை வழிபட்டால் பிரச்னை தீரும் என்பது நம்பிக்கை . பொதுவாக எந்த பாதிப்பு வந்தாலும் அங்காளபரமேசுவரியை மனதில் நினைத்தாலே போதும், அவள் வந்து துன்பத்தைத் தீர்த்து வைப்பதாக பக்தர்கள் கருதுகின்றனர்.

ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி காயத்ரி
ஓம் ஆதி சக்தி ச வித்மஹே
அங்காளபரமேஸ்வர்யை தீமஹி
தன்னோ சக்தி ப்ரசோதயாத். ”
ஓம் மஹா சக்தியைச்ச வித்மஹே
சிவ பத்னிச தீமஹி
தன்னோ அங்காள பரமேஸ்வரி ப்ரசோதயாத்
ஓம் காளிகாயை வித்மஹே
மாதாஸ்வரூபாயை தீமஹி
தன்னோ அங்காளி ப்ரசோதயாத்

ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி ஸ்லோகம்,
ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம்
ஓம் நமோபகவதி
அங்காளபரமேஸ்வரி ஏஹியேஹி
ஸகல சௌபாக்யம் மே தேஹி தேஹி
சகல கார்ய ஸித்திம்
குரு குரு ஓம் நமஹ் ஸ்வாஹா.

மேலே உள்ள சுலோகத்தை 18 முறை கூறி, பானகத்தை நிவேதித்து மனதார வழிபட. அன்னை மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி. தீயசக்திகள், தீராத துயரங்கள் தரும் எதிர்மறை எண்ணங்கள் நீங்குவார் என்பது ஐதீகம்.

## ஓம் சக்தி..!
## ஓம் சக்தி பராசக்தி…!!

# நல்லதே நடக்கும்

~ ரா.பன்னீர் செல்வம்

காலை முதலே அந்த கிராமத்து மக்களில் பலர் குடும்பத்தோடும் தனித்தனியாகவும் மலையடிவாரத்தை நோக்கி, வரிசை வரிசையாக சென்று கொண்டிருந்தனர்.

இவர்களில் சிலர் ஆவலோடும் வெகுசிலரோ குழப்பத்தோடும் வேறு பலரோ உற்சாகத்தோடும் சென்றனர். இப்படி கலவையான மனநிலையோடு அனைவரும் எதற்காக அங்கே செல்கிறார்கள்? ராஜ மங்களம்!

இரண்டு புறம் பசுமை படர்ந்த மலைகளும் மற்ற இரண்டு புறம் செழுமை மிகுந்த வயல்களும் சோலைகளும் சூழ்ந்த அழகிய சிற்றூர்! உழுதுண்டு வாழும் மக்கள்! ஒரு சிலரே செல்வந்தர்! அங்குமிங்குமாக நாகரீகத்தின் நிழல் படிந்திருந்தாலும் வெள்ளந்தியான மக்கள் நிறைந்த இந்த ஊரின் மலையடிவாரத்தில் ஓர் முனீஸ்வரன் கோவில் உள்ளது.

பிரம்மாண்டமான முனீஸ்வரன் சிலையும் மிகப்பெரிய குதிரைகளின் சிலையும் அமைந்து மலையடிவாரத்தின் அந்த பகுதியையே அமானுஷ்யமாக காட்டிக் கொண்டிருக்க,

இந்த மக்கள் அந்த இடம் நோக்கி, அணி அணியாய் செல்வதன் காரணம் என்ன?....
முனீஸ்வரன் சிலைக்கு சற்று தூரத்தில் இருந்தது ஓர் மகிழமரம்! அந்த மரத்தின் அடியில் ஒரு சாமியார் வந்து அமர்ந்திருப்பதாகவும் தெரிந்தது! மலையடிவாரத்தில் மாடு மேய்க்கும் மூர்த்திதான் அவரை முதலில் பார்த்தாராம். மேய்ச்சலுக்கு அவன் ஓட்டிச்சென்ற மாடுகளில் ஒரு மாடு காணவில்லை என்று அவர் அருகில் சென்று கவலையோடு புலம்பி இருக்கிறான். அவர் புன்னகையோடு அவனைப் பார்த்து, 'அந்த மாடு சேரவேண்டிய இடத்திற்கு போய் சேர்ந்துவிட்டது! நீ, கவலைப்படாமல் போ', என்று சொன்னாராம்

இருப்பினும் மாட்டை காணவில்லையே என்னும் வருத்தத்தோடு மூர்த்தி வீட்டுக்கு வந்து பார்த்தால் மாடு அங்கே இருந்திருக்கிறது, சாமியார் சரியாக சொன்னாரே என ஆச்சரியப்பட்ட மூர்த்தி, அக்கம் பக்கத்து வீட்டாரிடம் சொல்ல, நேற்றே அவர்கள் அவரைப் போய் பார்த்து வணங்கியிருக்கிறார்கள்.

சிலர் கேட்ட கேள்விகளுக்கு பூடகமாக பதில் சொல்லியிருக்கிறார். சிலரது கேள்விக்கு புன்னகையையே பதிலாக தந்திருக்கிறார் மக்களும் சாமியார் ரொம்ப சக்தி வாய்ந்தவர் என்று கொண்டாடி அதன் விளைவு என்று கிராமமே அவரை பார்க்க படையெடுத்து போய்க்கொண்டிருக்கிறது

போகின்ற வழியில் இரண்டு பேர் பேசிக்கொண்டே சென்றார்கள். ஒருவன், "தங்கம்மா புருஷன் அவள விட்டுப் பிரிஞ்சி போனதே அப்படியே சொல்லிட்டாராமே!" ஆச்சரியத்துடன் சொல்ல, உடன் வந்தவன், "நேத்து வந்த சாமியாருக்கு பத்து வருஷத்துக்கு முன்னாடி ஓடிப்போன தங்கம்மா புருஷனைப் பத்தி எப்படி தெரிஞ்சது?!" என எதிர்கேள்வி போட,
"அட... அவன் பேரக்கூட அப்படியே சொல்றாராமே!" என மேலும் ஆச்சர்ய மூட்டினான், முன்னவன்!
இவர்களுக்குப் பின்னால் வந்துகொண்டிருந்த பெண்களில் ஒருத்தி, "அட, அது என்ன பிரமாதம்?!... நம்ம ராசமாளுக்கு ரெண்டு பொண்ணு, ஒரு பையன்னு கரெக்டா சொல்லிட்டாராம். அதல மூத்தவன், ஊர விட்டு வெகு தூரம் போயி சம்பாதிச்சு போடறதையும் சரியாகவே சொன்னாராம்", என வாய் பிளந்தாள்!
வேகமாக வந்த ஒருவன், "அவரு என்ன...... அருள்வாக்கு சொல்ற சாமியாரா?"... என புரியாமல் கேட்க, வேற ஒருவன், "தாயத்து, மை ஏதாவது கொடுக்கறாரா?".... என ஆவலோடு கேட்டான்!
"ஒருவேள.... சித்தரா இருப்பாரோ?"...
"பேசறதையெல்லாம் பார்த்தா, பெரிய வேதாந்தி மாதிரி தெரியுது!"

“சில சமயம் அவரு பேசறத புரிஞ்சுக்கவே முடியல யாமே!”
“யாருக்கும் வெளங்காம பேசுறார்னா..... அவரு கண்டிப்பா சித்த புருஷன் தான் இருப்பாரு!”...
“ஆக மொத்தத்துல அவரால நமக்கு ஒரு விடிவு காலம் வரும்னு நம்புவோம்!”...
இப்படி ஆளாளுக்கு தனக்கு தோன்றியதைப் பேசியபடி மலையடிவாரம் நோக்கி சென்று கொண்டிருந்தார்கள்.
மகிழ மரத்தடி மேடையில் சாமியார் புன்முறுவலோடு அமர்ந்திருந்தார். அவரது வலது கையில் கருங்காலிக்கட்டையால் ஆன தண்டம் ஒன்று இருந்தது!
அதனை அடிக்கடி பார்த்துக்கொண்டார் சாமியார்!
அவருக்கு எதிரே, ஊர் மக்கள் அமர்ந்திருந்தனர். கூட்டத்திலிருந்த முனியசாமி எழுந்து சுவாமிகளை நோக்கி சென்றார். வறுமையில் மெலிந்த தேகம்; வயது அறுபதுக்கு மேல்! வேட்டி மட்டுமே இடுப்பில் ஒட்டிக் கொண்டிருந்தது. பக்கத்து ஊரில் உள்ள ஒரு பெரிய கோவிலின் வாசலில் கையேந்தி யாசகம் பெற்று வாழ்பவர்.

விடுவிடுவென சாமியாருக்கு எதிரில் சென்று, முட்டி போட்டு வணங்கினார். “சாமி,.... இந்த கட்டைக்கு எப்போதான் நிம்மதி கொடுப்பான், கடவுள்?” என கைகளை தலைக்கு மேல் குவித்து வணங்கினார்.

சாமியாரோ, புன்னகை மாறாமல், “உன் போன தலைமுறை இருந்ததை எழுதிக் கொடுத்ததால் அடுத்த தலைமுறையான நீ.....இரந்துண்டு வாழ்கிறாய்!..... இருந்ததைக் கொடுத்ததால், இரந்து வாழும் நிலை!.... சரி... இறைவன் தான் உனக்கு உணவளிக்கிறான் என அமைதி கொள்! விரைவில் நல்ல கதி கிடைக்கும்!” என கையை உயர்த்தி ஆசி வழங்கினார்!

நிம்மதியோடு நகர்ந்தார் முனியசாமி! அவரது தந்தை கிராமத்து பள்ளிக்கு வழிவிடும் பொருட்டு, தனது இருந்த 25 சென்ட் நிலத்தை இனாமாக எழுதிக் கொடுத்தவர் என்பது பலருக்கும் தெரிந்ததே! எனவே, சுவாமி சொன்னதன் அர்த்தம் அங்கிருந்த பல பேருக்கு விளங்கியது!

அடுத்து, மகன்களால் கைவிடப்பட்டு வயதான நிலையிலும் உழைத்துச் சாப்பிடும் சிங்காரம் என்பவர் சுவாமியை வணங்கி, “சுவாமி பெத்த புள்ளைங்க ரெண்டு பேருமே, வயசான என்ன தனியா விட்டுட்டு டவுன்ல போய் காரு, பங்களான்னு நல்லா இருக்கானுங்க! வந்து கூட பாக்கல சாமி,” என கண்கலங்கினார் !
அதே புன்னகையோடு சுவாமி அவரிடம் மட்டுமல்ல, எல்லோரையும் பார்த்து பேசினார், “எல்லோருமே முதல் குழந்தைய ஆவலோட பெத்துக்கறிங்க! இரண்டாவது குழந்தை... நீங்களே எதிர்பாராம பொறந்துடறதால அதிர்ஷ்டம்னு சொல்றீங்க! அதவிட.... இது எல்லாம் ஆண்டவன் கொடுத்தன்னு சொல்றீங்க! இப்ப சொல்றேன்..... ஒரு மனிதன் ஆவலோடும் விரும்பியும் பெற்றுக்கொள்வது கல்வி! அதுதான் முதல் குழந்தை! அதிர்ஷ்டத்தால் வருகிற அடுத்த குழந்தை செல்வம்! அது திடீரென நீங்கள் பெற்றுக் கொள்கிற இரண்டாவது குழந்தை! இந்த இரண்டு குழந்தைகளும் இறுதி வரை நிலைத்து நல்லபடியாக இருக்கவேண்டும் என்றால் மூன்றாவது ஒரு குழந்தை எல்லோருக்குமே அவசியம் தேவை! அது ரொம்ப தாமதமாக தான் பெற்றுக்கொள்ள முடியும்! அப்படி ரொம்பவும் தாமதமாக நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய குழந்தை நல்லறிவு என்னும் ஞானம்! அடிபட்டு, மிதிபட்டு, நொந்து போன பின்னாடி.... அதாவது, நல்லது கெட்டதெல்லாம் தெரிஞ்ச பின்னாடி அனுபவத்தால நாம் பெறுவது தானம் ஞானம் என்கிற குழந்தை! ஒருவர் பத்து குழந்தை பெற்றாலும் பதினொன்றாவதாக ஞானத்தைப் பெற்றே ஆகவேண்டும். ஆனால், இந்த சிங்காரமோ தன் மாடுகளை கட்டாமல் விட்டுவிட்டார்! கைமீறிப் போய்விட்டது! இப்போது விட்டதைப் பிடிக்க முடியாமல் வெம்பி உடைக்கிறார். தன் மாடுகளை கட்டுக்குள் வைக்கவேண்டும் என்ற ஞானத்தைப் பெறாமல் போனதால் பெற்றவற்றை இழந்து விட்டார். அதுவும் இறைவனின் செயல் தான்! உற்றார் , சுற்றம், பெற்றபிள்ளைகள், உடன்பிறந்தோர் என யாருடைய தயவையும் எதிர்பாராமல் நமக்குள் உறையும் நமசிவாயத்தை உணருங்கள்! அதுவே நல்ல துணையாய் அமையும்!

இறைவனின் இருப்பைத் தேடி நானும் அலைந்தவன் தான்; சென்ற இடமெங்கும் சிவத்தைக் காணமுடியவில்லை. நம் சித்தத்தில் உறைபவனை ஜகமெல்லாம் தேடினாலும் கிடைப்பானா?.... காண முடியுமா?... நன்கு பழுத்த புளியம் பழம் போன்றே எந்த உறவும் பாசமும் தொடர வேண்டும்!
பழம் உள்ளிருக்கும்; ஓடு மேலிருக்கும்; ஆனால், ஒட்டியிருக்காது! இரண்டுமே தனியாய்த்தான் இருக்கும்! ஆனால், ஒன்றாய் இருப்பது போல் தோன்றுவது மாயை! அப்படி ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்துவது அதனைத் தாங்கி நிற்கும் ஆதாரமான

காம்பு! அந்த காம்பு தான் இறைவன்! அந்த ஈசனின் மீது பாரத்தைப்போட்டு புளியம் பழத்தைப் பாதுகாக்கும் ஓடு போல பாதுகாப்பாய் இருப்பதே உகந்தது! வரும்போது அது அது தன் பாதையில் பயணப்படும். அப்போது, ஒன்றை ஒன்று விட்டு விட்டது என்ற வேதனை வளராது! இறைவன் படைப்பில் எல்லாமே இப்படித்தான்! இதை உணர்ந்து கொண்டால் என்றும் எப்போதும் நல்லதே நடக்கும்", என நீண்ட உபதேசத்தை அருளினார்.

கூட்டத்தினர் தன்னை மறந்த நிலையில் கேட்டுக்கொண்டனர். அப்போது, ஊரின் முக்கியஸ்தர்களில் ஒருவரான முத்துசுவாமி எழுந்தார்! "சுவாமி, எல்லாரும் அவங்கவங்க தனிப்பட்ட பிரச்சினைகளை பத்தி கேட்டாங்க! ஊரோட பிரச்சினையை பத்தி கேட்கப் போறேன்," என சொல்ல,

கேளுங்கள்' என கையை உயர்த்தி சைகை செய்தார் சுவாமிகள்!

"சுவாமி, ஊரோட தென்மேற்கு பகுதியில பழங்கால சிவன் கோவில் ஒன்னு பராமரிப்பில்லாமல கெடக்குது! நான் சின்னப் புள்ளையா இருக்கும் போதிலிருந்தே, கோயில சரி பண்ண பலபேர் முயற்சி எடுத்தும் ஒன்னும் வேலைக்கு ஆகல! அந்தக் கோவிலுக்கு ஒரு விமோசனம் பொறக்குங்களா சாமி!?" என வேண்டி நின்றார், முத்துச்சாமி!

கண்களை மூடிய ஸ்வாமிகள் சற்று நேரம் அப்படியே அமைதியாக இருந்தார். எல்லோரும் பார்த்த படி இருக்க, கண்களைத் திறந்தார் சுவாமி! முத்துச்சாமியை பார்த்து," அந்தக் கோவிலை ஒட்டினாற்போல ஒரு பழைய வீடு உள்ளதா? எனக்கேட்டார்.

"அது வீடு இல்ல சாமி...... குட்டிச் சுவரு!" என ஏளனமாய் சொன்னார் முத்துச்சாமி!

"எல்லா குட்டிச் சுவர்களும் ஒருகாலத்தில் கோட்டையாய் இருந்தவை! எல்லாக் கோட்டைகளும் ஒரு நாள் குட்டிச்சுவராய் போக இருப்பவை! அன்பரே! உங்கள் பார்வையில் உயர்ந்தவன், தாழ்ந்தவன், பெரிய மனிதன் என்னும் வேறுபாடு தெரியும்! ஞானியின் பார்வையில் எல்லா மனிதருமே வருங்காலப் பிணங்கள் தான்! ஆகவே, குட்டிச்சுவர் என்று சொன்னீரே அந்த இடத்தில் முன்மண்டப வாயிலை அமைத்து கோவிலை புரானமைக்கும் முயற்சியை செய்யுங்கள்! இறைவன் அங்கே குடி வருவான்! அழகு மிளிரும் ஆலயம் உருவாகும்!" என்றார், சுவாமிகள்!

"சாமி.... அது பெரியண்ணன் வீடு! எல்லாரும் செத்துப் போய்விட்டாலும் அவரோட மகன் சிவானந்தன் திரும்பி வந்து இடத்தை கேட்டு பிரச்சனை பண்ணினானா?...." என தன் சந்தேகத்தை வெளியிட்டார் முத்துசுவாமி!

அமைதிப் புன்னகையோடு சுவாமி அவரைப் பார்த்து, "அவன் திரும்பியும் வரமாட்டான்; பிரச்னையும் வராது!" என்றார். "எப்படி சாமி சொல்றீங்க? என்றார் முத்துசாமி! "அந்த சிவானந்தத்தை சிவானந்தம் ஆட்கொண்டுவிட்டது! நீங்கள் ஈசனின் ஆலயத்தை எழுப்புங்கள். நல்லதே நடக்கும், ஊருக்கு!" எனக் கூறி சிரித்தார். எல்லோரும் திருப்தியோடு கலைந்து சென்றனர்.

25 ஆண்டுகளுக்கு முன்..... ஒருநாள்! ஜீவானந்தத்தின் தாய் வடிவு, சிவன் கோவிலின் முன்னால் இருந்த சருகை கூட்டித் தள்ள, கையில் எண்ணெயுடன் வந்து ஆலய விளக்கிலே எண்ணெயை ஊற்றினார், பெரியண்ணன்.

பள்ளிக்குப் போய் வந்த சிவானந்தம், அந்த ஆறு வயதில், தன் கரங்களால் வேர்க்கடலையை உரித்து ருசி பார்த்தான்.

அப்போது ஒரு கும்பல் வந்து பெரியண்ணனை தடி கொண்டு தாக்கியது! ரத்த வெள்ளத்தில் சாய்ந்தார், பெரியண்ணன்! அவர் இறப்புக்குக் கூட தோள் கொடுக்க ஊரார் யாரும் வரவில்லை.

அவருக்குக் கொள்ளி வைத்த சிறுவன் சிவானந்தத்தோடு அன்று ஊரை விட்டு வெளியேறினாள் வடிவு!

கோவிலின் வளர்ச்சியால் கோவிலின் சொத்தான நூறு ஏக்கர் நிலம் பறி போய் விடுமோ என அஞ்சிய சிலர், கோவில் பழுதடைந்தே இருக்க வேண்டும் என எண்ணினர்! அந்த கோவிலை பராமரிக்க எண்ணினர் பெரியண்ணன்! எங்கே நிலம் பறி போய் விடுமோ என நினைத்து பெரியண்ணனை அடித்துக் கொன்றனர்! அவர் மனைவி வடிவும் மகன் சிவானந்தம் ஊரை விட்டு வெளியேறினர் அப்போதுகூட சிவானந்தமும் ஊரை விட்டு வெளியேறினர்.

அப்போது கூட சிவானந்தனாகிய சிறுவனிடம் பழிவாங்கும் உணர்ச்சியை வளர்க்கவில்லை வடிவு! அவள் இறந்ததும் தெய்வமே கதி எனத் திரிந்த அவனை இறைவன் ஆட்கொண்டார்.

வடக்கிலே ஒரு மகான், சிவானந்ததின் கையில் கருங்காலி தண்டம் ஒன்றைக் கொடுத்து தீட்சை வழங்கினார். அந்த சிவானந்தம் இன்று பண்பட்ட ஞானியாய், அதே ஊரில்! ஆனால், இந்த மகானை சிவானந்தம் என யாரும் அறியவில்லை!

# திருவையாற்று மகான் ஸ்ரீ தியாகராஜர்!

~ ஆரூர்.ஆர்.சுப்பிரமணியன்



"ஓம் ஸ்ரீ பார்வதி பரமேச் வராய நம:
ஓம் ஸ்ரீ ரங்க நாதாய நம:
ஓம் ஸ்ரீ யோகிச் வர யாக் நவல்க்ய குரவே
நம :

என்ற தாரக மந்திரத்தை தசரத குமாரர் ஸ்ரீராமர், தினமும் அதிகாலையில் எழுந்தவுடன் தவறாமல் உச்சரித்து வந்த அருள் மந்திரமாகும்.

இவ்வபூர்வ செய்தி அலகாபாத்தில் அமைந்திருக்கும் பாரத்வாஜ முனிவரின் ஆசிரமத்தில் உள்ள கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது.

பல உன்னதங்களைக் கொண்ட இந்த தசரத ராமனை எண்ணிக்கையற்ற அளவுக்கு ஆராதனைகள் புரிந்து மூச்சுக்கு மூச்சு ராமநாமத்தை பல கோடி தடவை உச்சரித்து, ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியையே தரிசிக்கும் பாக்கியம் பெற்றவராகத் திகழ்கிறார் திருவாரூரில் அவதரித்து திருவையாற்றில் சித்தி அடைந்த தியாக ப்ரம்மம் என்கிற மகான் தியாகராஜர்!

தியாகப்ரம்மத்தின் வாழ்க்கையில் நடந்த பல சம்பவங்கள் எவரையும் மெய்சிலிர்க்க வைக்கும்! வரும் 22.1.22 ந்தேதி இந்த மகானின் 175 ம் ஆண்டு ஆராதனை நடக்கவிருப்பதால், அவர் காலத்தில் நிகழ்த்திய ஒரு சில சம்பவங்களை அறிந்து மகா நமது பணிவான அஞ்சலிகளை செலுத்தி நாம் ஆனந்தமுறலாம்!

## மகான் தியாகராஜரின் இசை வாழ்வு

தொடக்கத்தில், காஞ்சிபுரத்திலிருந்து விஜயம் புரிந்த மகான் ராமகிருஷ்ண யதீந்திரர் என்பவரை தியாகராஜர் நாடி தரிசித்து வழங்கிய பொழுது, அவரைக் கூர்ந்து நோக்கி ஆசீர்வதித்த யதீந்திரர் "தியாகராஜா! உனக்குப் பிரியமான ராமநாமாவைத் தொடர்ந்து 96 கோடி முறை உச்சரித்து வா! உனக்கு பகவான் ராமனின் தரிசனம் கிட்டும்!" என புன்னகையுடன் அருளினார். அதனை அப்படியே சிரமேற்கொண்டு தியாக பிரம்மம் நாளொன்றுக்கு பல ஆயிரத்தெட்டு தடவைகள் ராம நாமாவை ஜெபித்து வந்து 21 ஆண்டுகளில் 96 கோடி முறைகள் ஜபித்து முடித்தார். இதன் நற்பலன் ஆக ஸ்ரீராமபிரானின் தரிசனத்தை பெறும் பாக்கியசாலியானார் ஸ்ரீ தியாகராஜர்!

இந்த மகானுக்கு கிடைத்த மற்றொரு பேறு, ஒரு சமயம் நாரத ரிஷியே மாறுவேடத்தில் சன்னியாசி வடிவில் வந்து " ஸ்வரார்ணம்" என்ற அற்புத கிரந்தத்தை தியாகராஜருக்கு பரிசாக அளித்து " நீடூழி வாழ்க"! என மனப்பூர்வமாக நல்லாசிகள் வழங்கினார். அதை ஆதாரமாக வைத்து ஸ்ரீராம நாம ஜபத்தை தொடர்ச்சியாக செய்துவந்தார் திருவையாற்று மகான்.

தென்னிந்திய சங்கீதத் துறையில் தனி ஒரு இடம் கொண்ட சிறப்புகளைப்பெற்ற வாக்கேயக்காரர்கள் என உயர்வாக கூறப்படும் சங்கீத மும்மூர்த்திகள் ஆக உள்ளவர்கள்

இவர்கள்-

மகான் சியாமா சாஸ்திரிகள்- காலகட்டம் கி. பி. 1762-1827

மகான் தியாகராஜ சுவாமிகள் - 1767-1846

மகான் முத்துசுவாமி தீட்சிதர்-1776 - 1835

இந்த மகான்கள் காலத்தில் அவர்வர் இயற்றியருளியுள்ள ஆயிரக்கணக்கான சங்கீத உருப்படிகள் மூலம் அவர்கள் பல ராகங்களுக்கு ஜீவனளித்து, ஒவ்வொரு ராகத்தின் ஸ்வரூபத்தையும் அழிந்து போகாமல் தங்களுடைய உருப்படிகள் வாயிலாக இசை உலகத்திற்கு அர்ப்பணித்துள்ளார்கள். ராகங்களை எந்த உச்ச அளவிற்கு கையாள முடியுமோ, அந்த அளவிற்கு இம் மும்மூர்த்திகளும் சாதித்துக்காட்டியுள்ளதை அவரவர் இயற்றியுள்ள உருப்படிகள் மூலம் அறிய முடியும்!

ருக், யஜுர், சாம, அதர்வணம் என்ற நான்கு வேதங்களில் இசை என்கிற சங்கீதம், சாம வேதத்திலிருந்து தோன்றியதாக அறியப்படுகிறது. பின்னர் படிப்படியாக அது லட்சணம், லட்சியம் ஆகிய இரண்டிலும் ஐக்கியமாகி, இன்று வரை மகத்தான உச்சத்தை அடைந்து வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதற்கு முக்கிய காரணகர்த்தாவாக திகழ்பவர்கள் அந்தந்த கால கட்டத்திலும், நிகழ்காலத்திலும் வாழ்ந்த, வாழும் இசை நிபுணர்கள், பக்திமான்கள், கிரந்த படைப்பாளிகள், வாக்கேய வல்லுநர்கள், மற்ற சங்கீத மேதைகள் ஆகியோர் ஆவார்கள்.

18 நூற்றாண்டுகளுக்கும் முன்பு தோன்றிய 72 மேள அமைப்பு முறையினால் கர்நாடக இசை ராக முறை, ஒரு ஸ்திரத்தன்மையைக் கொண்டு நிறைவையடைந்துள்ளது எனப்படுகிறது. இக்கட்டத்தில் தான் 24 மெட்டுக்களுடன் கூடிய தஞ்சாவூர் வீணை அறிமுகத்திற்கு வந்தது எனவும் அறியப்படுகிறது. ஸ்ரீ தியாகராஜ மகான் காலத்திலிருந்து தான் (அதாவது கி. பி 1767-1846) நவீன கால இசை முறை நிறைவுபெற்று ஒரு புனிதத் தன்மையை அடைந்தது என்பது இசை வல்லுனர்களின் கருத்தாக உள்ளது. சுமார் 800 ஆண்டுகள் தஞ்சையை ஆண்டுவந்த சரபோஜி மன்னர் உள்ளிட்ட பல மன்னர்கள் சங்கீதம் மற்றும் நாட்டியக் கலையை நன்கு வளர்த்து தஞ்சை மாவட்ட பூமியையே சங்கீத பூமியாக்கி விட்ட பெருமைகளைப் பெறுகிறார்கள்.

ஸ்ரீ தியாகராஜரின் காலத்தில்தான் நவீன இசை முறை உருப்பெறலாயிற்று. இம் மகான் உள்ளிட்ட மும்மூர்த்திகளின் அரும்பெரும் சேவைகளால், இசைக் கலையின் அனைத்து அம்சங்களுமே மிக மிக மேலானநிலையை பெற்று, நம் இந்திய பண்பாட்டின் புனிதத் தன்மையின் மாண்பினை பிரதிபலிக்கும் கலையாக திகழ பாதை அமைந்தது என்பது சங்கீத நிபுணர் களின் ஒருமித்த கருத்தாகும்.

திருவாரூரில் வாழ்ந்துகொண்டிருந்த இசைப் பாரம்பரியம் வழித்தோன்றிய ஸ்ரீராம ப்ரம்மம் - சீதம்மா என்னும் தம்பதியின் மூன்றாவது மகனாக கிபி 1767 ம் ஆண்டின் மே மாதம் (5.5.1767) 5ம் நாளன்று ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் அவதரித்தார். ஒரு காலத்தில் இம்மகானின் பாட்டனாரான தெலுங்கு பிராம்மண வகுப்பின் பரத்வாஜ கோத்திரக்காரரான ஸ்ரீ கிரிராஜ பிரம்மம் என்பவர் தெலுங்கிலும், சமஸ்கிருதத்திலும் பாண்டித்யம்பெற்ற நிபுணராக திகழ்ந்தார். அப்போதைய தஞ்சை மன்னரால், பல பாராட்டுதல்களைப் பெற்ற அவருடைய கடைசி பிள்ளையே ஸ்ரீ தியாகராஜரின் தந்தையான ஸ்ரீ ராஜ பிரம்மம் ஆவார். தாத்தா கொண்டிருந்த அனைத்து பாண்டித்யங்களும், அவருடைய பேரனான தியாக பிரம்மத்திடமும் வந்து சேர்ந்து விட்டது எனலாம்!

பிறந்ததிலிருந்தே மிக நுண்ணிய புத்தியும், ராம பக்தியும் கொண்டிருந்த ஸ்ரீ தியாகராஜருக்கு குருவாக அமைந்தவர் எஸாண்டி ஸ்ரீ வேங்கட ராமையா என்பவர் ஆவார். அவரிடம் சிறந்த சங்கீத பயிற்சி பெற்றார் அவர். தந்தை ராம பிரம்மத்தின் கனவில் ஒருநாள் திருக்காட்சி தந்த திருவாரூர் தியாகராஜப் பெருமான் அருளி இட்ட கட்டளையின்படி, அந்த இசைக் குடும்பம் திருவையாறு தலத்திற்கு குடிபெயர்ந்தது. அவ்வூர் சிவாலயத்திலும் இறைவன் தியாகேசன் தனிச்சந்நிதி கொண்டு எழுந்தருளி உள்ளது குறிப்பிடத்தக்கது.

தனது இளமைப் பிராயத்தில், கனவிலே, ராமரின் தரிசனத்தை காணும் பேறு பெற்ற ஸ்ரீ தியாகராஜர் இசைப் பயிற்சி இல்லாமலேயே இயற்றிய கீர்த்தனை “நமோ நமோ ராகவாய அஞ்சம்” என்ற தோடிராகமுடையது. குழந்தை தியாகராஜனுக்கு அவருடைய தகப்பனார்ரே ராம தாரக மந்திரத்தை உபதேசித்தார்.

ஸ்ரீ நாரதரின் தரிசனமும் கிடைக்கப்பெற்ற இம்மகான் “ஸ்ரீ நாரத வர நாரத” என்ற கீர்த்தனையையும் இயற்றி தன் நன்றிக்கடனாக சமர்ப்பித்தார்.

வாக்கேயக்காரர்கள் தாங்கள் செய்யும் உருப்படிகளில் தங்களுடைய பெயரையே அடையாள வார்த்தையிலும் முத்திரையை அமைப்பது

ஸ்வநாம முத்திரை என்ற பெயர் கொண்டது. ஸ்ரீ தியாகராஜர் தனது கீர்த்தனைகளில் "தியாகராஜ" என தன்ஸ்வநாம முத்திரையை இடுவார்.

ஸ்ரீ தியாகராஜரின் உருப்படிகளில் சிறந்ததாகவும், அவருடைய வாக்கேயக்காரத்துவத்தின் முதிர்ச்சியையும் எடுத்துக்காட்டும் 5 கீர்த்தனைகள் பஞ்சரத்ன கீர்த்தனை என்று போற்றப்படுகிறது.
அவை "ஜகதானந்த காரகா", எனும் நாமா, கௌள ராகத்தில் அமைந்த துடுகுல, ஆரபி ராகத்தில் அமைந்த சாதின் செனே, ஸ்ரீ ராகத்தில் அமைந்த எந்தரோ, வராளி ராகத்தில் அமைந்த கன கனருசி எனும் தேனினும் இனிமை கூடிய அற்புத கீர்த்தனைகள் ஆகவும் விளங்க இந்த பஞ்சரத்ன கீர்த்தனைகளை இசைக்காத கர்நாடக சங்கீத வித்வான்கள் இல்லை எனலாம். சாவேரி என்ற ஜன்ய ராகம் 15 வது மேள கர்த்தாவாகிய மாய மாளவ கௌள விலிருந்து பிறந்ததாகும். இசை நாடகங்களில் பயன்படும் இந்த ராகத்தில் சுலோகங்கள், பந்தயங்கள், விருத்தங்கள் பாடுவது ஏற்றது. இந்த ராகத்தில் உள்ள உருப்படிகள் அனேகமாக ஷட்ஜம், பஞ்சமம், தைவதம் முதலிய ஸ்வரங்களிலும், சிற்சில உருப்படிகள் காந்தார ராகத்திலும் ஆரம்பமாகும்.
மகான் தியாகராஜர் ஒரு முறை இந்த சாவேரி ராகத்தை 8 மணி நேரம் தொடர்ந்து ஆலாபனை செய்து பெரிய சாதனை படைத்தார் என்பதை அறிய நம்மை வியப்பு பற்றும்!

கீர்த்தனை படைப்பாளிகள் தாங்கள் இறைவனை புகழ்ந்து பாடும் தோரணையில் சாகித்தியங்கள், அமைப்பதோடு, தெய்வத்தை நொந்து கொள்ளும் வகையிலும் அதனை அமைப்பது நடைமுறையில் ஒன்று. இப்படி அமைக்கும் கீர்த்தனைகள் "நிந்தாஸ்துதி" என்ற வகையாகும். அப்படி மகான்தியாக பிரம்மம் அமைத்த புகழ்பெற்ற கீர்த்தனையே "அடிகி சுகமு லெவ்வரு" என்ற தெலுங்கு கீர்த்தனை.

தியாகராஜர் தொகுதி கீர்த்தனை முறையில் அமைத்த, பிரதம கனராகங்களில் இயற்றிய பஞ்சரத்ன கீர்த்தனைகள், திருவொற்றியூர் பஞ்சரத்னம், கோவூர் சுந்தரேச பஞ்சரத்னம், போன்றவைகள் காலத்தால் அழியாது என்றும் இடம்பெற்றிருக்கும்!

பக்தி மார்க்கத்தில் அமைந்த கானம் என்பது வைதிக கான வகையாக, இதன் சாகித்திய அமைப்பு கடவுளைப்" புகழ்ந்து போற்றுவது. ஸ்ரீ தியாகராஜனின் உருப்படிகள் அனேகம் இவ்வகையைச் சேர்ந்ததே. இவருடைய பஞ்சரத்ன, கீர்த்தனைகளில் ஒன்றான "துடுகுகல" என்பது லௌகீக கான முறையாகும். உலக விஷயங்களில் தொடர்பு கொண்ட விஷயங்களை சாத்தியமாக கொண்டதுதான் லௌகீக கானம்.
"ராம நாமம் என்பது அற்புத ருசி கொண்ட ஒரு பாயசம்! இதில் கிருஷ்ண நாமம் சர்க்கரையாக சேர்க்கப்படுகிறது. விட்டலாரின் நாமம் இதில் நெய்யாகவும், மனித அகங்காரம் கோதுமையாகவும், வைராக்கியமானது அதை சிறு ரவையாக்கும் எந்திரமாயும், மனித இதயம் பானையாகவும், அதில் நீர் சேர்த்து " பாவம்" என்னும் இனிப்பையும் சேர்த்து நன்றாக இவைகளைக் கொதிக்க விட்டு புத்தியினால் சமைக்க வேண்டும்.

பின்பு பாயசம் உருவானவுடன் அதில் ஒரு துளி எடுத்து வாயில் விட்டு நக்கி, சப்புக் கொட்டி சுவைக்கையில் பாண்டுரங்க விட்டலனையும் மனதில் சிறிது நினைக்கலாமே!" என்ற கீர்த்தனையை ராமநாம பாயஸெக்கே, கிருஷ்ண நாம ஸக்கரே என்று தொடங்கும் கன்னட மொழி கீர்த்தனை தந்த புரந்தர தாசரை மகான் தியாகராஜர் தான் படைத்த பிரகலாத பக்த விஜய நூலில் புகழ்ந்து உரைப்பார்!
108 வைணவத் தலங்களில் ஒன்றான ஸ்ரீரங்கத்தில், சித்திரைப் பெருவிழா, அன்று நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது ஸ்ரீரங்கநாதர் தங்க குதிரை வாகனத்தில் வீற்றிருக்கும் அற்புதக் காட்சியை அவ்வூர் தெற்கு வீதியில் தரிசிக்கும் ஆவலில் ஸ்ரீ தியாகராஜர் காத்திருந்தார். ஆயிரக்கணக்கான மக்கள் முன்னே இருக்க, ஏதோ ஒரு மூலையில் தூர நின்று பார்த்துக் கொண்டிருந்தார் அவர். அவருடைய உள்மனதில் பெருமாளை கிட்ட நின்று தரிசிக்கலாமே என்ற ஆசை இருந்தது.

தொலைவிலேயே பெருமான் தரிசனம் பெற்ற தியாக பிரம்மம் தன் கண்களில் ஆனந்த கண்ணீர் பொங்க ராஜு வெடலெ முராரே கஸ்தூரி ரங்கா"

என்ற கீர்த்தனையை மெய்சிலிர்க்கும் வகையில் இயற்றிப் பாடினார். இப்பாடலின் பொருள் "வான் தேவர்கள் மலர் தூவ, மன்னர்கள் கொற்றவேல் சேவை புரிய ஒளிவீசும் ஆபரணங்களுடன் அரங்கன் பவனி புரிய, தியாகராஜர் பக்தியுடன் துதிக்க, காவேரிக் கரையில் அமைந்த புனித ஸ்ரீரங்கத்தில், சித்திரை வீதியில் ஆனந்தமுடன் ஸ்ரீ ரங்கராஜர் பவனி வர, அதனைக் கண்டு களிக்க வாரீர்" என்பதாகும்.

ஸ்ரீ தியாகராஜர் இப்படி பாடி முடித்த கணத்தில், பெருமாளின் தங்க குதிரை வாகனம் மேற்குப் பகுதிக்கு வழக்கப்படி திருப்பப்பட்டது. ஆனால் மேற்கொண்டு ஒரு அங்குலம் கூட அது நகரவில்லை. வாகன சுமை கூடவே, அதனை சுமந்தவர்கள் மேற்கொண்டு ஊர்வலத்தை தொடர இயலாமல் போனதோடு, அதனை பூமியில் இறக்கியும் விட்டார்கள். இம்மாதிரி சமயங்களில் ஏற்றப்படும் பரிகார தீபாராதனை செய்தும் கூட இதே நிலைதான்!

என்ன செய்வது என விழா குழுவினரும், கூடியிருந்த அனைவரும் பதட்டமுடன் இருக்கும் நிலையில், வாகனத்தில் பகவான் சமீபம் இருந்த ஆலய பக்தர் ஒருவருக்கு தெய்வ ஆவேசம் வரப்பெற்று அவர் உரத்த குரலில்" என் அருமை பக்தன் தெற்கு வீதியில் அமர்ந்து என்னை கிட்ட நின்று பாடி தரிசனம் புரியும் ஆவலோடு காத்திருக்கிறான்.

அவனை இங்கே அழைத்து வாரும்"! எனக் கத்தினார். உடனே விவரம் தெரிந்த சிலர் தெற்கு வீதி முடிவில் வாத்தியமுடன் நின்று இருந்த ஸ்ரீ தியாகராஜரை கண்டுபிடித்து, அவரை வினயமாக வணங்கி பெருமாள் வாகனத்தின் மிக அருகில், அழைத்துச் சென்றனர்.

மிக மன மகிழ்ச்சியுடன் ஸ்ரீ ரங்கநாதரை தரிசித்து மெய்மறந்த நிலையில் "வினராத நாமனலினி" என்ற கீர்த்தனையை இயற்றி அதனை தேவகாந்தாரி ராகத்தில் பாடினார். மகான் இப்பாடலின் பொருள் இப்படி அமையும்.

"காவேரி ரங்க! வைபோக ரங்க!! தியாகராஜன் பணியும் ஸ்ரீகாந்த!! பொன்மேனியனே! நீ குதிரையில் எழுந்தருளுகையில், ராஜ மாதரும், தியாகராஜனும் உன்னை அன்புடன் அழைத்ததால், அந்த வேண்டுகோளுக்கு செவிசாய்த்தலாகாதா?" என உருகிப் பாடினார். அவ்வளவுதான், அப்போது வாகனத்தை சுமந்தவர்கள், மீண்டும் பகவானை தூக்குகையில், சுலபமாக அவர்கள் தூக்க முடிந்தது, வாகனம் மேற்கு வீதியில் பவனியை துவங்கியது.

இதனைக் கண்டு ஸ்ரீ தியாகராஜரின் பெருமாள் பக்தியை அனைவருமே உணர்ந்து, அவரை தரிசித்து களிப்புற்றனர்.

இங்குதான் மகான் காம்போதி ராகத்தில் " ஓரங்க சாயி" எனும் கீர்த்தனையையும் " ஜூதா முராரே" என்ற கீர்த்தனையையும் இயற்றியருளினார் எனப்படுகிறது.

முன்பே நாரத மாமுனிவரின் அருள் பெற்ற தியாக ப்ரம்மம் தமது பூஜை முறையை புகழ்பெற்ற கீர்த்தனையான "பரிபாலய பரிபாலய பரிபாலய ரகுநாத" என்பதை ரீதி கௌளை ராகத்தில் அற்புதமாக இயற்றியுள்ளார்.

இந்த இனிமையான பூஜா விதியை சுருக்கமாக விளக்கவும் பாடலை இசைக்க சங்கீத வித்வான்கள் கிடையாது என அடித்துச் சொல்லலாம்!

ஒரு சந்தர்ப்பத்தில் மகானின் பலவித திறன்களை பற்றி கேள்விப் பட்டிருந்த அப்போதைய தஞ்சை மன்னர் சரபோஜி, தூதுவர் ஒருவரை அவரிடம் அனுப்பி, அவருக்கு தன் சமஸ்தானத்தில் ஆஸ்தான வித்வான் பதவி அளிப்பதாகவும், தன்னைப் பற்றி பாடுமாறும் கூறச் செய்ய, அதனை ஏற்க மறுத்துவிட்டார் மகான். அந்த தூதுவரிடம் தியாக ப்ரம்மம் கூறிய பதில்

"ராமனை பாடும் வாயால் மனிதனை யான் பாட மாட்டேன்"! என்று, அச்சமயம் அவர் இயற்றிய கீர்த்தனையே பிரசித்திபெற்ற" நிதி சால சுகம்?" என்பது.

குடும்பப் பொறுப்பும், சம்பாதிக்கும் எண்ணமுமின்றி சதா வீட்டில் உள்ள ராமர் விக்ரகத்திற்கு பூஜை புரிவதும், கீர்த்தனை படைப்பதும் ஸ்ரீ தியாகராஜரின் நித்திய கடமையாகவிருந்தது, அவருடைய மூத்த சகோதரர் ஜப்யேசனுக்கு வெறுப்பைத் தந்தது. அதனால் சினங்கொண்ட அந்த அண்ணா, மகான் ஆராதித்து வந்த ஸ்ரீராமரின் திருஉருவை காவிரி ஆற்றில் வீசி எறிந்து விட்டார். இவ்விஷயம் தம்பிக்கு தெரியாது.

தனது ராமர் காணாமல் போய்விட்டதை அறிந்து துடிதுடித்து போனார் மகான்.

இதுபற்றி அவர் தன் மனைவி இன்னும் அக்கம்பக்கம் உள்ளோர் அனைவரையும் விசாரித்து தகவல் கிடைக்காததால் கண்ணீர் மல்க உருகிப் போனார். ஊன், உறக்கத்தையும் இழந்துவிட்ட நிலையில் சதா ராமநாம ஜெபத்தையே ஜெபித்துக் கொண்டிருந்த ஸ்ரீ தியாகராஜரின் கனவில் அவர் மீது இரக்கம் கொண்ட ராமபிரான் "தியாகராஜா! கவலை ஏன்? நான் இவ்வூர் ஆற்று மணலில் புதைந்து கிடக்கிறேன். என்னை மீட்டு எடுத்துச் செல்" எனக் கூறியதோடு, தனது இருப்பிடம் குறித்தும் அடையாளம் காட்டி" மறைந்து போய் விட்டார்.

உடனே ஆவலுடன் கனவில் ராமர் காட்டிய அடையாளத்தைக் கொண்டு மகா நாட்டுக்குச் சென்று மணலைத் தோண்ட, அங்கே அவர் பூஜிக்கும் ராமர் விக்ரகம் தென்பட்டது. அதனை மகிழ்ச்சியுடன்

தழுவிக் கொண்ட மகான், விக்கிரகத்தை ஜாக்கிரதையாக எடுத்துக் கொண்டு தனது இல்லம் திரும்பி புனர் பூஜை செய்தார். அவ்வேளையில் தியாகராஜர், "ரா ரா மாயிண்டிதாக ரகுவீர ஸீ குமாரம் ரொக் கெ தரா" என்ற அசாவேரி ராக கீர்த்தனையை பாடியருளியுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த அற்புத நிகழ்வால், அச்சம் கொண்ட மகானின் அண்ணா தன் தம்பியின் ஆழ்ந்த பக்தியை உணர்ந்து அவரிடம் பெரும் மதிப்பு கொண்டதோடு, ராமர் வழிபாட்டிலும் பிறகு தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டாராம்!

பல ஆண்டுகளுக்கு முன்பு மகான் ராமகிருஷ்ண யதீந்திரர் என்பவர் வழிகாட்டியபடி தியாகராஜர் தினமும் பல ஆயிர ராம நாம ஜபத்தை செய்து வந்து 96 கோடி ராம ஜபத்தை முடித்த வேளையில் நடந்த ஒரு சம்பவமாக கூறப்படுவது இது.

பூஜையில் இருந்த ஸ்ரீ தியாகராஜருக்கு தன் வீட்டுக் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. உடனே வாயிற்கதவைத் திறந்த மகான் ஆச்சரியமும், ஆனந்தமும் பெறுமளவிற்கு அங்கே ஸ்ரீராமபிரான், அவரது இளவல் லட்சுமணன் மற்றும் விசுவாமித்திர மகரிஷி ஆகியோர் திருக்காட்சி தந்து நின்றுகொண்டிருந்ததே.

பரபரப்புடன் தன் இல்லம் வந்த ராமபிரான் உள்ளிட்டவர்களை வீட்டின் உள்ளே அழைத்துச் சென்ற ஸ்ரீ தியாகராஜர் அவர்களை வலம் வந்து "ஏல நீ தயராது பராகு ஜேஸே" என்ற கீர்த்தனையை அடாணா ராகத்தில் இசைத்து மகிழ்ந்தார்.

இதனை கேட்டவாறே, தன் ஆசிகளை மகானுக்கு வழங்கியபடி இராமரும் மற்றும் உடன் வந்தவர்களும் மறைந்து போயினர்.

ஸ்ரீ தியாகராஜர் தனது வாழ்நாள் காலத்தில் நாரத பஞ்சரத்னம், கொத்து கிருதிகள், கனரக பஞ்சரத்னம், திருவொற்றியூர் பஞ்சரத்னம், கோவூர் பஞ்சரத்னம், ஸ்ரீரங்க பஞ்சரத்னம், லால்குடி பஞ்சரத்னம், என 24,000 க்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இயற்றி அருளியுள்ளார். ஆனால் இவற்றில் 700 கீர்த்தனைகள் மட்டுமே கிடைத்துள்ளன.

சதா "ராமா! ராமா"!! என ராமநாமத்தையே ஜெபித்து வந்த மகான் ஸ்ரீ தியாகராஜர் தான் இன்னும் 10 தினங்களில் ஸ்ரீராமரின் பாதத்தில் இணைந்து விடுவேன் என்று தனது சீடர்களிடமும், பக்தர்களிடமும் முன்கூட்டியே தெரிவித்து விட்டார்.

அதன்படியே மகான் 1837 ம் ஆண்டு, ஜனவரி மாத 6 ம் நாள், பகுள பஞ்சமி திதியில், திருவையாற்றில் உள்ள அவருடைய இல்லத்தில் கிழக்குப்பக்கம் ஒளிப் பிழம்பாக காட்சி தந்த ஸ்ரீ ராமரிடம் ஐக்கியமாகிவிட்டார்! கடைசியாக அப்போது மகானின் திருவாயிலிருந்து பிறந்த வார்த்தை " என்னை ஸ்ரீராமபிரான் அழைக்கிறான்!" என்பதாகும்

மகான் ஸ்ரீ தியாகராஜர் எனும் ஸ்ரீ ஸத்குரு தியாக பிரம்மத்தின் 175 வது வருட மகோற்சவ விழா நிகழும் பிளவ பல்வ ஆண்டு தைமாத 9 ம் தேதி இணையும் புஷ்ய பகுள பஞ்சமி திதி கூடிய சனிக்கிழமை புண்ணிய தினத்தில் ( ஆங்கிலதேதி 22.1.22) திருவையாற்று திருத்தலத்தில் வழக்கம் போல் மிகச் சிறப்பாக நடக்க உள்ளது.

இப்புனித விழாவையொட்டி திருவையாற்றில் உள்ள ஸ்ரீ தியாக பிரம்மம் குடிகொண்ட சமாதியிலும், அதன் அருகே உள்ள தனியான இடத்திலும் முறையே ஆலய சார்பிலும், ஸ்ரீ தியாக பிரம்மம் விழா கமிட்டி சார்பிலும் விசேட ஆராதனை விழா அரங்கேற இருக்கிறது.

சில தினங்கள் தொடர்ந்து நடக்கவிருக்கும் ஸ்ரீ தியாக பிரம்மம் உற்சவத்தின்போது அஷ்டபதி பஜனை, ஸ ஹஸ்தர ஆவர்த்திகணபதி ஹோமம், அகண்ட ராம நாம ஜபம், த்வ்ய நாம சங்கீர்த்தனம், டோலோற்சவம், ஸ்ரீமத் ராமாயண பாராயணம், ஆவஹந்து ஹோமம், ஸ்ரீ சீதாராம ஸ்வரூப தம்பதி பூஜை மற்றும் புஷ்ய பகுள பஞ்சமி நாளன்று ஸ்ரீ தியாக பிரம்ம ஆராதனை, மதியம் 1 மணி அளவில் ஸ்ரீ தியாகராஜரின் சமாதியில் ஸ்ரீ தீர்த்த நாராயண பூஜை, இறுதி விழா தின ஸ்ரீ ஆஞ்சநேயர் உற்சவம், மங்கள ஹாரத்தி போன்ற விழாக்கள் இடம்பெறும்.

இவ்விழா நாட்களில் பிரபல முன்னணி மற்றும் இளம் வித்வான்கள், பல வாத்திய வித்வான்கள் ஒன்றாகத் திரண்டு வந்து இசை அஞ்சலி செலுத்துவார்கள். ஸ்ரீ தியாகராஜரை தரிசிக்கவும், இசையை அனுபவிக்கவும் பக்தர்கள் திரளாக திருவையாற்றில் கூடுவார்கள்.

இப்புகழ் கொண்ட திருவையாறு தலம் சென்னையிலிருந்து 335 கி.மீ. தூரத்திலும், தஞ்சாவூரிலிருந்து சுமார் 13 கி.மீ. தூரத்திலும், கும்பகோணத்திலிருந்து சுமார் 38 கி.மீ. தூரத்திலும் அமைந்திருக்கிறது.

திருவையாறு பயணிக்க புகைவண்டி, பேருந்துகள் மற்றும் வாடகைக் கார் வசதிகள் உள்ளன.

ஸ்ரீ தியாகராஜ சர்மா
(ஸ்ரீ தியாக ப்ரம்மம் பரம்பரையாளர் மற்றும் ஸ்ரீ ராஜு சீனிவாசன் உறவினர்)

ஸ்ரீ தியாக ப்ரம்மம் திருநாமம் வாழ்க!

# நாமக்கல் அனுமன்

~ ஆண்டாள் மைந்தன்

ஓம் ஆஞ்சநேயாய வித்மஹே வாயுபுத்ராய தீமஹி
தந்நோ
மாருதி ப்ரசோதயாத்:
அஞ்சனை மைந்தனே
மங்கள மாருதியே
மங்கள வாழ்வருள் வாய்
மனதார பணிகின்றேன்!



# இன்பங்கள் பொங்கட்டும்!

~ ஆண்டாள் மைந்தன்

விண்ணிலே மேகம் கூடி வியத்தகு மழையாய் மாறி
மண்ணிலே பயிர்க ளெல்லாம்
மறைந்திட செய்த தென்ன?
கண்ணிலே நீரும் தோய
கவலையில் வீழ்ந்த மக்கள்
என்னசெய்வார்கள் என்று
இயற்கையயேன் எண்ண வில்லை?!
ஒருபுறம் மகிழ்ச்சி வெள்ளம்:
ஒருபுறம் துயரின் வண்ணம்!
தெருவெல்லாம் நீரின் ஆட்சி:
தீவென்றே ஊரின் காட்சி!
பெருகிய வெள்ளக் காற்றில்
பருத்த நெல்மணிகள் மூழ்க
கருகிய உழவன் நெஞ்சில்
கனல் வந்து சூழ்ந்த தம்மா!
மனதெல்லாம் இன்பம் பொங்க
மழைவரும் என்றி ருந்தார்!
அணையது உடையும் வண்ணம்
ஆர்ப்பரித் திட்ட தேனோ?!
இனம்புரி யாத வாட்டம்
இனியொரு நாளும் வேண்டாம்!
இணையிலா இயற்கைத் தாயே!
இன்பங்கள் பொங்கச் செய்வாய்!

# தீப வழிபாட்டு முறை

~ ஆ. விஜய பிரபு!

தினமும் வீட்டில் தீபம் ஏற்றி வழிபடுவதால் செல்வம் பெருகும்.

மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும், மகிழ்ச்சி அதிகரிக்கும், துன்பம் நீங்கும், நிம்மதி கிடைக்கும்.

தினமும் பிரம்ம முகூர்த்த நேரத்தில் தீபம் ஏற்றி வழிபடுவது மிகவும் சிறப்பு.

இந்த நேரத்தில் விளக்கு ஏற்றி வழிபடுவதால் அனைத்து நன்மைகளும் நடக்கும். சுவாசம் சீராகும், உடல் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கும், மனநிம்மதி கிடைக்கும் மற்றும் உங்கள் வேண்டுதல் நிறைவேறும்.

நெய் தீபம் ஏற்றுவதால் அனைத்து விதமான சௌகரியங்களும் உண்டாகும்.

நல்லெண்ணை தீபம் ஏற்றுவதால் தீமைகள் அகலும்

(சுத்தமான, உயர்தரமான நல்லெண்ணெய் மற்றும் நெய்) பயன்படுத்த வேண்டும். பஞ்சுத் திரி, தாமரைத் தண்டுத் திரியில் தீபம் ஏற்றினால் சர்வ மங்களமும் லட்சுமி கடாட்சமும் உண்டாகும்.

விளக்கு ஏற்றும் குறிப்புகள்:

திருவிளக்கு ஏற்றுவதற்கு முன் சந்தனம், மஞ்சள், குங்குமத்தால் திலகமிட்டு மாலையிட்டு பின் தீபம் ஏற்ற வேண்டும்.

திருவிளக்கை தீக்குச்சியின் மூலம் நேரடியாக ஏற்றுவதை விட சிறு காமாட்சி விளக்கின் மூலம் ஏற்றுவது சிறந்தது.



# ‘தை‘ மகள் வாழியவே!

~ ரா.பன்னீர் செல்வம்

“பொங்கியதே புது வெள்ளம்“, என்றாள் பூவை!
பொன்போல விளையும்“ என நின்றான் காளை!
“தங்கிடுமா சுகமெல்லாம்? “ கேட்டாள், பாவை!
“தாலியுடன் வந்துவிட்டேன்! ; என்றான் காளை!
“செங்கமலம் கதிர்காண ஏங்கு“ தென்றாள்!
“செங்கதிரும் வீடு வந்து சேரும்“ என்றான்!
“மங்கலங்கள் பொங்கிடுமோ, வாழ்வில்?“ என்றாள்!
“மாங்கல்யம் தைப்பிறந்தால் வாய்க்கும் “என்றான்!
“அத்தைமகன் உனக்காக காத்தி ருந்து
அல்லலுறும் பூங்கொடி நான்!“ உடைந்து நின்றாள்!
“இத்தை” மகள் வந்தவுடன் இல்லறத்தில்
“இணைந்திடுவோம்; இன்பமினி நமக்கே!“ என்றான்.
“ஒத்தையிலே இருப்பாரோ! உள்ளம் பொங்க
உங்களுக்கு ஏற்றதுணை சேர்க்க இந்த
“தை“த்திருநாள் வழி வகுக்கும்; தரணி போற்றும்
“தை“மகளை வரவேற்போம்!“ வாழ்க, வாழ்க!!

# அனுமனின் ராம பக்தி!

~ ஆரூரன்

அவன் ஒரு தீவிர ஆஞ்சநேய பக்தன்.

சொக்கட்டான் விளையாட்டில் நிபுணன் கூட! அவனுடன் அந்த விளையாட்டில் பந்தயம் கபடி தோற்றவர்கள் ஆயிரக்கணக்கான பேர்கள். அவனுக்கு ஒரு விசித்திரமான ஆசை, தான் இஷ்ட தெய்வமாக வணங்கி வரும் அனுமனுடன் சொக்கட்டான் ஆட வேண்டும் என்று.

தன் இந்த விருப்பத்தை எப்படியாவது நிறைவேற்றி விட வேண்டும் என்று சங்கல்பம் மேற்கொண்டு யாரும் வர முடியாத ஒரு தனி இடத்தில் அமர்ந்து ஆஞ்சநேயரை துதித்து கடும் தியானத்தில் அமர்ந்து விட்டான் அவன்.

தன்னுடைய பக்தனை அதிகம் சோதிக்க எண்ணம் இல்லாத ராம தூதன் சில நாட்களிலேயே அவனுக்கு காட்சி தந்து, அவனுடைய ஆசையை அறிந்து கொண்டு, சொக்கட்டான் ஆட இசைந்தார்.

பக்தனும், அனுமனும் சொக்கட்டான் ஆட ஒரு இடத்தில் அமர்ந்த உடன், அனுமன் ஒரு நிபந்தனை விதித்தார் இப்படி!

”அன்பனே! பந்தயம் என்று ஒன்று வந்துவிட்டால், என்னால் விட்டுக்கொடுக்க இயலாது. எனவே இவ்விளையாட்டில் நீ தோல்வியைத் தழுவும் வாய்ப்பு நிறைய. தோல்வி பெற்றால் கலங்கி விடாதே

என்ன?" என்று, பக்தன் அதனை ஏற்றுக் கொண்டான்.

சொக்கட்டான் பந்தயம் துவங்கியது.

அனுமனும், பக்தனும் மாறி, மாறி விளையாடினார்கள். "ஜெய் ஜெய் ராம்" என ராமனை துதித்து அவர் விளையாட, பக்தனோ "ஜெய் ஜெய் அனுமான்" என ஒவ்வொரு முறையும் மனதார உச்சரித்து விளையாடிக்கொண்டிருந்தான். என்ன ஆச்சர்யம்! ஒவ்வொரு ஆட்டத்திலும் அந்த பக்தனே ஜெயித்துக் கொண்டிருந்தான். இது அனுமனுக்குத் திகைப்பையும், வருத்தத்தையும் நிறைய தந்துவிட்டது.

அப்போது அனுமன் மானசீகமாக தியானிக்க, தன்னைத் துதித்த அவருக்கு மட்டும் ராமன் காட்சி தந்தார். "என்ன வேண்டும் அனும! சொல்" என ராமர் அன்புடன் வினவ, அனுமன் "ஐயனே! தங்கள் திருநாமம் வேண்டிய நான் பந்தயத்தில் தோல்வியைத் தழுவுவது நியாயமா?" என உருக்கமுடன் கேட்டார்.

அப்பொழுது ராமபிரான்" என் அன்புக்குரியவனே! எனது அருள் உன்னோடு என்றும் உள்ளது. ஆனால் அந்த மானிடனோ உன்னுடைய பக்தன்! நம் இரண்டு பேரின் அருளும், அவனுக்கு கிட்டி அதிகம் பலம் பெற்று திகழ்ந்ததால் பந்தயத்தில் உன்னையே அவன் வென்று விட்டான்! இதில் வருந்த ஏதுமில்லையே"! என புன்சிரிப்புடன் கூறி மறைந்துவிட்டார்.

தன் நிலையை உணர்ந்து விட்ட அனுமன் தனது பக்தன் தானே வெற்றிக்கொடியை நாட்டியிருக்கிறான் என மனநிறைவு கொண்டு அந்த பக்தனுக்கு அன்புடன் ஆசிகளை வழங்கி விட்டு மாயமானார் அவ்விடத்திலிருந்து.

ஜெய் அனுமன்!



# பகவானே போதித்த பிராணாயாமம்!

~ பிரபு சங்கர்

நம் காயத்துக்குள், நுரையீரல் என்ற காற்றடைத்த பை, ஆக்ஸிஜனைத் தேக்கி வைத்துக் கொள்கிறது என்பது நமக்கு ஏற்கெனவே தெரிந்திருந்தாலும், அது எத்தனை சதவிகிதம் இருக்க வேண்டும் என்ற பிராண கணக்கைச் சொல்லிக் கொடுத்தது கொரோனாதான்.



வெகு அலட்சியமாகப் புறக்கணிக்கப்பட்ட பிராணாயாமப் பயிற்சி கொரோனாவால் புத்துணர்வு பெற்றது என்பதும் உண்மை. ஆக்ஸிஜன் குறைந்த நுரையீரலுக்குள் கொரோனா சுதந்திரமாகப் புகுந்து கொள்வதால், அதைத் தேடி நுரையீரலுக்கு வரும் சிவப்பு அணுக்கள் ஏமாற்றமடைகின்றன. அங்கிருந்து ஆக்ஸிஜனை எடுத்துக் கொண்டு மூளை, கல்லீரல், சிறுநீரகம், மண்ணீரல், இதயம் போன்ற பகுதிகளுக்கு சப்ளை செய்ய வேண்டிய தன் பணியை நிறைவேற்ற முடியாததால் அவை சோர்ந்துபோய், மரணித்தும் விடுகின்றன. இதுவே கொரோனாவின் வெற்றி.

இந்த உண்மையை உணர்ந்த ஆராய்ச்சியாளர்கள் நுரையீரலில் ஆக்ஸிஜனை இருத்தி வைக்கும் பல பயிற்சிகளைச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார்கள். குப்புறப் படுத்துக் கொண்டு சுவாசித்தால் அதன் அளவு அதிகரிக்கும் என்று ஒரு யோசனை. லிங்க முத்ரா பிடித்தால் கூடுதல் ஆக்ஸிஜன் பெற்று நுரையீரலை பலப்படுத்தலாம் என்று இன்னொரு யோசனை.

'முநநி கலைபெநசள உசழளளநன' என்று ஆங்கில சொலவடை ஒன்று உண்டு. அதாவது ஏதேனும் குழப்பம், முடிவெடுக்க முடியாத பதட்டம், என்னாகுமோ, ஏதாகுமோ என்ற கற்பனை பயத்தால் ஏற்படும் படபடப்பு, முச்சிறைப்பு என்றெல்லாம் வருமானால் உடனே இரண்டு கை விரல்களையும் பின்னிக்கொண்டு சில நிமிடங்கள் அமைதியாக இரு என்று இதற்கு அர்த்தம்.

அப்படி விரல்கள் பின்னி இருக்கும்போது நெஞ்சுக்கூடு அதிகமாக ஆக்ஸிஜன் பெறுகிறது, (லிங்க முத்ராவின் பலனும் இதுதான்) இதனால் சுவாசம் சீராகிறது, மனம் அமைதியடைகிறது, குழப்பம் விலகி தெளிவு பிறக்கிறது, பிரச்னைக்குத் தீர்வு காண முடிகிறது. ஆங்கில சொலவடையும் நம் பண்டைய இந்த லிங்க முத்ராவிலிருந்து உருவானதாக இருக்கலாம்.

இதையே நம் முன்னோர்கள், 'ஏ, மனமே, சும்மா இரு,' என்று சொல்லி வைத்தார்கள். அதாவது மனசு சும்மா இருந்தால் குழப்பத்துக்கு சான்ஸே இல்லை என்பது அவர்களுடைய அனுபவம். அதைத்தான் இப்போது நாம் 'தியானம்' என்று பயின்று மனதை அடக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.

மனது அடங்காது என்பது ஞானியருக்கும் தெரியும். அதேசமயம் மூச்சை அடக்கினால் மனது அடங்கும் என்ற ரகசியமும் அவர்களுக்குத் தெரியும். அதைப் பயில்பவர்கள் முக்காலமும் உணர்ந்த மகான்களாகத் திகழ்வார்கள் என்பதை காஞ்சி பரமாசார்யார் போன்ற ஞானியர் மூலம் அறிய முடிகிறது.

இத்தனை ஆற்றல் வாய்ந்த பிராணாயாமம் என்ற மூச்சுப் பயிற்சியை பகவான் கிருஷ்ணனே சிபாரிசு செய்திருக்கிறார்! ஆமாம், பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னால், போர் புரிய மறுத்து மனக்குழப்பத்தில் ஆழ்ந்துவிட்ட அர்ஜுனனுக்குத் தான் உபதேசித்த கீதையில், பிராணாயாமத்தின் முக்கியத்துவத்தை அறிவித்திருக்கிறார்: -

"அபானே ஜுஹ்வதி ப்ராணம் ப்ரணேபானம் ததாபரே

ப்ரணாபானகதீ ருத்த்வா ப்ராணாயாமபராயணா"

(அத்தியாயம் 4, ஸ்லோகம் 29)

என்ன சொல்கிறார் கிருஷ்ணன்?

“சில யோகிகள் தம் சுவாசத்தைக் கணிக்கத் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். தம் மூக்கினால் உள்ளிழுக்கும் காற்றையும், வெளியிடும் காற்றையும் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளத் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். அதாவது, உள்ளிழுக்கும் பிராண வாயு மற்றும் வெளியிடும் அபான (கரியமில) வாயு ஆகிய இரண்டின் போக்கை பிராணாயாமப் பயிற்சியால் கட்டுப்படுத்தி மனோதிட ஆற்றல் படைத்தவர்களாக அவர்கள் விளங்குகிறார்கள்.”

மனதுக்கும் இந்த வாயுவுக்கும் தொடர்பு இருக்கிறது என்பதைத்தான் கிருஷ்ணன் இங்கே சுட்டிக் காட்டுகிறார். எதற்காகவாவது, எதனாலாவது பயம் ஏற்பட்டால், மனம் பாதிப்படைகிறது, கூடவே, அதுவரை சீராக இருந்த சுவாசமும் தடுமாறுகிறது. இயல்பாக ஓசையற்றிருந்த அந்த மூச்சு இயக்கம், ‘புஸ், புஸ்ஸெ’ன்று தாறுமாறானதாகி விடுகிறது.

எல்லா நன்மை தீமைகளுக்கும், எல்லா ஏற்ற இறக்கங்களுக்கும், எல்லா மான அவமானங்களுக்கும் மனமே காரணம். இவை மட்டுமல்ல இயல்பான சுவாச ஓட்டத்துக்கும் அதே மனம்தான் காரணமாக இருக்கிறது! சந்தோஷத்தால் திகைக்கும்போதும், அச்சத்தால் ஓட நேரும்போதும் ‘மேல்மூச்சு, கீழ்மூச்சு’ வாங்குவது பலருடைய அனுபவமாக இருக்கிறது.

ஆனால் சுவாசத்தை நேர்ப்படுத்துவதன் மூலம் மனதைக் கட்டுப்படுத்தலாம் என்பதுதான் புரிந்து கொள்ளப்படவேண்டிய உண்மை. பிராணாயாமப் பயிற்சியை மேற்கொள்ளும்போது ஆரம்பக் கட்டத்திலேயே மனசு ஒடுங்குவதை உணரமுடியும். ஆமாம், உள்ளிழுக்கப்படும் மற்றும் வெளியிடப்படும் காற்றிலேயே நம் முழு கவனமும் பதிந்திருக்கும். உள்ளிழுக்கும் காற்றை எத்தனை விநாடிகள் நுரையீரலுக்குள் சிறைப்பிடித்து வைத்திருக்க முடியும், வெளியிட்டபின் எத்தனை விநாடிகள் காற்றை உள்ளிழுத்துக்கொள்ளாமல் தாக்குப் பிடிக்க முடியும் என்று இந்தப் பயிற்சியின் பரிமாணம் விரிவடையும்.

இவ்வாறு காற்றை உள்ளிழுப்பதை ‘பூரகம்’ என்றும்,வெளியிடுவதை ‘ரேசகம்’ என்றும் சொல்வார்கள். நீண்டநேரம் மூச்சுக்காற்றை உள்ளே இருத்தி வைத்துக்கொள்வதையும், வெளியேற்றிய பிறகு நீண்டநேரம் உள்ளிழுக்காததையும் ‘கும்பகம்’ என்பார்கள்.

நிதானமான சுவாசம் மனதை அமைதிப்படுத்துவதோடு, ரத்தக் கொதிப்பையும் உண்டாக்குவதில்லை, பிற எந்த உடற்கூறு பாதிப்புகளையும் ஏற்படுத்துவதில்லை என்பது இக்காலத்திய அனுபவ உண்மை. இதனை கிருஷ்ணன் எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே சொல்லிவிட்டார், அர்ஜுனனுக்கு அறிவுறுத்தும் விதமாக.

யாருக்கெல்லாம் சுவாசக் கட்டுப்பாடு கைவருகிறதோ, அவருக்கு மனக்கட்டுப்பாடும் எளிதாகும், அவருடைய கோபத்தில் நியாயம் இருக்கும், ஆனால் விபரீத பின் விளைவுகள் இருக்காது. ஆக்கபூர்வமான சிந்தனைகளும், செயல்களும் அவற்றால் பொதுநலனும் உண்டாகும் என்கிறார்கள் பெரியவர்கள்.

இந்த மூச்சுப் பயிற்சி(பிராணாயாமம்)யின் தொடர்ச்சிதான் தியானம். மூச்சை உள்ளிழுப்பதற்கும், வெளியே விடுவதற்கும் இடைப்பட்ட சில விநாடிகள் மற்றும் அதேபோல வெளியே விடுவதற்கும், உள்ளிழுப்பதற்கும் இடைப்பட்ட சில விநாடிகள் - இவற்றை ஆழ்நிலை தியானத்தின் ஆரம்பம் என்று சொல்லலாம். இப்படி சுவாசம் நிற்கும் விநாடிகளில் ‘பரம’ ஆனந்த நிலை ஏற்படுகிறது.

ராமகிருஷ்ண பரமஹம்ஸர் இந்நிலையை பலமுறை எட்டியவர் என்று சொல்வார்கள். சில சமயங்களில் நாலைந்து நாட்களுக்குக்கூட அவர் அப்படியே உணர்வற்றுக் கிடப்பாராம். சுற்றி நிற்பவர்கள் திகைத்துப் போவார்கள். அவருடலில் உயிர் இருக்கிறதா என்ற சந்தேகமும் வந்துவிடும். மெல்ல அவர் உடலை ஸ்பரிசிக்கும்போது அது சூடாக இருப்பதிலிருந்து அவர் உயிரோடுதான் இருக்கிறார் என்று நிம்மதியடைவார்களாம். வெகு நாட்கள் நீடிக்கும் அந்த பரமானந்த சமயங்களில் “அவரை ‘எழுப்ப’ வேண்டியிருக்கும்” என்பார்கள் அவரது சீடர்கள்.

உண்மைதான். சுவாசத்தைக் கட்டுப்படுத்தும் அந்த ஓரிரு விநாடிகளில் நம் சிந்தனையும் கட்டுப்படுகிறது. ஆமாம், அந்த நேரத்தில் நாம் முற்றிலும் ‘ப்ளாங்க்’ ஆகிவிடுகிறோம். ஆனால், அந்த நிலை நீடித்திருக்க முடியாது என்பதால், நுரையீரல் காற்றுக்காக ஏங்கித் திணறும் என்பதால், நம் இயல்பான சுவாசத்துக்குத் திரும்புகிறோம். ஆனால், அந்த சூன்யம், ப்ளாங்க்னஸ், ஒரு நல்ல அனுபவம். ஒரு பயிற்சியாக இதனை மேற்கொண்டோமானால் அந்தப் பயிற்சி விநாடிகளிலாவது நாம் சிந்தனை வசப்படாமல் இருக்க முடியும், அதன்மூலம் புலன்களின் மீதான மனதின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தவும் இயலும்.

# ஆன்மீக கேள்விகளும்? அர்த்தமுள்ள பதில்களும்...

~ ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

வள்ளலார் போற்றிப் பாடிய தெய்வங்கள் எவை?

சமரச சன்மார்க்க வள்ளலார் கருங்குழி கிராம விநாயகர், தில்லை நடராஜர், திருவொற்றியூர், திருவலிதாயம், திருமுல்லை வாயில், வைதீசுவரன் கோயில், திருவாரூர், திருவண்ணாமலை, திருமுதுகுன்றம் தலங்களில் குடிகொண்ட சிவபெருமான், கந்தக்கோட்டம், திருத்தணி, திருவொற்றியூர், வைதீசுவரன் கோயில், சிங்கபுரி ஊர்களில் காட்சி தரும் கந்தவேளையும், சென்னை ஏழு கிணற்றில் உள்ள துலுக்காணத்திரேணுகை, திருவொற்றியூர் வடிவுடையம்மை, தில்லை சிவகாமி, திருவதிகைப் பெரிய நாயகி அம்மனையும் போற்றிப்பாடி அக மகிழ்ந்துள்ளார்.

இது தவிர திருவள்ள ர் வீரராவகப் பெருமாளையும், திருக்கண்ண மங்கைத் தாயாரையும், பொதுவாக இராமபிரான் மீதும், கலைமகள் மீதும் பாட்டுக்கள் புனைந்து போற்றியுள்ளார் வள்ளல் இராமலிங்க அடிகளார்.

வள்ளலார் சுவாமிகள் எப்போது சித்தி பெற்றார்?

ஸ்ரீமுக ஆண்டு தை 19ஆம் நாள் வெள்ளிப் புனித நாளில் (30.1.1874) சித்தி பெற்றார்.

5.10.1823, சுபானு ஆண்டு புரட்டாசி 21ஆம் நாள் ஞாயிறு மருதூரில் (சிதம்பரம் மாவட்டம்) திருவருட்பிரகாச வள்ளலார் ஜெனனமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹேரம்ப கணபதியின் விளக்கமென்ன?

பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், சக்தி, சூரியன் இவைகள் இணைந்த ஒரே சக்திதான் ஹேரம்ப கணபதி. இவரிடமிருந்து தான் பஞ்சபூதங்கள் உதயமாகின. படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல், அழித்தல் என்ற ஐந்தொழிலின் அதிபதி இவரே!

முத்கல புராணப்படி, அகரம், உகரம், மகரம், நாதம், பிந்து எனும் ஐந்தெழுத்துக்களையும் உள்ளடக்கிய ஓங்கார சொரூபம் இந்த ஹேரம்ப கணபதிதான்!

“ஜென்“ (மத) இதன் விளக்கமென்ன?

மானம், அவமானம், இன்பதுன்பம் இவை எல்லாவற்றையும் இயல்பாக ஏற்றுக் கொண்டு, எதனையும் தன்னோடு ஒட்ட விடாத தன்மையே “ஜென்“ என்பார் குருஜி வாசுதேவ் அவர்கள்.

ஆசாரம் என்றால் எதைக் குறிக்கும்?

தர்மம்தான் ஆசாரம். ஸத்துக்களை உள்ளடக்கியதால் ஸதா சாரமெனவும் சிஷ்டர்கைக் கொண்டதால் சிஷ்டாசாரம் என்றும் வழங்கப்படும். தர்மத்திற்கு உகந்தவாறு உள்ள உபதர்மங்கள் ஸதாசாரமாகும்.

சில இடங்களில் தர்மம் அங்கியாகவும், ஆசாரம் அதன் அங்கமாயும் இருக்கும்.

ஸந்தியாவந்தனம் என்பது ஒரு கர்மாவாக இருக்க, அதேதான் தர்மம். அதை நீராடி பஞ்சகச்சம் அணிவது நெற்றியில் விபூதி சந்தனம் அல்லது ஸ்ரீசூர்ணம் தரித்து செய்வது ஆசாரம்.

மூதேவியைத் தள்ளி, மகாலக்ஷ்மியை அளிப்பது ஆசாரம். ஆசாரத்தைக் கைவிடுபவன் அற்ப ஆயுளின் சொந்தக்காரனாவான்.

இக்கருத்தின் சொந்தக்காரர் ஸ்ரீவத்ஸ வே ஸோம தேவா சர்மா அவர்கள்.

(நன்றிகள்)

துளசி தளத்தைப் பறிக்கக் கூடாத தினங்கள் உள்ளதா?



உண்டு.

இறைத்தன்மை படைத்த துளசி இலையை ஞாயிறு,

வெள்ளி தினங்களும், ஆண்டில் இடம் பெறும் 14 மன்வாதி நாட்களிலும், வருடத்தில் வரும் யுகாதி நான்கு நாட்களிலும் பறிக்கக் கூடாது. மத்யானக் காலங்களுக்குப் பிறகு என்றுமே துளசி தளத்தைப் பறிக்க வேண்டாம்.
கீழ்க்கண்ட சுலோகத்தை உச்சரித்தவாறே துளசி தளத்தை பறிக்க வேண்டும் என்பார்கள் பெரியோர்கள்.
“ஆரவாரேச எயினக்ரே ச மன்வாதி3 ஷ6யுகா3தி3ஷீ நாஹரேத் துளசி பத்ரம் மத்4 யாஹ்ணாத் பரதோஹநி”

## பசுவின் முகம் அசுத்தமானதற்கான பின்னணி உள்ளதா?

அக்காலத்தில் பேநபர் என்ற ஒரு ரிஷி இருந்தார். அவர் கொண்ட பழக்கமிதுவாக இருந்தது. பசுக்களை வளர்த்த அவர் அவைகளின் பாலைக் குடிக்க மாட்டார். அதற்குப் பதிலாக கன்றுகளை பசுக்களிடம் ஊட்டவிட்டு, அப்போது அவைகளின் வாயிலிருந்து பெருகும் நுரையை மட்டும் குடித்து விடுவார். பேநபர் என்றால் நுரையைக் குடிப்பவர் என்று அர்த்தம்.
நந்தி தேவ யாகத்தின்போது, தங்களுக்கு அழகான கொம்பு அமைய வேண்டும், அதற்கான வரத்தைப் பெற்றுத் தாருங்கள் என பேநபர்ரிஷியிடம் பசுக்கள் கேட்டுக் கொண்டன. அதனால் எதேனும் விபரீதம் நிகழலாம் எனக் கருதி ரிஷி அதற்கு மறுத்து விட்டார். இதன் காரணமாக ஆவேசங்கொண்ட பசுக்கள் அந்த முனிவரை முட்டிக் கொன்றுவிட்டன.
இச்செய்தியறிந்த தேவலோக காமதேனு பசு, இந்த அடாத, செயலைக் கண்டிக்கும் வகையில் “இனி பசுக்கள் முகம் அசுத்தமாகும்“ என சபித்து விட்டது. எனவே பசுவின் வாய்ப்பக்கம் இப்போது அசுத்த நிலையில் காணப்படுகிறது.

## துஷ்டர்களைக் கண்டால் ஏன் தூர விலக வேண்டும்?

தேளுக்கு விஷம் அதன் கொடுக்கில் உள்ளது; பாம்புக்கு பல்லில் விஷம்; ஈ, கொசுக்களுக்கு தலையில் விஷம் இருக்கிறது. ஆனால் துஷ்டர்களுக்கோ அவர்கள் உடம்பு முழுவதும் விஷம்தான். எனவே நமது சாஸ்திரம் அவர்களை விலக்கி வைத்துள்ளது.

## மகா கும்பாபிஷேகத்தில் இடம்பெறும் எண்வகை மருந்துகள் என்னென்ன?

கொம்பரக்கு, சுக்கான்தூள், குங்குலியம், கற்காவி, செம்பஞ்சு, சாதிலிங்கம், தேன்மெழுகு, வெண்ணெய் ஆகிய எட்டுப் பொருள்களை அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகத்திற்கு முன்பாக மூலவர்களின் அடிப்பகுதியில் சாத்தி புனிதப்படுத்துவார்கள்.

## ஆன்மீகத்தில் கூறப்படும் வாசனை எதைக் குறிக்கும்?

வாசனை என்பது மனிதன் கொண்ட ஆசைகளின் சூட்சும நிலை. அதாவது விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல், தீராத ஆசை கொண்டு புலன் வழிப் பொருள்களை புத்தியற்றுப் பற்றிக் கொள்ளும் தன்மை படைத்தது அது.
முன் பிறப்பில் கொண்ட ஆசைகள், அடுத்த பிறவியிலும் தொடரக் கூடிய வல்லமை கொண்டது.

## பஞ்ச சபைகள் எவை?

திருவாலங்காட்டு தலத்தில் இரத்தின சபை, சிதம்பரத்தில் கனகசபை (பொன்), மதுரையில் ரஜத சபை (வெள்ளி), திருநெல்வேலியில் தாமிர சபை மற்றும் திருக்குற்றாலத்தில் சித்திரசபை என ஐந்து வகை சபைகளாகும்.

## கடவுளுக்கு ஏன் பகவான் என்று பெயரிடப்பட்டுள்ளது?

ஆறு கல்யாண குணங்களை உடையதால் பகம். அதனால் பகவான் ஆகிறார். அதென்ன கல்யாண குணங்கள்?
ஐஸ்வர்யம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் ஆகியவைகள்தான்.

# வருட ராசி பலன்கள் 2022

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# மேஷம்



92%

## காதலில் வெற்றி உண்டாகும்.

சுயதொழிலில் போட்டிகளை சந்திப்பீர்கள். புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ளும் போது கவனம் தேவை. பங்கு வர்த்தகம் சம்பந்தப்பட்ட தொழில் செய்பவர்கள் புதிய முலீடுகள் மூலமாக அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம். காதலில் வெற்றி உண்டாகும். திருமணம் செய்வதற்காக காத்திருப்பவர்களுகு திருமண வாய்ப்புகள் கைகூடும். கணவன் மனைவி உறவில் அன்யோன்யம் கூடும். வங்கிப்பணி, மருத்துவம் மற்றும் தகவல் தொடர்புத் துறையில் இருப்பவர்களின் தன நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். சுய தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்கள் சிறந்த லாபம் காண்பார்கள். அதனால் அவர்களின் பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். யூக வணிகமான பங்கு மற்றும் பொருள் வர்த்தகத்தில் ஏற்றம் காணப்படும். பிட் காயின், கிரிப்டோ கரன்சி மற்றும் ஃபோரெக்ஸ் டிரேடிங்கிலும் முதலீடு செய்து தனத்தை ஏற்றம் செய்துகொள்ள முடியும். நிலம், சொத்துக்கள் வாங்குவதற்காக சுபச்செலவுகள் ஏற்படலாம். மாணவர்களுக்கு படிப்பில் மந்த நிலை காணப்படும். கடந்த வருடத்தில் நீங்கள் சந்தித்து வந்த அஜீரணக் கோளாறு உபாதைகள் நீங்கும். சரியான நேரத்தில் உணவை எடுத்துக்கொள்வதன் மூலமும், உடலுக்கு கேடு தரும் உணவு வகைகளை தவிர்ப்பதன் மூலமும் நல்ல உடல் ஆரோக்கியம் பெறலாம்.

# ரிஷபம்




67%

## பொன் பொருள் சேர்க்கை உண்டு.

உத்தியோக உயர்வை எதிர் நோக்கி காத்திருப்பவர்களுக்கு உத்தியோகத்தில் உயர் பதவி கிடைப்பதற்கு வாய்ப்புகள் உண்டு. வெளிநாட்டில் உத்தியோகம் தேடுபவர்களுக்கு வெளிநாட்டில் வேலை கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். குறிப்பாக ஆடை ஏற்றுமதி சம்பந்தப்பட்ட கூட்டுத்தொழில் புரிபவர்களுக்கு அதிக லாபங்கள் ஏற்படும். காதல் உறவில் உள்ள நீங்கள் உங்கள் காதல் துணையைக் கவர்வீர்கள். திருமணத்தில் தாமதம் ஏற்பட்டவர்களுக்கு திருமண முயற்சிகள் கைகூடும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு ஏற்படுவதன் மூலம் தன நிலையில் ஏற்றம் கிடைக்கும். அச்சுத் துறை, மற்றும் கல்வி துறைகளில் இருப்பவர்களுக்கு வருமானம் அதிகரிக்கும். புதிய முதலீடுகள் அதிக லாபத்தை கொடுக்கும். தங்கம் மற்றும் ரத்தினங்கள் வாங்குவது லாபம் மிகுந்ததாக இருக்கும். உடல் உபாதைகள் உங்களை வருத்தினாலும் நீங்கள் சமாளித்து முன்னேறுவீர்கள். ஒற்றை தலைவலி மற்றும் சளித்தொல்லை போன்ற சிறு உபாதைகள் வந்து நீங்கும். யோகா, தியானம் போன்ற பயிற்சிகளை மேற்கொள்ளுவது நன்மை பயக்கும்.

# மிதுனம்



89%

## திருமண முயற்சிகள் கைகூடும்.

அரசு உத்தியோகத்தில் உள்ள உங்களின் கடின உழைப்பிற்கு மேலதிகாரிகளின் அங்கீகாரமும் பாராட்டும் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணியில் உயர்வு ஏற்படும் என்றாலும் பணிச் சுமையும் கூடும் வருமானத்தில் உயர்வும் கிடைக்கும். தொழில் செய்து கொண்டிருப்பவர்களுக்கு நல்ல மனிதர்களின் நட்பு கிடைக்கும். புதிய நட்பு மூலம் தொழில் முன்னேற்றத்திற்கு நல்ல ஆதாயங்கள் உண்டு. காதல் முயற்சிகள் வெற்றியை கொடுக்கும். திருமணத்திற்குக் காத்திருக்கும் உங்களுக்கு ஏற்ற வாழ்க்கைத்துணை கிடைக்கப் பெறுவீர்கள். கணவன் மனைவிக்கு இடையே நல்லுறவு காணப்படும். தங்களின் பணபுழக்கம் அதிகரிக்கும். பழைய முதலீடுகளின் மூலம் வருமானம் பெறுவீர்கள். யூக வணிகமான பங்கு மற்றும் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் தன நிலையில் ஏற்றம் காண்பார்கள். வீடு, நிலம், சொத்து வாங்குவதற்காக செலவுகள் ஏற்படலாம். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் இல்லாமல் போக வாய்ப்பு உள்ளது என்பதால் கவனமாகப் படிக்க வேண்டும். உடல் நலனில் அக்கறை தேவை. தலைவலி, வயிறு சம்மந்தப்பட்ட உபாதைகள் வரலாம். முறையான உடற்பயிற்சியும் சத்தான உணவும் உங்கள் ஆரோக்கியத்தைக் காக்கும். துரித உணவு வகைகளைத் தவிர்ப்பது நன்மை பயக்கும்.

# கடகம்




62%

## வேலை பளு கூடும்

தங்களின் உத்தியோகத்தில் சாதனைகளைப் புரிவதற்கு வாய்ப்பு உள்ளது. பணியிடத்தில் நீங்கள் நல்ல பெயர் பெறுவீர்கள். சுயதொழிலில் ஈடுபட்டிருக்கும் அன்பர்கள் தாங்கள் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்த வங்கிக் கடன்கள் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது. ஏற்றுமதி சம்மந்தப்பட்ட தொழில் தொடர்பான பயணங்கள் உங்களுக்கு நன்மை அளிக்கும். காதல் முயற்சிகள் வெற்றியை கொடுக்கும். காதலிப்பவர்களின் குடும்பங்களுக்குள் இணக்கமான சூழ்நிலை உருவாகும். திருமணத்திற்காக காத்திருப்பவர்களுக்கு திருமண முயற்சிகள் வெற்றியை கொடுக்கும். கணவன் மனைவிக்கு இடையே அன்னியோன்யம் கூடும். பங்கு மற்றும் பொருள் வர்த்தகத்தில் அதிக லாபங்களை எதிர்பார்க்கலாம். கிரிப்டோ கரன்சியில் முதலீடு செய்வதும் பிற்காலங்களில் நல்ல லாபங்களை ஏற்படுத்தி கொடுக்கும். வாகன பராமரிப்பு சம்மந்தப்பட்ட செலவுகள் ஏற்படும். மாணவர்களின் கிரகிக்கும் திறன் கூடும். கல்வியில் சிறந்து விளங்குவார்கள். உங்களுக்கு சிறு சிறு உடல் உபாதைகள் வந்து போகும். சிறிய அளவிலான உபாதைகள் என்றாலும் உடனடியாக மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது நன்மை பயக்கும். நடைபயிற்சி செய்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை நீங்கள் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

# சிம்மம்



82%

## தொழிலில் வெற்றி கிடைக்கும்

அரசு உத்தியோகத்தில் இருக்கும் உங்களின் திறமை மேலதிகாரிகளால் பாராட்டப்படும். தனியார் உத்தியோகத்தில் உள்ளவர்கள் அதிக பணிச் சுமை இருந்த போதிலும் சிறப்பாக பணியாற்றுவீர்கள். வியாபாரம் செய்பவர்கள் பெரிய அளவிலான வாடிக்கையாளர்களைப் பெறுவார்கள். காதலர்களுக்கு இடையே இடைவெளி அதிகரிக்கும். விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் காதல் உறவில் உள்ளவர்களுக்குள் நெருக்கம் அதிகரிக்கும். திருமணமான தம்பதிகள் இடையே சுமுகமான உறவு இருக்கும். வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குதல் போன்ற விஷயங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள். எழுத்துத் துறை மற்றும் பொறியியல் துறையில் இருப்பவர்கள் சிறந்த வகையில் வருமானம் ஈட்டுவார்கள். மாணவர்கள் பொறுமையுடன் கடினமாக உழைத்துப் படித்தால் வெற்றி நிச்சயம். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும், என்றாலும் ஒற்றை தலைவலி, கழுத்து வலி போன்ற சிறு சிறு உபாதைகள் வந்து நீங்கும். உடற்பயிற்சி மற்றும் தியானம் போன்ற பயிற்சிகளை மேற்கொள்ளுவது உடல் நலனுக்கு நன்மை பயக்கும்.

# கன்னி



73%

## உத்தியோகத்திற்காக வெளிநாடு செல்லும் வாய்ப்பு

அரசு உத்தியோகத்தில் உள்ள உங்களுக்கு சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் நல்லுறவு காணப்படும். தனியார் உத்தியோகத்தில் உள்ளவர்கள் உத்தியோகம் நிமித்தமாக வெளிநாடுகளுக்கு செல்லும் வாய்ப்பு ஏற்படும். வெளிநாடு தொடர்புடைய தொழில் செய்பவர்கள் தொழிலை சிறிது கவனமுடன் கையாள வேண்டும். கணவன் மனைவி பரஸ்பரம் விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் நல்லுறவை மேற்கொள்ள முடியும். சுய தொழிலில் நல்ல லாபம் கிடைக்கும். ஆடம்பர செலவுகளை தவிர்த்து அத்தியாவசிய செலவுகளை மேற்கொள்வது நன்மை பயக்கும். கிரிப்டோ கரன்சி எனப்படும் மெய்நிகர் நாணய முதலீடுகள் நல்ல லாபம் கொடுக்கும். மாணவர்களின் படிப்பில் கவனக்குறைவு ஏற்படலாம். சிறிது அக்கறை எடுத்து படித்தால் படிப்பில் வெற்றி காண முடியும். உங்கள் ஆரோக்கியம் மேம்படும். என்றாலும் மனபதட்டம் காரணமாக இனம் புரியாத உடல் உபாதைகள் ஏற்படும். யோகா மற்றும் தியானம் மற்றும் இறை வழிபாடு மூலம் உங்கள் ஆரோக்கியத்தை நீங்கள் சீராக தக்க வைத்துக் கொள்ளமுடியும்.

# துலாம்



86%

## ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்

தனியார் உத்தியோகத்தில் பணியில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். புதிய தொழிலைத் தொடங்குவது ஏற்றத்தை கொடுக்கும். தொழிலில் அதிக லாபங்களை எதிர்பார்க்கலாம். காதல் உறவில் உள்ளவர்கள் தன் துணை மூலமாக பரிசு பொருட்கள் மற்றும் ஆதாயங்களை அடைவார்கள். திருமண உறவில் உள்ளவர்களுக்கு அன்யோன்யம் கூடும். தாம்பத்திய உறவில் நெருக்கம் அதிகரிக்கும். பொருளாதார நிலையில் முன்னேற்றம் இருக்கும். வியாபாரத்தில் தன வரவு அதிகரிக்கும். நண்பர்களுக்கு கடன் கொடுக்கும் விஷயத்தில் கவனமாக இருக்கவும். ஆன்மீகத்திற்காக நன்கொடை போன்ற தரும காரியங்களுக்கு பணம் செலவு செய்வீர்கள். மாணவர்கள் கவனச் சிதறல் போன்ற தடைகளையும் தாண்டி கல்வியில் முன்னேறுவார்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிறுநீரகம் சம்மந்தப்பட்ட உடல்நல பாதிப்பு ஏற்படலாம். போதுமான நீர் உட்கொண்டு இந்த பாதிப்பிலிருந்து தப்பிக்கலாம். தாயார் உடல் நலனில் அக்கறை தேவை. தாயாருக்கு உப்புசம் மற்றும் வயிறு சம்மந்தப்பட்ட பிரச்சனைகள் வரலாம்.

# விருச்சிகம்




73%

## நிதி நிலையில் ஏற்றம் உண்டாகும்

தங்களின் உத்தியோகத்தில் சாதனைகளைப் புரிவதற்கு வாய்ப்பு உள்ளது. தொழிலில் நீங்கள் சாதகமான விஷயங்களை எதிர்பார்க்கலாம். கூட்டுத்தொழிலில் நல்ல லாபம் கிடைக்கும். சுய தொழில் செய்பவர்களாக இருந்தால் தங்கள் தொழில் நிமித்தமாக வெளி நாடுகளுக்கு செல்லும் வாய்ப்பு ஏற்படும். காதல் உறவில் இருப்பவர்களுக்கு கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். வாக்கு வாதத்தை தவிர்ப்பது நன்மை பயக்கும். திருமணமான தம்பதியர் மனமொத்து வாழ்வார்கள். இருவருக்கும் இடையே அன்னியோன்யம் கூடும். உங்கள் நிதிநிலை மகிழ்ச்சி தரும் வகையில் இருக்கும். வீடு மராமத்து வகையில் செலவுகளை மேற்கொள்வீர்கள். பிறருக்கு கடன் அளிக்கும் விஷயத்தில் கவனமாக இருக்கவும். ஆடம்பர செலவுகளை தவிர்த்து அத்தியாவசிய செலவுகளை மேற்கொள்வது நன்மை பயக்கும். மாணவ மாணவியர்கள் விடாமுயற்சியுடன் கல்வி பயின்று படிப்பில் வெற்றி பெறுவார்கள். மாசு காரணமாக ஒவ்வாமை அல்லது ஆஸ்துமா போன்ற உபாதைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. உடல்நலனில் அக்கறை தேவை. தினமும் உடற்பயிற்சி மேற்கொள்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

# தனுசு



**71%**

## முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்

உங்கள் பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு மேலதிகாரிகளின் அங்கீகாரமும் பாராட்டும் கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும். வெளிநாடு சம்மந்தப்பட்ட ஏற்றுமதி தொழில் செய்பவர்கள் கணிசமான தன லாபத்தை ஈட்டுவார்கள். காதல் உறவு இனிமையாக இருக்கும். இந்த வருட ஆரம்பத்தில் திருமணமான தம்பதிகள் தங்கள் வாழ்க்கைத் துணைக்கென நேரம் ஒதுக்க இயலாத காரணத்தால் உறவில் அதிருப்தியும் மகிழ்ச்சியின்மையும் இருக்கும். உங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள நீங்கள் புதிய தொழிலை மேற்கொள்வீர்கள். அது உங்களுக்கு நீண்ட கால பயனை அளிக்கும். குடுமபத்தில் வசதிகள் மற்றும் ஆடம்பரம் பெருகும். கலைத் துறையில் இருப்பவர்கள் சிறந்த வகையில் வருமானம் ஈட்டுவார்கள். மாணவர்களின் கவனிப்புத் திறன் அதிகரிக்கும். அவர்கள் சிறப்பாக தேர்வுகளை எழுதி வெற்றி காண்பார்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சந்தித்து வந்த வயிறு சம்மந்தப்பட்ட உபாதைகள் நீங்கும். சரிவிகித உணவை குறித்த நேரத்தில் எடுத்துக்கொண்டு உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்தி கொள்ளுங்கள்.

# மகரம்



**93%**

## பொருளாதார நிலை உயரும்

தனியார் துறையில் வேலை செய்யும் உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள வெளிநாடு சென்று பயிற்சியில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும். புதிய தொழிலுக்கான முதலீடுகளை மேற்கொள்ள உகந்த காலகட்டமாகும். மருத்துவ துறையில் தொழில் செய்பவர்கள் இந்த மாதம் சிறந்த லாபங்களை காண்பார்கள். காதல் உறவில் உள்ளவர்கள் தன் துணையின் மூலம் மகிழ்ச்சி காண்பார்கள். உங்கள் காதல் துணையுடன் பொழுதை போக்க திரைப்படம் மற்றும் பூங்கா போன்ற இடங்களுக்கு அழைத்துச் சென்று மகிழ்வீர்கள். மனம் விட்டுப் பேசுவதன் மூலம் கணவன் மனைவி உறவில் ஒற்றுமை கூடும். உங்கள் பொருளாதார நிலை வாழ்க்கை தரம் உயரும் வகையில் இருக்கும். ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொழிலில் உள்ளவர்கள் நல்ல லாபங்களை எதிர்பார்க்கலாம். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள். ஆசிரியர் மற்றும் பெற்றோர்களின் பாராட்டை பெறுவார்கள். தொண்டை அல்லது கழுத்துப் பகுதியில் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் தேகபயிற்சி மற்றும் சரிவிகித உணவு மூலம் உங்கள் தேக ஆரோக்கியத்தை சீராக வைத்துக் கொள்ள முடியும். வீட்டில் உள்ள பெரியவர்களின் உடல்நலனில் அக்கறை தேவை.

# கும்பம்



74%

## பங்கு வர்த்தகத்தில் லாபம் கிடைக்கும்

உத்தியோகம் செய்யும் இடத்து சூழல் உங்களுக்கு அனுகூலமாக இருக்கும். உத்தியோகம் செய்யும் இடத்தில் புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். வியாபாரம் செய்பவர்களின் வருமானம் அதிகரிக்கும். ஆயத்த ஆடை ஏற்றுமதி தொழில் செய்பவர்களுக்கு வெளிநாட்டு வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். காதல் உறவில் உள்ளவர்கள் தன் துணை மூலமாக ஆதாயம் பெறுவார்கள். கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை நிலவும். அன்னியோன்யம் பெருகும். உங்கள் கடந்த கால முதலீடுகள் மூலம் தன லாபம் ஏற்படும். வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குதல் போன்ற விஷயங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள். வெளிநாட்டு ஏற்றுமதி தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களும் கணிசமான வருமானம் பெறுவார்கள். மாணவர்களின் மனதில் பதட்ட நிலை காணப்படும். மாணவர்கள் அதிக முயற்சி எடுத்து கவனமுடன் படிக்க வேண்டும். உங்கள் ஆரோக்கியத்தில் சிறிது கவனம் தேவை. சுவாசம் மற்றும் நுரையீரல் சம்மந்தப் பட்ட பிரச்சனைகள் வரலாம். தினமும் மூச்சுபயிற்சி செய்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை நன்றாக வைத்துக்கொள்ள இயலும். தாயாருக்கு கண் சம்மந்தப்பட்ட பிரச்சனை ஏற்பட வாய்ப்பு உள்ளது.

# மீனம்



67%

## சொத்து சேர்க்கைக்காக சுப விரயம்.

உத்தியோகத்தில் உள்ள தங்களின் கருத்துக்களை மேலதிகாரிகளிடம் தெரிவிப்பதன் மூலம் மேலதிகாரிகளின் பாராட்டுதலை பெறுவீர்கள். நீங்கள் உணவு சம்மந்தப்பட்ட துறைகளில் தொழில் செய்பவர் என்றால் தொழிலில் நல்ல லாபம் கிடைக்கும். இறக்குமதி தொழில் சார்ந்த வெளிநாட்டு பயணங்கள் உங்களுக்கு அதிக வாடிக்கையாளர்களை பெற்றுத்தரும். காதல் உறவில் உள்ள உங்கள் மனதில் அன்பு மலரும். அன்பான வார்த்தைகள் மற்றும் காதல் துணையின் மீது காட்டும் அக்கறையும் தங்கள் காதல் துணையை கவரும். திருமணமான தம்பதிகள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து செல்வது உங்கள் வாழ்க்கைத் துணை மற்றும் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். இசை, மற்றும் நடனம் போன்ற படைப்பு மற்றும் கலைத் திறன் தொடர்புடைய துறையில் இருப்பவர்கள் சாதனைகளைப் புரிவார்கள். அவர்களின் பொருளாதார நிலை உயரும். வீடு, வண்டி போன்றவைகளை வாங்கும் வகையில் சுபச்செலவுகள் ஏற்படும். மாணவர்கள் கடுமையாக உழைத்துப் படிப்பதன் மூலம் கல்வியில் வெற்றி பெறுவார்கள். உங்கள் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனமுடன் இருக்க வேண்டும். சரிவிகித உணவு உண்பதன் மூலமும் போதுமான அளவு நீர் அருந்துவதன் மூலமும் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்திக் கொள்ள முடியும்.